## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
## கொள்கை விளக்கக் குறிப்புகள் 2011–2012

### 1. முன்னுரை

"அடித்தளத்திலிருந்து உருவாக்குவதே மிகச் சிறந்த, விரைவான மற்றும் செயல்திறன் மிக்க வளர்ச்சியாகும். ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு பெற்ற குடியரசாக மாற வேண்டும். அதற்கு துணிவுமிக்க தீர்மானங்கள் அவசியமில்லை. மாறாக, மனத்துணிவும், கூட்டாண்மை சார்ந்த, அறிவுப்பூர்வமான பணியே தேவையாகும்."

– காந்தியடிகள்.

மக்கள் நலத்தைப் பேணுகின்ற மாநிலமான தமிழகத்தில், அரசின் முயற்சிகள் அனைத்தும் ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களின், சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்தை நோக்கியே அமைந்துள்ளன. கிராமப்புறங்களில் மக்கள் பங்கேற்புடன் கூடிய சமூக, பொருளாதார வளர்ச்சியே ஊரக வளர்ச்சியின் நோக்கமாகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, ஊரக வளர்ச்சி என்பது அடிப்படை வசதிகளையும், தரமான சேவைகளையும் சிறந்த முறையில் கிராமப்புற மக்களுக்கு அளிப்பதன் மூலம் அவர்களின் பொருளாதார வளர்ச்சி,



சமூக நீதி மற்றும் வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை மேம்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

ஊரகப் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்துவது, சமுதாயத்திற்கு தேவையான சேவைகளை அளிப்பது, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவது போன்றவையே அரசின் அடிப்படை நோக்கமாகும். "வறுமை ஒழிப்பு" மற்றும் "கிராமப்புற மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்குதல்" ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே ஊரக வளர்ச்சித் திட்டங்கள் அமைகின்றன. இந்த அரசின் தொடர் முயற்சிகள், வறுமையை ஒழித்துத் தரமான வாழ்விற்குத் தேவையான அடிப்படைகளை நிர்ணயம் செய்யும்.

மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்கு, தற்போதைய நிலையில் கிராம ஊராட்சிகளே, ஊரக வளர்ச்சித் திட்டங்களை வடிவமைத்துச் செயல்படுத்துவதற்கான அலகாக உள்ளன. ஆனால், ஊரகப்பகுதி மக்கள் இந்த திட்டங்கள் குக்கிராமங்கள் அளவில் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டால்தான் அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் கிடைக்கும் என்று கருதுகின்றனர். மக்களின் எதிர்பார்ப்பிற்கிணங்க, இந்த அரசானது, ஊரகப் பகுதிகளுக்கான திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தினை குக்கிராம அளவில் எடுத்துச் செல்ல முடிவு செய்துள்ளது.

தமிழ்நாட்டில், மொத்தமுள்ள 12,620 கிராம ஊராட்சிகளில் 96 கிராம ஊராட்சிகள், நகராட்சி/மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள 12,524 ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ளதால், குக்கிராம அளவிலான திட்டமிடுதலே ஊரக மற்றும் நகர்ப்புற இடைவெளியினைக் குறைப்பதற்கு வழிவகை செய்யும். மேலும், தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் நகர்ப்புறத்தை நோக்கிய இடப்பெயர்வு அதிகரித்துள்ளது. இதைத் தடுப்பதற்கு, நகர்ப்புறங்களில் உள்ள வசதிகளை ஊரகப்பகுதிகளில் ஏற்படுத்தித் தருவதே தீர்வாக அமையும். எனவே, இந்த அரசு, குக்கிராம அளவில் திட்டமிட்டு, அடிப்படைத் தேவைகளைக் கண்டறிந்து நிறைவேற்றும் வகையில் ஒரு புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளது. இது ஊரகத் திட்டமிடுதல் மற்றும் செயலாக்கத்தில் ஒரு அடிப்படை மாற்றமாகக் கருதப்படும். புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டமானது "தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்" (THAI) என அழைக்கப்படும்.

குறைந்த வருவாயுள்ள வீடற்ற ஏழை மக்களுக்கு வீட்டு வசதி என்பது பெரும் சவாலாகவே இருக்கின்றது. நாட்டிலேயே முதன்முறையாக 300 சதுரஅடி பரப்பளவுள்ள இலவச வீடுகளைத் தகுதியுள்ள கிராமப்புற மக்களுக்கு வழங்கும் புதிய திட்டத்தினை இந்த அரசு அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டம், ஊரகப்பகுதியில் வாழும் மக்களின்



வாழ்க்கைத் தரத்தையும் வாழ்வாதாரத்தையும் நிச்சயம் மேம்படுத்தும். குறைந்த செலவிலான கட்டுமான முறை, நவீனக் கட்டுமான முறை மற்றும் வீடுகளுக்கு சூரிய சக்தி விளக்குகள் போன்ற பசுமை தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி இவ்வீடுகள் கட்டப்படும்.

வறுமை ஒழிப்பே சுதந்திர இந்தியாவின் முக்கியப் பிரச்சினையாக உள்ளது. மனிதனின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் சுகாதார வசதி போன்றவை சமுதாயம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அளவில் நிறைவு செய்யப்படவில்லை. ஊரகப்பகுதி மக்களின் இயலும் திறனை அதிகரிக்க தேவையான அளவில் அரசின் உதவியோடு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வறுமை குறைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்தும், 2005–ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, வருடத்தில் 100 நாட்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வேலைவாய்ப்பினை உறுதி செய்யும் திட்டமான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், வறுமைக் குறைப்பில் குறிப்பிடத்தக்க அளவில் தீர்வு காண முக்கியப் பங்காற்றியுள்ளது.

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை இயற்றி, சட்ட வடிவமாக்கி, உள்ளாட்சி நிர்வாகத்தை உருவாக்கிய குறிப்பிடத்தக்க பெருமை இந்த

அரசுக்கு உண்டு. சமூக நீதியையும், திறமையான உள்ளாட்சி நிர்வாகத்தையும் இணைத்துச் செயல்படுத்தும் விதமாக, ஊராட்சிகளுக்குப் பல்வேறு பொறுப்புகளும், அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளை அரசியல் அதிகாரமிக்க அமைப்புகளாகவும், சுயசார்புள்ள ஜனநாயக அமைப்புகளாக ஏற்படுத்திடவும் அவற்றைத் திட்டமிடுதல் மற்றும் திட்டச் செயல்பாடுகளுக்கான முன்னோடி அமைப்புகளாக மாற்றவும் தமிழக அரசு வழிவகை செய்துள்ளது. தற்போதைய உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம், அக்டோபர் 24, 2011 இல் முடிவடைவதால், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு உரிய காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தும். மேலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கும் வகையிலும், ஆற்றல் வாய்ந்த முடிவுகள் எடுப்பதற்கான கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையிலும், உயர்நிலைக் குழு ஒன்று இந்த அரசால் அமைக்கப்படும்.

மனித வாழ்வை மேம்படுத்தி முன்னோக்கிச் செலுத்திட ''எரிசக்தி'' இன்றியமையாததாகும். மனிதகுலத்தின் முன்னேற்றமும் எரிசக்திப் பயன்பாடும் ஒன்றோடொன்று நேரடி வீதத்தில் தொடர்பு கொண்டவைகளாகும். சமீபகாலமாக, மக்கள்தொகைப் பெருக்கம், வாழ்க்கைத்தர மேம்பாடு, தொழில்மயமாக்கம் போன்ற காரணங்களினால் எரிபொருள் பயன்பாடு



பன்மடங்கு அதிகரித்துள்ளதால், இயற்கையிலேயே குறைவின்றிக் கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை மாற்று எரிசக்தியாக பயன்படுத்துவது அவசியமாகிறது. எரிசக்திப் பயன்பாடு மற்றும் பராமரிப்புச் செலவினைக் குறைக்கும் வண்ணம், இந்த அரசு, தற்போதைய தெருவிளக்குகளை, சூரிய சக்தி மூலம் எரியும் விளக்குகளாக மாற்றி அமைத்திட உத்தேசித்துள்ளது. மேலும், புதிதாகக் கட்டப்படவுள்ள பசுமை வீடுகளிலும் சூரிய சக்தி விளக்குகள் பொருத்தப்பட உள்ளன.

தீங்கு ஏற்படுத்தும் கழிவுப்பொருட்களுடன் மனிதனுக்கு ஏற்படும் தொடர்பைத் தடுத்து, அதன்மூலம் நலமான வாழ்வை ஏற்படுத்துவதே சுகாதாரமாகும். ''மனிதக் கழிவினைப் பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்கான வசதிகளை அளித்தலே சுகாதாரம் எனப்படும்'' என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. போதிய அளவில் சுகாதாரமின்மை நோய்கள் ஏற்படுவதற்கான முக்கியக் காரணமாகும். சுகாதார மேம்பாட்டின் மூலம் குறிப்பிடத்தக்க விளைவுகளை, தனிமனித மற்றும் சமூக வாழ்வில் ஏற்படுத்த முடியும். திட மற்றும் திரவக் கழிவுகளை சரியான முறையில் அகற்றுவதும் சுகாதாரத்தின் முக்கிய அம்சமாகும். பாதுகாக்கப்பட்ட குடிநீர், தனிநபர் மற்றும் பொது சுகாதார வசதிகளை அளித்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. பழுதடைந்த நிலையிலுள்ள அனைத்து மகளிர் சுகாதார

வளாகங்களும் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்குக் கல்வி அடிப்படையானதாகும். இளம் வயதினர், அறிவு, ஒழுக்கம் மற்றும் உடல் வலிமையினை வளர்த்துக்கொள்ளும் இடமாகப் பள்ளிகள் திகழ்கின்றன. எனவே, மாணவர்களின் வளமான எதிர்காலத்திற்கான நல்ல சூழலை ஏற்படுத்திடும் வகையில், பள்ளிகளில் போதிய அடிப்படை வசதிகளை அமைத்திட இந்த அரசு முன்னுரிமை வழங்கும்.

நவீன உலகில், தகவல் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம் மற்றும் அரசுத் துறைகளுக்கிடையேயும் பிற அமைப்புகளோடும் விரைவாகவும், தரமான முறையிலும் தகவல் பரிமாற்றம் செய்வதற்குக் கணினியின் அவசியத்தினை இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, ஊரக வளர்ச்சித்துறையைச் சார்ந்த அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இணையதள வசதியுடன் கூடிய கணினி வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும்.

பல்வேறு தரப்பினர் உரிமை கொண்டாடினாலும், இந்த அரசுதான், கல்வி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்ட ஒட்டுமொத்த மகளிர் மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாடு நிறுவனத்தை அமைத்தது. ஆண், பெண் பேதமில்லா



நிலையினை உறுதிப்படுத்திட இவ்வரசு முனைப்புடன் செயல்படும். மகளிர் மேம்பாட்டு நிறுவனமானது தற்போது மாபெரும் ஒரு இயக்கமாக வளர்ச்சியடைந்து மகளிருக்குப் பெருமளவில் அதிகாரமளித்துள்ளது.

சமூகத்தில் மிகவும் பாதிப்புக்குள்ளாகும் நிலையிலுள்ள வறியோரிலும் வறியோரை முக்கிய இலக்காகக் கொண்டு அப்பகுதி மக்கள் மூலமாகவே வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தத்தக்க வகையில், "புதுவாழ்வு" எனும் திட்டத்தினை இந்த அரசு 2005 நவம்பர் மாதம் தொடங்கியது. இத்திட்ட செயலாக்கத்தினை கூடுதல் நிதி ஆதாரத்துடன் மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

கடந்த 2004 டிசம்பர் 26–ஆம் நாள் ஆழிப்பேரலை, தமிழக கடற்பகுதியில் பேரழிவினை ஏற்படுத்தியபோது, இவ்வரசு தேவையான அனைத்து ஆதாரங்களையும் திரட்டி கடற்கரையோரம் வாழும் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் நிரந்தர நிவாரண உதவிகளைச் செய்தது. அந்நேரத்தில் தமிழக அரசால் எடுக்கப்பட்ட கடினமான முயற்சிகள் அகில உலக அளவில் பாராட்டப்பட்டன. மேலும், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்களை அணுகி நிதி ஆதாரத்தினைப் பெற்று, ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டோர் மட்டுமின்றி கடற்கரையோரம் வசிக்கும் அனைத்துத் தரப்பினருக்கும்

நிரந்தரக் குடியிருப்புகளை அமைக்க நடவடிக்கை எடுத்தது. இப்பணிகள் அனைத்தும் 2011–12ல் முடிவடையும்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, கிராமப்புற மேம்பாட்டுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது மட்டுமல்லாது, ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை திறம்பட நிறைவேற்றி சுயஆட்சி அமைப்புகளாக செயல்படவும் உதவி புரிகிறது. குக்கிராம அளவில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தி சுகாதாரத்தினை மேம்படுத்தி, இயற்கை வளங்களைக் காத்து, கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்து, வறுமையை அகற்றி வளமான தமிழகத்தை உருவாக்க இந்த அரசு உறுதி பூண்டுள்ளது.

## 2. ஊராட்சி நிர்வாகம்

தமிழ்நாட்டில் உள்ளூர் அரசமைப்புகள் சோழர் ஆட்சிக் காலத்தில் செயல்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் அமைந்துள்ள ஸ்ரீ சுந்தர வரதர் கோவிலில் உள்ள கல்வெட்டுகள் மூலம் கண்டறியலாம். அக்காலத்தில் கிராமக் கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் முறைகள் விரிவாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் பராந்தகச்சோழர்



ஆட்சி செய்த கி.பி.920–ஆம் ஆண்டினைச் சார்ந்ததாகும். இத்தகைய மக்களாட்சி அமைப்பில் கிராமக்குழுக்களின் உறுப்பினர்கள் இரகசியக் 'குடவோலை' முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம அளவில் பொருளாதார மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுத்தி வந்தனர். அவ்வாறான இரகசிய வாக்குப்பதிவே இன்றைய வாக்குப்பதிவு முறையின் அடித்தளமாகும். பெரிய குடம் ஒன்று கிராமத்தின் முக்கியமான பகுதியில் வாக்களிப்பதற்காக வைக்கப்பட்டு, வாக்குரிமை பெற்றோர் தங்களுக்கு விருப்பமான பெயரைப் பனை ஓலைகளில் எழுதி அக்குடத்தில் போடுவர். இறுதியாகக் குடத்தில் உள்ள ஓலைகளை வெளியில் எடுத்து, வேட்பாளர்கள் பெற்ற வாக்குகள் எண்ணப்பட்டு, அதிக வாக்குகள் பெற்றவரே கிராமக் குழுவின் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர். கிராமக் குழுவின் உறுப்பினராகப் போட்டியிடுவதற்கான தகுதிகள் மற்றும் தகுதியின்மைக்கான விதிகள் வகுக்கப்பட்டிருந்தது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

ஆங்கிலேயர்களின் வருகைக்குப்பின் உள்ளூர் அரசமைப்பு முறை நலிவுற ஆரம்பித்ததோடு நவீனத் தொழில்மயமானதால் அதிக அளவில் வேலைவாய்ப்பில்லாத நிலை ஏற்பட்டது. இவை, உள்ளூர் அரசமைப்பின் அடித்தளத்தையே சீர் குலைத்தது. எனினும்,

ஆங்கிலேயர்களால் அவர்களுக்கு ஏற்றவாறான உள்ளூர் அரசமைப்பு முறை கொண்டு வரப்பட்டது.

1854–ஆம் ஆண்டு ‘மாவட்ட போர்டு நிதி’ ஏற்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, 1871–ஆம் ஆண்டு ஆளுநர் மேயோ என்பவரால் மெட்ராஸ் உள்ளாட்சி நிதிச் சட்டம் கொண்டு வரப்பட்டது. உள்ளாட்சி நிதிக் குழுமங்களும் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 1882–ஆம் ஆண்டு ரிப்பன் பிரபுவால் கொண்டுவரப்பட்ட உள்ளூர் அரசமைப்புத் தீர்மானத்தின் வெளிப்பாடாக 1884–ஆம் ஆண்டு மெட்ராஸ் உள்ளாட்சிக் குழும சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டம், மாவட்ட போர்டுகள், வட்டார போர்டுகள் மற்றும் கிராமங்களின் கூட்டமைப்புகள் ஆகிய மூன்றடுக்கு முறைக்கு வழிவகுத்தது. 1920–ஆம் ஆண்டு இரண்டு சட்டங்களை அரசு கொண்டு வந்தது.

1. 1884–ஆம் ஆண்டு சட்டத்திற்கு பதிலாக சென்னை லோக்கல் போர்டு சட்டம், மற்றும்
2. கிராம ஊராட்சிகள் சட்டம்

சென்னை கிராம ஊராட்சிகள் சட்டத்திற்கு மாற்றாக, சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920 திருத்தியமைக்கப்பட்டு அனைத்து கிராம ஊராட்சிகளும்



1930ல் சென்னை லோக்கல் போர்டு சட்டம் 1920ன் கீழ் கொண்டு வரப்பட்டன. இவ்வாறு உள்ளூர் அரசமைப்புகளில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டாலும், நகராட்சிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் ஆய்வாளர்கள் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளை முழுக் கட்டுப்பாட்டில் அரசு வைத்திருந்தது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், ஊராட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் வகையில் 1950–ஆம் ஆண்டு ‘சென்னை கிராம ஊராட்சிகள் சட்டம்’ கொண்டு வரப்பட்டது. அரசியலமைப்புச் சட்டம் பகுதி IV, பிரிவு 40ல் கிராம ஊராட்சிகளை அமைத்து அவைகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் வழங்க வழிவகை செய்யப்பட்டது. மாவட்ட போர்டுகள், சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றையும் கிராம ஊராட்சிகள், மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய பல்வேறு பணிகளையும் பராமரித்து வந்தன. 1951–ஆம் ஆண்டு மதுரையில் பரிசோதனை முறையில் சில கிராம ஊராட்சிப் பகுதிகளை ஒன்று சேர்த்து மாதிரி ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டது. வளர்ச்சி வட்டாரங்கள் மூலம் உள்ளூர்ப் பகுதி வளர்ச்சிக்காக 1952–ஆம் ஆண்டு மத்திய அரசால் சமுதாய வளர்ச்சி மற்றும் தேசிய விரிவாக்கத்திட்டம் கொண்டு வரப்பட்டது.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட திரு.பல்வந்த்ராய் மேத்தா அவர்கள் தலைமையிலான குழு, மக்களாட்சி பரவலாக்கம் என்ற தத்துவத்தின் அடிப்படையில் ஊராட்சி அமைப்புகளை ஏற்படுத்திடப் பரிந்துரைத்து, 1957ஆம் ஆண்டு சனவரி மாதம் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. பல்வந்த்ராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளாவன:

1. மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் அமைத்தல் மற்றும் அமைப்பு ரீதியிலான ஒருங்கிணைப்பினை மறைமுகத் தேர்தல் முறை மூலம் ஏற்படுத்துதல்.
2. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு கிராம ஊராட்சிகளையும், மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு, ஊராட்சி ஒன்றியங்களையும், மாவட்ட ஊராட்சிகளையும் அமைத்தல்.
3. அனைத்து வகையான திட்டமிடல் மற்றும் வளர்ச்சிப் பணிகளை மூன்றடுக்கு உள்ளாட்சிகளிடம் ஒப்படைத்தல்.
4. ஊராட்சி ஒன்றியங்கள், திட்டங்களைச் செயல்படுத்தும் அமைப்புகளாகவும், மாவட்ட ஊராட்சிகள், ஆலோசனை, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைப்புகளாகவும் செயல்பட வேண்டும்.



5. மாவட்ட ஊராட்சியின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர் இருப்பார்.
6. நியாயமான முறையில் இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்களும் பொறுப்புகளும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.
7. உள்ளாட்சி அமைப்புகள் தங்களது கடமைகளை நிறைவேற்றிட ஏதுவாக போதுமான நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்தல்.
8. வருங்காலங்களிலும் இந்த அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் கிடைக்கும் வகையிலான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

ஆனால், பல்வந்தராய் மேத்தா குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளாத நிலையில், 1958–ஆம் ஆண்டு மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் மற்றும் 1958–ஆம் ஆண்டு மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் கொண்டு வரப்பட்டன. இச்சட்டங்களின் முக்கிய அம்சங்களாவன:

1. வளர்ச்சி வட்டாரங்களுக்குப் பதிலாக, ஊராட்சி ஒன்றியங்களைக் கொண்டு வருதல்
2. மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்.
3. ஆலோசனை வழங்கும் வகையில் மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்துதல்.

4. பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மற்றும் சமூக நலப்பணிகளைச் செயல்படுத்தும் பொறுப்புகளை ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்குதல். ஆயினும், நீதி வழங்கும் அதிகாரம் போன்ற பல அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளிடமிருந்து எடுக்கப்பட்டன.

பல்வந்தராய் மேத்தா குழு, மாவட்ட அளவில், மாவட்ட ஊராட்சியை உள்ளடக்கிய மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்பு முறையினைப் பரிந்துரை செய்த போதிலும், மதராஸ் அரசு, மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சிகளுக்குப் பதிலாக மாவட்ட வளர்ச்சி மன்றங்களை ஏற்படுத்தியது. இதனால் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் என 'இரண்டு அடுக்கு ஊராட்சி முறை' ஏற்படுத்தப்பட்டது. மாவட்ட போர்டுகள் கலைக்கப்பட்டதால் அதற்குப் பதிலாக ஊராட்சி ஒன்றியங்கள் அப்பொறுப்பை ஏற்றுக்கொண்டன. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும், ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பலர் இந்த அமைப்பின் உறுப்பினர்களாகவும் செயல்பட்டு வந்தனர். இவ்வாறாக ஊராட்சி ஒன்றியங்கள், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் முக்கிய அமைப்பாக விளங்கத் தொடங்கின.



73ï வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் 1993, ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 243 ஜி–ன்படி ஊராட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு பொருள்களில் திட்டங்களைச் செயல்படுத்தும் முழுமையான அதிகாரங்களும், பொறுப்புகளும் கிடைப்பதற்கு அதிகமான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அரசியலமைப்புச் சட்டத்தில் 11–வது அட்டவணையில் 29 பொருள்கள் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது. 74–வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 'மாவட்ட திட்டக் குழு' உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

73ï வது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்திற்கு ஒப்ப மாநில அரசுகள் தங்கள் ஊராட்சிச் சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்து புதிய சட்டத்தை இயற்ற வேண்டும். 73–வது அரசியலமைப்புச் சட்டம், உள்ளாட்சி அமைப்பு முறையில் புதிய மற்றும் முக்கியமான பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்தது. அவற்றில் முக்கியானவைகளாக கிராம சபைக் கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல், மூன்றடுக்கு ஊராட்சி முறை ஏற்படுத்துதல், நேரடித் தேர்தலின் மூலம் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப ஊராட்சி அமைப்புகளின்

பதவிகளுக்கு இட ஒதுக்கீடு செய்தல், மூன்றில் ஒரு பங்கிற்குக் குறையாமல் பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்தல், தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு, ஐந்தாண்டுகளுக்கொரு முறை உள்ளாட்சித் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகள் கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாக தேர்தல் நடத்துதல், மாநில சட்டத்தின் மூலம் ஊராட்சிகளுக்கு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்களை அளித்தல், மாநில அரசின் நிதி ஆதாரங்களை நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளித்தல், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாநில நிதி ஆணையம் அமைப்பதன் மூலம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து பரிந்துரை செய்தல் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல் ஆகியவை முக்கிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994–ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 22.4.1994 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி அமைப்புகளில், பல்வேறு முக்கியமான மாறுதல்கள் கொண்டு வரப்பட்டன.

- தமிழ்நாட்டில் மூன்றடுக்கு ஊராட்சி முறை நடைமுறைக்கு வந்தது.



- ‘ஊராட்சி’ என்ற பொதுப்படையான சொல் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புக்களைக் குறிப்பதற்கெனப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பேரூராட்சிகள், நகர்பாலிகா சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கான உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சியின் தலைவர் ஆகியோர், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், மாவட்ட ஊராட்சியின் தலைவர்களும் முறையே ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தலின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக / தனித்தனியாக இயங்கக் கூடியவை. கிராம ஊராட்சியின் தலைவர்கள் ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்கள் அல்ல.
- ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாசாரத்திற்கு ஏற்ப, பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மூன்றில் ஒரு பங்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒதுக்கீடு, 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுழற்சிமுறையில் மாற்றம் செய்யப்படும்.
- மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் தலைவர்கள் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகும். காலியிடம் ஏற்பட்ட 6

மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட்டு பதவிகள் நிறைவு செய்யப்படும்.

- தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- மாநில நிதி ஆணையம் ஐந்தாண்டுக்கு ஒரு முறை அமைக்கப்பட்டு வருகிறது.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும், மாவட்டத் திட்டக் குழு ஏற்படுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டக்குழு, ஊராட்சி மற்றும் நகராட்சிகளின் வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்ட அளவில் திட்டத்தினைத் தொகுத்திடும்.

## 2.1 கிராம சபை

கிராம ஊராட்சியிலுள்ள அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய அமைப்பு கிராம சபை ஆகும். குறிப்பிட்ட அதிகாரங்களும், பொறுப்புகளும் கிராம சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு கிராமசபைக் கூட்டங்களுக்கு இடையே உள்ள காலம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் இருக்கும் வகையில் சட்ட ரீதியாக கிராம சபைக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டும். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஆண்டில் குறைந்தது நான்கு முறை, அதாவது ஜனவரி 26, மே 1, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக்கூட்டம் நடத்த தமிழ்நாடு அரசு



ஆணையிட்டுள்ளது. இது தவிர, தேவையின் அடிப்படையில் விதிமுறைகளுக்குட்பட்டு கிராம சபைக் கூட்டம் நடத்தலாம்.

கிராம சபை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றுகின்றன.

1. கிராம வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
2. கிராம ஊராட்சியின் வரவு-செலவு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்குதல்.
3. தணிக்கை அறிக்கைக்கு ஒப்புதல் வழங்குதல்
4. திட்டப்பணிகள் செயல்பாட்டின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல்.
5. பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்குதல்.
6. கிராமத்தில் உள்ள பல்வேறு இன மக்களிடையே சமுதாய மற்றும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவித்தல்.

## 2.2 மாநிலத் தேர்தல் ஆணையம்

73–வது இந்திய அரசியலமைப்பு திருத்தச்சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239ன் படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு

மாநிலத் தேர்தல் ஆணையம் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் சனநாயகத்தை வலுப்படுத்தும் விதமாக சுதந்திரமான மற்றும் சுய சார்புடைய அமைப்பாக 1994–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. ஊராட்சிகளில் வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் ஆகிய அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் முறையாக தேர்தலை நடத்துதல் ஆகிய பணிகளைக் கண்காணித்தல், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல், ஆணையரைத் தலைமையாகக் கொண்ட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 239 உட்பிரிவு (3)–ன்படி தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு, ஆணையர் மற்றும் நிர்வாக பணியாளர்களும் நியமிக்கப்படுவார்கள். மாநில தேர்தல் ஆணையரின் பணி விதிகள், பதவிக்காலம் ஆகியவை குறித்த விதிகளை ஆளுநர் நிர்ணயிப்பார். ஆணையர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார். மேலும், இப்பதவியினை ஆறு ஆண்டுகளுக்கு மிகாமல் இரண்டு முறை நீட்டிப்பு செய்யலாம். ஆனால் மாநிலத் தேர்தல் ஆணையரை அவருடைய பதவிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு நீக்குவதாக இருந்தால், உயர் நீதிமன்ற நீதிபதியை நீக்கும் வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். மேலும், மாநிலத் தேர்தல் ஆணையர் நியமிக்கப்பட்ட பின்னர்



அவருடைய பணி விதிகள் தொடர்பான நிபந்தனைகள் எதுவும் அவரைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கக் கூடாது.

## 2.3 தேர்தல்கள்

தற்போதைய ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் அக்டோபர் 24, 2011ல் முடிவடைய உள்ளது. மேலும் சாதாரணத் தேர்தல்கள் அக்டோபர் 2011ல் நடைபெற உள்ளது.

அக்டோபர் 2006ல் நடைபெற்ற தேர்தலில், மூன்றடுக்கு ஊராட்சிகளின் பதவிகள் மற்றும் தலைமைப் பதவியிடங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 1. | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2. | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3. | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4. | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5. | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 |
| 6. | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | 385 |
| 7. | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 |

## 2.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஊராட்சி அமைப்புகளின் பல்வேறு பதவியிடங்களுக்கு மக்கள் தொகை அடிப்படையில் உரிய இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும். இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டக்கூறு 243 D–ன்படி ஊராட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கான பதவியிடங்களுக்கு இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை செய்யப்பட வேண்டும். அதில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும் எனவும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினப் பெண்களுக்கு ஒதுக்கப்படும் எண்ணிக்கையையும் உள்ளடக்கி மொத்த ஒதுக்கீட்டில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திட வேண்டும். இதற்காக தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, உட்பிரிவுகள் 11, 20, 32 மற்றும் 57 மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை) விதிகள் 1995 ஆகியவை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீடு செய்வது குறித்துத் தெளிவாக விளக்குகிறது.



### 2011–ஆம் ஆண்டு ஊரக உள்ளாட்சித் தேர்தலுக்கான பெண்கள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இட ஒதுக்கீடு விபரம்

| வ. எண் | இட ஒதுக்கீடு வகை | மொத்த பதவி இடங்கள் | மகளிருக்கான ஒதுக்கீடு | | ஆதிதிராவிட ருக்கான ஒதுக்கீடு | | பழங்குடியின ருக்கான ஒதுக்கீடு | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | **31** | **11** | **35 %** | **7** | **24 %** | **0** | **0%** |
| 2 | ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள் | **385** | **140** | **36 %** | **87** | **23 %** | **4** | **1%** |
| 3 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | **12,524** | **4,289** | **34 %** | **3,136** | **25 %** | **156** | **1%** |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | **655** | **228** | **35 %** | **154** | **24 %** | **8** | **1%** |
| 5 | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் | **6,471** | **2,286** | **35 %** | **1,526** | **24 %** | **64** | **1%** |
| 6 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | **99,333** | **33,121** | **33 %** | **25,360** | **26 %** | **1,039** | **1%** |

எதிர் வரும் ஊரக உள்ளாட்சித் தேர்தலைச் சிறப்பாக நடத்திட ஏதுவாக 903 தற்காலிகப் பணியிடங்களுக்கு அனுமதி வழங்கி இதற்கான செலவினமாக ரூ.9.38 கோடி ஒதுக்கீடு செய்து அரசு ஆணையிட்டுள்ளது.

உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்காக அரசு கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

| வ.எண் | பதவியின் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (அ) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்ககம் : | | |
| 1. | உதவி இயக்குநர் | 1 |
| 2 | வட்டார வளர்ச்சி அலுவலர் | 1 |
| 3 | உதவியாளர் | 3 |
| 4 | கணினி இயக்குபவர் | 1 |
| | மொத்தம் | **6** |
| (ஆ) மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (வளர்ச்சிப் பிரிவு) : | | |
| 1. | நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) | 31 |
| 2. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 32 |
| 3. | உதவியாளர் | 32 |
| 4. | கணினி இயக்குபவர் | 32 |
| | மொத்தம் | **127** |
| (இ) ஊராட்சி ஒன்றியங்கள் : | | |
| 1. | உதவியாளர்கள் | 385 |
| 2. | கணினி இயக்குபவர் | 385 |
| | மொத்தம் | **770** |
| | பெருமொத்தம் (அ + ஆ + இ ) | **903** |

## 2.5 மாநில நிதி ஆணையம்

**73–**வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் **1994**, பிரிவு **198**ன்படி, தமிழ்நாடு மாநில நிதி ஆணையம் அமைத்திட வழி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் முதல் மாநில நிதி



ஆணையம் **1994**ல் அமைக்கப்பட்டு, கீழ்க்கண்ட பொருள்களை ஆய்வு செய்து அரசிற்கு பரிந்துரை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

1. அரசால் விதிக்கப்படும் வரி, தீர்வை, சுங்கம் மற்றும் கட்டணங்கள் மூலம் பெறப்படும் மொத்த வருவாயில் மாநிலத்திற்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்து வழங்கும் முறை.
2. ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டிய வரிகள், தீர்வை, சுங்கங்கள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை நிர்ணயித்தல்.
3. மாநிலத்தின் மொத்தத் தொகுப்பு நிதியிலிருந்து ஊராட்சிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மானியங்கள்.
4. ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள்.

தமிழகத்தில் நான்காவது மாநில நிதி ஆணையம் டிசம்பர் **2009**ல், அரசாணை (நிலை) எண்.**549**, நிதித்துறை, நாள்.**1.12.2009**ன்படி ஏற்படுத்தப்பட்டது. இதன்படி, **1.4.2012** முதல் ஐந்தாண்டுகளில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுடைய நிதி ஆதாரங்களை ஆய்வு செய்து தேவையான பரிந்துரைகளை **2011–**ஆம் ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் அறிக்கையாக அரசுக்கு அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தற்காலிக அறிவிக்கையின்படி ஊரக மற்றும் நகர்ப்புற மக்கள்தொகை விகிதாச்சாரம், தமிழ்நாட்டில் 52:48 என உள்ளது. இதனால், தற்போது உள்ள மாநில நிதி வருவாய்ப் பகிர்வான 58:42 என்ற விகிதாசாரத்தை மாற்றி, நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு அதிக ஒதுக்கீடு கிடைக்கக் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நான்காவது மாநில நிதி ஆணையத்திடம் நடைமுறையில் உள்ள விகிதாச்சாரப் பகிர்வினையே தொடர வேண்டிய அவசியம் குறித்தும், விகிதாச்சார மாற்றத்தால் நகர்ப்புற மற்றும் ஊரக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் இடைவெளி மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது எனவும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தவறினால், அவர்கள் அதிக அளவில் நகர்ப்புறங்களுக்கு இடம் பெயரும் அபாயம் ஏற்படலாம் எனவும், அதுவே நகராட்சிகளுக்குப் பெரும் நிதிச்சுமையாக மாறும் எனவும் தெரிவித்துள்ளது.

2011–12–ஆம் நிதியாண்டில் மாநில நிதி ஆணைய மானிய உத்தேச ஒதுக்கீடு ரூ.3,053 கோடியாகும்.

## 2.6 மாவட்டத் திட்டக் குழு

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 241–ன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்டத் திட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்டத் திட்டக்குழுவின் தலைவராக மாவட்ட ஊராட்சித் தலைவரும், துணைத்தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவரும் இருப்பர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விகிதாசாரத்திற்கேற்ப உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். மாவட்டத் திட்டக்குழுவின் பணிகள் பின்வருமாறு:



1. மாவட்டப் பரவலாக்கப்பட்ட திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான மாவட்ட அளவிலான வள ஆதாரங்கள் விபரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் நாளது தேதிவரையான விபரங்களைப் பெறுதல்.
2. தேவைகளைக் கண்டறிந்து முன்னுரிமை அளித்தல்
3. மாவட்டத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கொள்கைகள், திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை அளித்தல்.
4. மாவட்டத்தில் உள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தயாரித்த திட்டங்களை ஒருங்கிணைத்து மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல். மாவட்டத் திட்டக்குழு தயாரிக்கும் வளர்ச்சித் திட்டம் மாநிலத் திட்டக்குழு தயாரிக்கும் மாநில அளவிலான திட்டத்திற்கு உதவியாக இருக்கும்.
5. மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைக் கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

6. வளர்ச்சித் திட்டங்களில் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.
7. மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைகளை மாநில அரசுக்கு வழங்குதல்.
8. மாநில அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் இதர பணிகளை நிறைவேற்றுதல்.

## 2.7 மத்திய நிதி ஆணையம்

13–வது மத்திய நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் படி மத்திய அரசு 2010ï 11 முதல் 2014–15–ஆம் ஆண்டு வரையிலான 5 ஆண்டுகளுக்கு ரூ.2,016.30 கோடி நிதியினை அடிப்படை மானியமாக ஒதுக்கீடு செய்துள்ளது. 2010–11–ஆம் ஆண்டுக்கான அடிப்படை மானியமாக ரூ.287.10 கோடி மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. இந்த நிதி கீழ்க்கண்ட பணிகளை நிறைவேற்றுவதற்காக கிராம ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

- குடிநீர் விநியோகம், தெரு விளக்குகள் மற்றும் சுகாதார வசதி, இவை தொடர்பான இயக்கம் மற்றும் பராமரிப்பு.
- குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்குகளுக்கான மின் கட்டணம் செலுத்துதல்.



2011–12–ஆம் ஆண்டிற்கு ரூ. 333.00 கோடி, 13–வது மத்திய நிதி ஆணைய அடிப்படை நிதி மானியமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி விடுவிப்பினை எதிர்நோக்கித் தமிழ்நாடு அரசு, முதல் தவணையாக ரூ.166.50 கோடி நிதியினை அரசாணை (நிலை) எண் 43, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள் 20.07.2011ன் படி கிராம ஊராட்சிகளுக்கு விடுவித்துள்ளது. 2011–12 முதல் 2014–15 வரையான நான்கு ஆண்டிற்கான செயல் திறன் சார்ந்த மானியமாக ரூ.1,067.50 கோடி தமிழ்நாட்டில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 2.8 கிராம ஊராட்சி

கிராம ஊராட்சி என்பது, அதற்கென உள்ள கிராமங்களை உள்ளடக்கி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஊராட்சிகளின் ஆய்வாளர் அறிவிக்கையில் குறிப்பிட்ட தேதியிலிருந்து அமைக்கப்படும். சிறந்த நிர்வாகம் என்ற அடிப்படையில் உரிய அறிவிக்கையின் வாயிலாக கிராம ஊராட்சிகளைப் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்தலாம். கிராம ஊராட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை (தலைவர் நீங்கலாக) மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சிகளின் ஆய்வாளரால் அறிவிக்கை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஊராட்சியும் உரிய காரணங்களால் கலைக்கப்படாதவரை ஒவ்வொரு சாதாரணத் தேர்தலுக்குப்பின்னர் 5 ஆண்டு காலம்

செயல்பாட்டில் இருக்கும். ஆயினும், குறிப்பிட்ட சூழ்நிலைகளில் ஊராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனித்திட தனி அலுவலர்கள் நியமிக்கப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை விவரங்கள் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சியின் தலைவர், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர் ஆவார். ஒவ்வொரு கிராம ஊராட்சியும் கீழ்க்கண்ட குழுக்களை அமைத்திட வேண்டும்.

1. நியமனக் குழு
2. வளர்ச்சிக் குழு
3. வேளாண்மை மற்றும் குடிநீர் வழங்கல் குழு
4. பணிகள் குழு
5. தற்காலிகக் குழு

**1994** ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு **110** ன் படி கீழே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள வேண்டியது கிராம ஊராட்சிகளின் முக்கியக் கடமையாகும்.

1. அனைத்து கிராமச்சாலைகள், பாலங்கள், சிறுபாலங்கள், தடுப்புச்சுவர்கள் மற்றும் தரைப்பாலங்களை அமைத்தல், பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் (நெடுஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தவிர)
2. பொது இடங்களில் தெரு விளக்குகள் அமைத்தல்.
3. கழிவு நீர்க் வாய்க்கால் அமைத்துக் கழிவுநீரை வெளியேற்றுதல்.
4. தெருக்களை சுத்தம் செய்தல் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
5. பொதுக்கழிப்பிட வசதி ஏற்படுத்துதல்
6. இடுகாடுகள் மற்றும் சுடுகாடுகளை ஏற்படுத்திப் பராமரித்தல்.
7. குடிநீர் வழங்குதல்.
8. அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாகப் பணிக்கக்கூடிய பிற கடமைகள்.

**1994**–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு **111**ன் படி பின்வரும் கடமைகளை ஊராட்சியின் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரங்களைக் கணக்கில் கொண்டும் கிராமத்தில் உள்ள சாலைகளின் இரு பக்கங்களிலும் மரங்கள் நடுதல், தெரு விளக்குகள், சந்தைகள், விழாக்கள், பொருட்காட்சிகள், வண்டிகள் நிறுத்தும் இடங்கள், கால்நடைத் தொழுவங்கள், இறைச்சிக் கூடங்கள், படிப்பகங்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் ஏற்படுத்தி நிர்வகித்தல் போன்றவை.

2.8.1 நிதி வருவாய்

கிராம ஊராட்சிகள் மட்டுமே தங்கள் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பின்வரும் வரிகள், கட்டணங்கள் ஆகியவற்றை விதித்து வசூலிக்க அதிகாரம் பெற்றுள்ளது.

2.8.1.1 வரி வருவாய்

1. வீட்டு வரி
2. தொழில் வரி
3. விளம்பர வரி

2.8.1.2 வரியல்லாத வருவாய்

1. கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம்
2. அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம்
3. சந்தைக் கட்டணம்
4. குடிநீர் கட்டணம்
5. வண்டி நிலையங்களுக்கான கட்டணம்
6. சமூகக் காடுகள் ஏலம்
7. மீன்பாசி குத்தகை
8. 2சி மரப்பட்டா
9. சந்தை மற்றும் பொருட்காட்சிகளிலிருந்து பெறப்படும் வருமானங்கள்
10. படகுக் குழாம் மூலம் பெறப்படும் கட்டணங்கள்
11. அபராதங்கள் மற்றும் தண்டத்தீர்வை .



ஊராட்சி நிலங்களில் வைக்கப்பட்டுள்ள அலைபேசிக் கோபுரங்களுக்கான கட்டணம், கிராம ஊராட்சிச் சாலைகளில் கண்ணாடிக் கம்பி இழை பதித்தலுக்கான கட்டணம், நிலங்களை வகைப்படுத்தல் மற்றும் இதர கட்டணங்களை வசூலித்தல் மூலம் கூடுதல் வருவாயினை ஏற்படுத்தலாம். அதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்பட்ட உள்ளது. இந்தக் குழு, ஊராட்சிகளுக்கு அதிக நிதி ஆதாரங்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிந்து அதற்கான பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கும்.

2.8.2 ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்

ஒருங்கிணைந்த ஒப்படைக்கப்பட்ட வருவாய்களான முத்திரைத்தாள் மீதான வரி மற்றும் கேளிக்கை வரி ஆகியவற்றின் ஒரு பகுதி வருவாய் கிராம ஊராட்சிகள் பெறத் தகுதியுடையனவாகும்.

2.8.3 மானியம்

1. மத்திய நிதி ஆணைய மானியம்: தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மத்திய நிதி ஆணைய மானியம் முழுவதும் குடிநீர் மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.
2. மாநில நிதி ஆணைய மானியம்: ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மாநிலத்தின் மொத்த வரி

வருவாயில் இருந்து ஒதுக்கப்படும் 10 சதவீத நிதியில் ஒதுக்கீடு செய்யப்படும் 58 சதவீத நிதியில், 60 சதவீதம் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது. அதில் குறைந்தபட்ச நிதியாக (Floor amount) ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுத் தனியாகக் கணக்குப் பராமரிக்கப்பட்டு, தெரு விளக்குகள் மற்றும் குடிநீர் வழங்கல் தொடர்பான மின்கட்டணம் செலுத்த வழி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை, மக்கள் தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்காணும் 60 சதவீத நிதியில் 5 சதவீதம் கிராமங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ஏதுவாக, அடிப்படைக் கட்டமைப்புத் தேவைகளை நிறைவு செய்து கொடுப்பதற்கான நிதியாக (Infrastructure Gap Filling Fund) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3. மத்திய அரசு மற்றும் மாநில அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்களுக்காக விடுவிக்கப்படும் வளர்ச்சி நிதி.



2.9 ஊராட்சி ஒன்றியம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும், 5000 மக்கள் தொகை கொண்ட ஊராட்சி ஒன்றிய வார்டுகளை உள்ளடக்கிய வளர்ச்சி வட்டாரங்களாகும். வார்டு உறுப்பினர்கள் நேரடியாக வார்டில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்களால், மறைமுகத் தேர்தலில் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் தேர்வு செய்யப்படுவார்.

| ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஊராட்சிகளின் எண்ணிக்கை | ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 10– மற்றும் அதற்கு குறைவாக | 24 |
| 11–20 | 75 |
| 21–30 | 83 |
| 31–40 | 82 |
| 41–50 | 68 |
| 51 மற்றும் அதற்கு அதிகமாக | 53 |
| மொத்தம் | 385 |

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பில் தரப்பட்டுள்ளது.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), ஊராட்சி ஒன்றியத்தின் செயல் அலுவலர் ஆவார். அவருக்கு உதவியாக நிர்வாகப் பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள பணியாளர்கள் இருப்பார்கள். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 112ன்படி ஊராட்சி ஒன்றியக் குழு மேற்கொள்ளும் பணிகளில் முக்கியமான சில பணிகளின் விவரம் பின்வருமாறு:

1. மத்திய மற்றும் மாநில அரசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
2. ஊராட்சி ஒன்றிய சாலைகள், சிறுபாலங்கள், பாலங்கள், தடுப்புச் சுவர்கள், தரைப்பாலங்கள் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.
3. ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல்.
4. தொற்றுநோய் பரவாமல் இருக்கத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்
5. ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் வரையறுக்கப்பட்ட கண்காட்சி மற்றும் விழாக்கள் நடத்துதல்.
6. ஊராட்சி ஒன்றியச் சந்தைகள்.



1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 114ன்படி பொருளாதார வளர்ச்சி குறித்த திட்டங்கள் மற்றும் இதர செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் செயல்படுத்தும்படி அரசு பணிக்கலாம்.

### 2.9.1 நிதி

1. ஊராட்சி ஒன்றியக் குழு வரிகள் ஏதும் விதிக்க இயலாது.
2. ஊராட்சி ஒன்றியத்திற்கான வருவாய் இனங்களாவன: வரியில்லாத வருவாய், ஒப்பளிக்கப்பட்ட / பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் இனத்தில் ஒரு பகுதி, கட்டணங்கள், வாடகை, அபராதம் மற்றும் தண்டத்தொகை, அரசு மானியங்களான மாநில நிதி ஆணைய மானியம், தாய் சேய் நல விடுதிக்கான மானியம், ஊரக மருந்தக மானியம், சமூகக் கல்வி மானியம், மகளிர் மற்றும் குழந்தைகள் நல மானியம், உள்ளூர் பாசன நிதி மற்றும் மத்திய மாநில அரசுத் திட்ட மானியங்கள்.
3. மாநில நிதி ஆணைய மானியம், மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் 10 சதவீத நிதியில், 58 சதவீதம் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதில், 32 சதவீதம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு

மாதமும் விடுவிக்கப்படுகிறது. சீரான நிதி கிடைக்கும் வகையில் ரூ.30 லட்சம் குறைந்தபட்ச நிதியாக (Floor Amount) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதித்தொகை, மக்கள் தொகை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விடுவிக்கப்படுகிறது.

### 2.10 மாவட்ட ஊராட்சி

1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 24ன்படி ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் மாவட்ட ஊராட்சி அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட ஊராட்சியும், உத்தேசமாக 50,000 மக்கள் தொகைக்கு ஒரு வார்டு என்ற அடிப்படையில் பல வார்டுகளைக் கொண்டுள்ளது. வார்டு உறுப்பினர்கள் மக்களால் நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்களால் மறைமுகத் தேர்தல் மூலம் மாவட்ட ஊராட்சித் தலைவர் தேர்வு செய்யப்படுகிறார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில், உதவி இயக்குநர் நிலையில் ஒரு அலுவலர் செயலராக ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு உறுதுணையாகப் பணியாளர்கள் உள்ளனர். மாவட்ட ஊராட்சி, பின்வரும் நிலைக்குழுக்களை அமைக்கலாம்.



1. உணவு மற்றும் வேளாண்மை
2. தொழிற்சாலைகள் மற்றும் தொழிலாளர்கள்
3. பொதுப்பணிகள்
4. கல்வி
5. மது விலக்கு உள்ளிட்ட சுகாதாரம் மற்றும் நலத் திட்டங்கள்.

இக்குழுக்கள் மாவட்ட ஊராட்சியில் ஒப்படைக்கப்படும் பணிகளைச் செயல்படுத்தும். இக்குழுக்கள் தவிர, மாவட்ட ஊராட்சியால் கூடுதல் நிலைக் குழுக்களைத் தேவையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு நிலைக் குழுவும், தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்வு செய்திட வேண்டும். மாவட்ட ஊராட்சித் தலைவர், மேற்படி நிலைக் குழுக்களின் பதவி வழி உறுப்பினர் ஆவார். மாவட்ட ஊராட்சியின் கடமைகளாவன:

1. மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.
2. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் நிர்வாக அறிக்கையினை ஒருங்கிணைத்தல் மற்றும் மாவட்டத்தின் ஆண்டறிக்கையைத் தயாரித்தல்.
3. விவசாயம், நிலவள மேம்பாடு, கால்நடை பராமரிப்பு, பால்வளம், கோழிப்பண்ணை,

மீன்வளம் மற்றும் கிராமத் தொழில்கள் ஆகியவற்றைத் திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல்.

4. ஊரக வீட்டு வசதிக்கான திட்டமிடல் மற்றும் ஆய்வு செய்தல், குறிப்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு.
5. பெரிய அளவிலான குடிநீர் திட்டப் பணிகளைக் கண்டறிதல்.

### 2.10.1 நிதி

1. மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஏதும் இல்லை.
2. மாநில நிதி ஆணைய மானியம் மற்றும் மாவட்ட ஊராட்சிக்குச் சொந்தமான நிலம் மற்றும் கட்டிடங்கள் வாயிலாகக் கிடைக்கும் வருவாய் ஆகியவை முதன்மை வருவாய் இனங்களாகும்.
3. மாநில நிதி ஆணைய மானியம் – மாநில சொந்த வரி வருவாயில் 10 சதவீத ஒதுக்கீட்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் 58 சதவீத நிதியில், 8 சதவீதம் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த மானியம் ஒவ்வொரு மாதமும் மாவட்ட ஊராட்சிகளுக்கு விடுவிக்கப்படுகிறது.



## 2.11 ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியினை ஒருங்கிணைத்தல்

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத்தாள் வரி , கேளிக்கை வரி ஆகியவற்றில் இருந்து பெறப்படும் வருவாய் நிதியினை மாநில அளவில் ஒருங்கிணைத்து ஊராட்சிகளுக்குப் பிரித்து வழங்க அரசு ஆணையிட்டுள்ளது (சமூகக் காடுகள் வருவாய் மற்றும் கனிம வளங்களுக்கான குத்தகை நீங்கலாக). 2010 –11 ம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயில் மூன்றில் இரண்டு பங்கு திட்டப் பணிகளுக்காக மாநில அளவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு மீதி மூன்றில் ஒரு பங்கு நிதி மட்டும் ஊராட்சி அமைப்புகளுக்கு விடுவிக்கப்பட்டது. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, ஊராட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கான அனைத்து வழிமுறைகளையும் ஆராய்ந்து கூடுதல் நிதி கிடைக்க வாய்ப்பினை ஏற்படுத்த உறுதிபூண்டுள்ளது. முதற்கட்டமாக ஒப்படைக்கப்பட்ட வருவாய் நிதியில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதி, மற்றும் திட்டங்களுக்கு அளிக்கப்படும் நிதியின் விகிதாச்சாரம் மாற்றப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2011–12ஆம் ஆண்டு ஒப்படைக்கப்பட்ட வருவாயாக ரூ.532.42 கோடி கணக்கிடப்பட்டதில், மூன்றில் இரண்டு பங்கு நிதியாக ரூ.354.95 கோடியினை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிற்கு 2:1 என்ற விகிதாச்சார

அடிப்படையில் விடுவிக்கவும், மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நிதியான ரூ.177.47 கோடியினை முக்கியமான திட்டப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

## 2.12 ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளை மறு சீரமைப்பு செய்தல்:

பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைத்தல்.

கிராம ஊராட்சியில் தற்போது உள்ள பல உறுப்பினர் வார்டு முறையினால் பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு கிராம ஊராட்சி வார்டுகளில் இட ஒதுக்கீடு செய்வதில் மிகுந்த சிரமங்கள் உள்ளன. கிராமத்திலுள்ள வாக்காளர்களும் இந்த முறையிலான வாக்குச் சீட்டுகள் குழப்பமாக உள்ளதாகக் கருதுகின்றனர். மேலும், தேர்தல் சமயத்திலும், வாக்கு எண்ணிக்கையின் போதும் அலுவலர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பல உறுப்பினர்களைக் கொண்ட வார்டுகளின் எல்லைகள் தெளிவாகக் குறிப்பிடப்படாததால் ஒரு வார்டில் உள்ள உறுப்பினர்கள், தங்களது பகுதி என எதனையும் உரிமை கோர இயலாத நிலையில் உள்ளனர்.

1991–ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி, கிராம ஊராட்சியில், தற்போதுவரை



40,879 பல உறுப்பினர் வார்டுகளில் 97,458 வார்டு உறுப்பினர்கள் உள்ளனர். எனவே, தேர்தல் நடைமுறையினை ஒழுங்குபடுத்தும் வகையில், கிராம ஊராட்சியில் உள்ள பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்ற முடிவு செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றியமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வாயிலாக, கிராம ஊராட்சி உறுப்பினர் வார்டுகளின் எண்ணிக்கைக்கு இணையாக உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 99,333 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 2011ல் நடைபெற உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில், கிராம ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்களுக்கான தேர்தல், ஒரு உறுப்பினர் வார்டு அடிப்படையில்தான் நடத்தப்படும்.

## 2.13 கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள நகராட்சி / மாநகராட்சிகளுடன் இணைத்தல்

கீழ்க்காணும் 96 கிராம ஊராட்சிகளை அருகில் உள்ள நகராட்சி / மாநகராட்சிகளுடன் இணைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | தொடர்புடைய வட்டாரங்கள் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப் படும் கிராம ஊராட்சிகள் எண்ணிக்கை | நகராட்சியுடன் இணைக்கப் படும் கிராம ஊராட்சிகள் எண்ணிக்கை | மொத்தம் (4) + (5) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | காஞ்சிபுரம் | 3 | 12 | 3 | 15 |
| 2 | திருவள்ளூர் | 3 | 13 | 0 | 13 |
| 3 | விழுப்புரம் | 1 | 0 | 5 | 5 |
| 4 | வேலூார் | 3 | 9 | 1 | 10 |
| 5 | ஈரோடு | 1 | 5 | 0 | 5 |
| 6 | திருப்பூர் | 1 | 8 | 0 | 8 |
| 7 | கோயம்புத்துார் | 1 | 1 | 0 | 1 |
| 8 | திருச்சிராப்பள்ளி | 1 | 4 | 0 | 4 |
| 9 | கரூர் | 1 | 0 | 1 | 1 |
| 10 | மதுரை | 3 | 11 | 0 | 11 |
| 11 | துாத்துக்குடி | 1 | 5 | 0 | 5 |
| 12 | கன்னியாகுமரி | 2 | 0 | 4 | 4 |
| 13 | புதுக்கோட்டை | 1 | 0 | 1 | 1 |
| 14 | நாமக்கல் | 1 | 0 | 9 | 9 |
| 15 | கிருஷ்ணகிரி | 1 | 0 | 4 | 4 |
| மொத்தம் | | **24** | **68** | **28** | **96** |



## நகராட்சி/மாநகராட்சியுடன் இணைக்கப்படும் ஊராட்சிகள் விவரம்

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | | வட்டாரத்தின் பெயர் | கிராம ஊராட்சியின் பெயர் | ஊராட்சிகள் இணைந்துள்ள நகராட்சி/ மாநகராட்சியின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 1 | குன்றத்தூர் | முகலிவாக்கம் | சென்னை மாநகராட்சி |
| | | 2 | | மணப்பாக்கம் | |
| | | 3 | பரங்கிமலை | கொட்டிவாக்கம் | |
| | | 4 | | பாலவாக்கம் | |
| | | 5 | | நீலாங்கரை | |
| | | 6 | | ஈஞ்சம்பாக்கம் | |
| | | 7 | | காரப்பாக்கம் | |
| | | 8 | | ஒக்கியம்துரைப்பாக்கம் | |
| | | 9 | | மடிப்பாக்கம் | |
| | | 10 | | ஜல்லடம்பேட்டை | |
| | | 11 | | செம்மஞ்சேரி | |
| | | 12 | | உத்தண்டி | |
| | | 13 | காஞ்சிபுரம் | ஒரிக்கை | காஞ்சிபுரம் நகராட்சி |
| | | 14 | | தேனம்பாக்கம் | |
| | | 15 | | நத்தபேட்டை | |
| 2 | திருவள்ளூர் | 1 | மீஞ்சூர் | இடையஞ்சாவடி | சென்னை மாநகராட்சி |
| | | 2 | புழல் | சடையன்குப்பம் | |
| | | 3 | | கடப்பாக்கம் | |
| | | 4 | | தேயம்பாக்கம் | |
| | | 5 | | மாத்தூர் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 6 | | வட பெரும்பாக்கம் | |
| | | 7 | | சூரப்பட்டு | |
| | | 8 | | கதிர்வேடு | |
| | | 9 | | புத்தகரம் | |
| | | 10 | வில்லிவாக்கம் | நொலம்பூர் | |
| | | 11 | | காரம்பாக்கம் | |
| | | 12 | | நெற்குன்றம் | |
| | | 13 | | இராமாபுரம் | |
| 3 | விழுப்புரம் | 1 | கோலியனூர் | வழுதரெட்டி | விழுப்புரம் நகராட்சி |
| | | 2 | | சாலமேடு | |
| | | 3 | | காகுப்பம் | |
| | | 4 | | எருமனம் தாங்கல் | |
| | | 5 | | பாப்பாபட்டு | |
| 4 | வேலூர் | 1 | வேலூர் | அரியூர் | வேலூர் மாநகராட்சி |
| | | 2 | | சித்தேரி | |
| | | 3 | | கொணவட்டம் | |
| | | 4 | | அலமேலு மங்காபுரம் | |
| | | 5 | கணியம்பாடி | விருப்பாட்சி புரம் | |
| | | 6 | | பழவன்சாத்து | |
| | | 7 | | இடையன் சாத்து | |
| | | 8 | காட்பாடி | விருதம்பட்டு | |
| | | 9 | | காங்கேய நல்லூர் | |
| | | 10 | திருப்பத்தூர் | திருப்பத்தூர் | திருப்பத்தூர் நகராட்சி |
| 5 | ஈரோடு | 1 | ஈரோடு | கங்காபுரம் | ஈரோடு மாநகராட்சி |
| | | 2 | | எல்லப் பாளையம் | |
| | | 3 | | வில்லி அரசம்பட்டி | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 4 | | திண்டல் | |
| | | 5 | | முத்தம் பாளையம் | |
| 6 | திருப்பூர் | 1 | திருப்பூர் | செட்டிப் பாளையம் | திருப்பூர் மாநகராட்சி |
| | | 2 | | மண்ணாறை | |
| | | 3 | | தொட்டிப் பாளையம் | |
| | | 4 | | ஆண்டிப் பாளையம் | |
| | | 5 | | வீரபாண்டி | |
| | | 6 | | முருகம் பாளையம் | |
| | | 7 | | நெருப் பெரிச்சல் | |
| | | 8 | | முத்தனம் பாளையம் | |
| 7 | கோயம்புத் தூர் | 1 | சர்க்கார்சாமக் குளம் | விலங்குறிச்சி | கோயம்புத்தூர் மாநகராட்சி |
| 8 | திருச்சிராப் பள்ளி | 1 | திருவெறும்பூர் | பாப்பாகுறிச்சி | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி |
| | | 2 | | எல்லக்குடி | |
| | | 3 | | கீழ்க்கல் கண்டார் கோட்டை | |
| | | 4 | | ஆலத்தூர் | |
| 9 | கரூர் | 1 | தாந்தோணி மலை | சணப்பிரட்டி | கரூர் நகராட்சி |
| 10 | மதுரை | 1 | மதுரை கிழக்கு | மேலமடை | மதுரை மாநகராட்சி |
| | | 2 | | உத்தங்குடி | |
| | | 3 | | வண்டியூர் | |
| | | 4 | மதுரை மேற்கு | கண்ண னேந்தல் | |
| | | 5 | | நாகனாகுளம் | |
| | | 6 | | திருப்பாலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 7 | திருப்பரங் குன்றம் | சின்ன அனுப்பானடி | |
| | | 8 | | சிந்தாமணி | |
| | | 9 | | ஐராவத நல்லூர் | |
| | | 10 | | புதுக்குளம் பிட்–2 | |
| | | 11 | | தியாகராஜர் காலனி | |
| 11 | தூத்துக்குடி | 1 | தூத்துக்குடி | சங்கரப்பேரி | தூத்துக்குடி மாநகராட்சி |
| | | 2 | | தூத்துக்குடி ரூரல் | |
| | | 3 | | மீளவிட்டான் | |
| | | 4 | | முத்தையாபுரம் | |
| | | 5 | | அத்திமரப்பட்டி | |
| 12 | கன்னியா குமரி | 1 | இராஜாக்கமங் களம் | பெருவிளை | நாகர்கோவில் நகராட்சி |
| | | 2 | | வடக்கு சூரங்குடி | |
| | | 3 | | காந்திபுரம் | |
| | | 4 | அகஸ் தீஸ்வரம் | கரியமாணிக்க புரம் | |
| 13 | புதுக் கோட்டை | 1 | புதுக் கோட்டை | புதுக்கோட்டை | புதுக்கோட்டை நகராட்சி |
| 14 | நாமக்கல் | 1 | நாமக்கல் | சின்ன முதலைப்பட்டி | நாமக்கல் நகராட்சி |
| | | 2 | | முதலைப்பட்டி | |
| | | 3 | | கொசவம் பட்டி | |
| | | 4 | | கொண்டிச் செட்டிபட்டி | |
| | | 5 | | பெரியப்பட்டி | |
| | | 6 | | காவெட்டிப் பட்டி | |
| | | 7 | | நல்லி பாளையம் | |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 8 | | அய்யம் பாளையம் | |
| | | 9 | | தும்மங் குறிச்சி | |
| 15 | கிருஷ்ண கிரி | 1 | ஒசூர் | சூசுவாடி | ஒசூர் நகராட்சி |
| | | 2 | | சென்னத்தூர் | |
| | | 3 | | மூக்காண்டப் பள்ளி | |
| | | 4 | | ஆவலப்பள்ளி | |

மேற்கண்ட கிராம ஊராட்சிகள், அக்டோபர் 2011 உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின்னர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பகுதிகளாக இருக்கும்.

## 2.14 இரண்டு புதிய கிராம ஊராட்சிகளைத் தோற்றுவித்தல்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமாத்தூர், இந்திரா நகர் ஆகிய இரண்டு புதிய கிராம ஊராட்சிகளை உருவாக்கிக் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இவை, அக்டோபர் 2011ல் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் செயல்பாட்டுக்கு வரும்.

## 2.15 ஊராட்சி ஒன்றிய வார்டுகளை மறு சீரமைப்பு செய்தல்

பல உறுப்பினர் வார்டுகளை ஒரு உறுப்பினர் வார்டுகளாக மாற்றி அமைத்ததாலும், 96 கிராம ஊராட்சிகளை நகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைத்ததாலும் சில ஊராட்சி ஒன்றிய வார்டு எல்லைகள் மாற்றியமைக்கப்படவேண்டிய நிலை ஏற்பட்டு, தற்போது அவைகள் மறு சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையிலேயே ஊராட்சி ஒன்றிய வார்டுகளுக்கான தேர்தல் நடைபெறும்.

## 2.16 மாவட்ட ஊராட்சி வார்டுகளை மறு சீரமைப்பு செய்தல்

திருப்பூர் மற்றும் அரியலூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதால் கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள சில மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு, 96 கிராம ஊராட்சிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைத்ததால் சில மாவட்ட ஊராட்சி வார்டுகளின் எல்லைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மாவட்ட ஊராட்சி வார்டு எல்லைகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டவாறு அக்டோபர் 2011ல் நடைபெற உள்ள சாதாரணத் தேர்தல் நடைபெறும்.



## 2.17 இரண்டு மாவட்ட ஊராட்சிகளைப் புதிதாக ஏற்படுத்துதல்

அரியலூர் மற்றும் திருப்பூர் ஆகிய இரண்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இரண்டு புதிய மாவட்ட ஊராட்சிகள் ஏற்படுத்தப்பட உள்ளது. அக்டோபர், 2011ல் நடைபெறும் உள்ளாட்சித் தேர்தலுக்குப்பின் இந்த இரு மாவட்ட ஊராட்சிகளும் செயல்பாட்டுக்கு வரும்.

## 2.18 ஊராட்சித் தலைவர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் படிகள்

கிராம ஊராட்சித் தலைவர்கள், கிராம ஊராட்சியின் செயல் அலுவலர்களாகவும் செயல்பட்டு வருகின்றனர். கிராம ஊராட்சிகள் மற்ற இரு ஊராட்சி அமைப்புகளை விட அதிகமான பொறுப்புகளைக் கொண்டதாக உள்ளது. ஊராட்சியில் உள்ள அடிப்படை வசதிகளையும், கிராம மக்களின் அன்றாடத் தேவைகளையும் நிவர்த்தி செய்ய வேண்டிய முக்கிய அமைப்பாக கிராம ஊராட்சி உள்ளது. எனவே, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா மாநிலங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதைப்போல தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சித் தலைவர்களுக்கும் அவர்களின் பணி மற்றும் பொறுப்புகளைக் கருத்தில் கொண்டு மாதம் ரூ.1000/– மதிப்பூதியமாக வழங்க இந்த அரசு முடிவு செய்துள்ளது.

மேலும், கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியான ரூ.50/—ஐ ரூ.100/— ஆகவும், கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வுப்படியான ரூ.25/—ஐ ரூ.50/— ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

மேற்கண்ட இனங்களுக்கான செலவினம், மாநில நிதி ஆணைய மானியத்தில் இருந்து மேற்கொள்ளப்படும்.

## 3. மாநிலத் திட்டங்கள்

### 3.1. தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (தாய்)

தமிழ்நாடு அரசு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், தரமான கல்வி, அனைத்து காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதி ஆகியவற்றை அளிப்பதன் மூலம் ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினைத் தொடர்ந்து மேம்படுத்துவது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. வறுமை ஒழிப்பு, சிறந்த வாழ்வாதாரத்தை வழங்குதல், அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு புதிய திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. தற்போதுள்ள நடைமுறையின்படி திட்ட செயலாக்கம் மற்றும் நிதி ஒதுக்கீட்டிற்கு கிராம ஊராட்சியை மட்டுமே அடிப்படை அலகாகக் கொண்டு ஊரக வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



ஊரக வளர்ச்சித் துறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தற்போதுள்ள நடைமுறையைவிட ஒரு படி மேலாக, கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களைச் செயலாக்க அலகாக எடுத்துத் திட்டங்களைச் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. மாநிலத்தில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், குக்கிராம அளவில் திட்டமிடுதல் மூலம் மட்டுமே கிராமங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் உள்ள வேறுபாட்டினைக் குறைக்க இயலும். கடந்த 10 ஆண்டுகளில் கிராமப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் அதிகமாக இடம் பெயர்ந்ததால், நகர்ப்புற வளர்ச்சி விகிதாச்சாரம் அதிகரித்துள்ளது. மேற்கண்ட குறைபாடுகளைச் சரிசெய்ய வேண்டுமெனில் நகர்ப்புறங்களில் உள்ள வசதிகள் அனைத்தும் கிராமப்புறங்களில் அமைத்திடல் வேண்டும். மொத்தமுள்ள 12,524 கிராம ஊராட்சிகளில் 79,394 குக்கிராமங்கள் உள்ள நிலையில், ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 7 குக்கிராமங்கள் உள்ளன. எனினும், கிராம ஊராட்சியில் உள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 37 குக்கிராமங்களும், விழுப்புரம் மாவட்டத்தில் ஒரு கிராம ஊராட்சியில் சராசரியாக 3 குக்கிராமங்களும் உள்ளன. பல்வேறு எண்ணிக்கையிலான குக்கிராமங்களைக் கொண்ட கிராம ஊராட்சிகளுக்குச் சமமான அளவிலான நிதி ஒதுக்கீடு செய்வது வளர்ச்சி நிலையில் வேறுபாட்டினையும், பொதுச்

சொத்துகள் உருவாக்கப்படுவதில் மாறுபாட்டினையும் முன்னேற்றத்தில் ஏற்ற தாழ்வுகளையும் உருவாக்கும்.

மேற்கண்ட குறைபாடுகளைக் களையும் நோக்கிலும், குறைந்தபட்ச அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்து குக்கிராமங்களுக்கும் சென்றடையும் வகையிலும் இந்த அரசு ஒரு முன்னோடித் திட்டமாக ரீதமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்ò (தாய்) என்னும் புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. தேசிய அளவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், தமிழகத்தில் தான் குக்கிராமங்களை வளர்ச்சி அலகாகக் கொண்டு முதன்முறையாக இம்முன்னோடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

அனைத்து குக்கிராமங்களுக்கும் சமமான நிதி ஆதாரம் சரியான விகிதாச்சார அடிப்படையில் அளிக்கும் போது பாரபட்சமற்ற, நியாயமான முறையில் வளர்ச்சிப் பணிகள் அனைத்து குக்கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு சீரான வளர்ச்சியை அளிக்க இயலும். ரீதாய்ò திட்டம் அறிமுகப்படுத்தப்படுவது, ஊரக வளர்ச்சித் துறையின் நோக்கில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.



தமிழகத்தில் சென்னை நீங்கலாக உள்ள 31 மாவட்டங்களில் 12,524 கிராம ஊராட்சிகள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின்படி தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளின் மக்கள் தொகை 500க்குக் குறைவாகவும், சில ஊராட்சிகளில் மக்கள் தொகை 10,000க்கு அதிகமாகவும் உள்ளது.

<u>மக்கள் தொகையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல் (2001 கணக்கெடுப்பின்படி)</u>

| வ.எண். | மக்கள் தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 500 மற்றும் அதற்குக் கீழ் | 66 |
| 2. | 501–1000 | 1,175 |
| 3. | 1001–3000 | 7,228 |
| 4. | 3001–5000 | 2,554 |
| 5. | 5001–10000 | 1,354 |
| 6. | 10000க்கு மேல் | 147 |
| | மொத்தம் | 12,524 |

குக்கிராமங்களின் எண்ணிக்கையைக் கணக்கில் எடுக்கும்போது கிராம ஊராட்சிகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

**<u>குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கிராம ஊராட்சிகளை வகைப்படுத்துதல்.</u>**

| வ.எண். | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5க்கும் கீழ் | 6,241 |
| 2. | 5–15 | 5,434 |
| 3. | 16–25 | 637 |
| 4. | 25க்கு மேல் | 212 |
| மொத்தம் | | 12,524 |

நிதி ஒதுக்கீடு:

குக்கிராமங்களின் எண்ணிக்கையையும், ஊராட்சியில் உள்ள மக்கள் தொகையையும் ஒப்புநோக்கும் போது, குக்கிராமங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மக்கள் தொகையும் கூடுகிறது என்பது தெளிவாகிறது. பின்வரும் அட்டவணையே இதற்குச் சான்றாகும்.



**<u>“தாய்” திட்டத்திற்குத் தேவைப்படும் நிதி</u>**

| வ. எண் | குக்கிராமங்களின் எண்ணிக்கை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை | மொத்த மக்கள் தொகை | ஒரு ஊராட்சிக்கான சராசரி மக்கள் தொகை | ஓர் ஊராட்சிக்கான ஒதுக்கீடு (இலட்சத்தில்) | | | மொத்த தேவை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | குறைந்தபட்ச அடிப்படை மானிய நிதி | கூடுதல் நிதி | மொத்த நிதி | |
| 1. | 5க்கும் கீழ் | 6241 | 12534047 | 2008 | 20 | 0 | 20 | 1248.20 |
| 2. | 5–15 | 5434 | 17392688 | 3201 | 20 | 10 | 30 | 1630.20 |
| 3. | 16– 25 | 637 | 3553429 | 5578 | 20 | 20 | 40 | 254.80 |
| 4. | 25க்கு மேல் | 212 | 1864689 | 8796 | 20 | 30 | 50 | 106.00 |
| மொத்தம் | | 12524 | 35344853 | 19583 | -- | -- | -- | 3239.20 |
| கணக்கெடுப்பு, தகவல்,கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், ஆரம்ப கட்டப் பணிகள் மற்றும் விருதுகளுக்கான நிதி | | | | | | | | 160.80 |
| பெருமொத்தம் | | | | | | | | **3,400.00** |

அதிக அளவிலான குக்கிராமங்களைக் கொண்ட ஊராட்சிக்கு அதிக அளவிலான நிதி தேவைப்படுகிறது. இதன் அடிப்படையில் அனைத்து ஊராட்சிகளும் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வகைக்கேற்பவும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. அதாவது, அதிகக் குடியிருப்புகள் மற்றும் அதிக மக்கள் தொகையுடைய ஊராட்சிகள் அதிக நிதி ஒதுக்கீட்டினைப் பெறும்.

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி ஐந்து ஆண்டுகளில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் ரூ.3,400 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படும்.

மேலும், ஒவ்வொரு ஆண்டும் ரூ.680 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். இதில் உத்தேசமாக ரூ.200 கோடி, இணைப்புச் சாலைகளை மேம்படுத்தவும், மண்சாலைகள்/சரளைச் சாலைகளை அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகளாக மாற்றுவதற்கும் பயன்படுத்தப்படும்.

குக்கிராமங்களில் தற்போதுள்ள மற்றும் மேலும் தேவைப்படும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் குறித்த நிலையினை அறிய விரிவான கணக்கெடுப்பு நடத்த அரசு முடிவு செய்துள்ளது. குக்கிராமங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச அடிப்படை வசதிகளான குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள், சாலைகள், இடுகாடு, இடுகாட்டிற்குப் பாதை ஆகியனவும் கூடுதல் தேவைகளான பொது விநியோகக் கட்டிடம், அங்கன்வாடி மையம், சுயஉதவிக் குழுக் கட்டிடம், கதிர் அடிக்கும் களம் மற்றும் விளையாட்டு மையம் ஆகியனவும் இத்திட்டத்தில் எடுத்துச் செய்யப்படும்.



**3.1.1.** குடிநீர் விநியோகம்

குடிநீர் விநியோகப் பணிகளான சிறுமின்விசை இறைப்பான், குடிநீர்க் குழாய் விரிவாக்கம், தற்போதுள்ள தனிமின்விசைத் திட்டத்திற்கான நீராதாரத்தினைப் பெருக்குதல் போன்ற பணிகள், தேவையின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

**3.1.2.** தெரு விளக்குகள்

புதிய குக்கிராமங்கள், விரிவாக்கப் பகுதிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகள் மற்றும் தொகுப்பு வீடுகள் அடங்கிய குடியிருப்புகளில் தேவைக்கேற்ப புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படலாம். ஏற்கெனவே உள்ள இடங்களில் தெரு விளக்குகள் பற்றாக்குறையாக இருந்தால் கூடுதல் தெரு விளக்குகளும் அமைக்கலாம். சூரிய சக்தி தெருவிளக்குகளும் இத்திட்டத்தில் அமைக்கலாம்.

**3.1.3** சாலைகள்

**3.1.3.1** சிமெண்ட் கான்கிரீட் சாலைகள்

இருபுறங்களிலும் குடியிருப்புகள் அதிகமாக உள்ள இடம், தாழ்வான பகுதிகளில் அமைந்து, மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கும் தெருக்கள் அல்லது சந்துகள், ஏற்கனவே

சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கப்பட்ட தெருக்களில் விடுபட்ட பகுதி ஆகியன முன்னுரிமை அடிப்படையில் எடுக்கப்பட்டு சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படலாம்.

### 3.1.3.2 இணைப்புச் சாலைகள்

பேருந்துகள் செல்லும் சாலைகள், கற்சாலைகளைத் தார்ச் சாலைகளாக தரம் உயர்த்துதல், ஒரு கிராம ஊராட்சியில் இரண்டு அல்லது அதற்கு மேல் உள்ள குக்கிராமங்களை இணைத்துச் சாலை அமைத்தல், மண் சாலைகள் / சரளைச் சாலைகளை தரம் உயர்த்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

### 3.1.4 சுடுகாடு / இடுகாடு

ஒவ்வொரு இடுகாடு/சுடுகாட்டிற்கும் அணுகு சாலைகள், சுற்றுச்சுவர், சுடுகாட்டுக் கொட்டகை, தண்ணீர் வசதி மற்றும் விளக்கு வசதிகள் தேவையின் அடிப்படையில் செய்து தரப்பட வேண்டும்.

### 3.1.5 சுடுகாடு / இடுகாட்டிற்கு சாலை வசதி செய்தல்

சாலை வசதி இல்லாத சுடுகாடு / இடுகாட்டிற்கு முன்னுரிமை அடிப்படையில் அணுகுசாலை அல்லது பாதை அமைக்கப்பட வேண்டும். ஏற்கெனவே சாலை வசதி உள்ளதெனில் மேற்படி சாலையின் தற்போதைய



தன்மையைக் கருத்திற்கொண்டு தேவையின் அடிப்படையில் சாலை மேம்பாடு செய்ய வேண்டும்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்கள் அல்லது பிற துறைகளில் உள்ள பல வளர்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 3.2 பசுமை வீடுகள் திட்டம்

“இந்தியா கிராமங்களில் வாழ்கிறது” என்பது நமது திருநாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகளின் புகழ்பெற்ற கூற்றாகும். அறுபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கூறிய கூற்று தற்போதும் பொருத்தமானதாக உள்ளது. இந்திய மக்கள் தொகையில் 68.84 விழுக்காடு கிராமங்களிலும், தமிழ்நாடு மக்கள் தொகையில் 51.55 விழுக்காடு மக்கள் கிராமங்களிலும் வாழ்கின்றனர்.

வீட்டு வசதி என்பது மனித வாழ்வில் அடிப்படைத் தேவையாகக் கருதப்படுவதுடன், ஒரு வீட்டின் உரிமையாளர் என்பது அவருக்குப் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதோடு சமுதாயத்தில் கவுரவமாகவும் வாழ்வதற்கு வழி ஏற்படுத்துகிறது. வீடற்ற ஒருவருக்கு சொந்தமாக ஒரு வீடு என்பது அவருடைய சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க அடிப்படை மாற்றம் மற்றும் அங்கீகாரத்தினை அளிக்கிறது.

ஊரகக்குடியிருப்பு வசதியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, ஊரகப்பகுதிகளில் வீடுகள் கட்டுவது சமீபகாலத்தில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. வீட்டு வசதித் தேவைகளைக் கண்டறிந்து, வீட்டு வசதி அளிப்பது ஊரக வளர்ச்சித் திட்டங்களின் முக்கியக் கூறாக உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ளவாறு கடந்த ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வந்த ஊரக வீட்டு வசதித் திட்டம் பல குறைபாடுகளுடன் உள்ளது. கட்டுமானச் செலவு, இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரித்துவிட்ட நிலையில் அத்திட்டத்தில் ஒரு வீட்டிற்கு வழங்கப்படும் நிதியான ரூபாய் 75 ஆயிரம் மிகக் குறைந்த அளவாக உள்ளது. இதனால் ஏழை எளிய குடும்பங்கள் கடன் சுமையில் சிக்கியுள்ளனர். இதன் காரணமாக மிக அதிக எண்ணிக்கையில் வீடுகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தினைக் கைவிடுவதென இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்கு மாற்றாக, கிராமப்புற ஏழைகள் பயன்பெறும் வகையில் ரீசூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டம்ò தொடங்கப்படும். இத்திட்டத்தில் 300 சதுர அடி அளவில் ரூபாய் 1.80 லட்சம் செலவில் வீடு கட்டப்படும்ò என அறிவிக்கப்பட்டது. இத்திட்டமானது ஊரக வீட்டு வசதித்திட்டத்தில் நாட்டிலேயே ஒரு தனித்தன்மை வாய்ந்த திட்டமாகும். மேலும், நாட்டில் எந்த ஒரு மாநிலத்திலும்



இலவச வீட்டு வசதித் திட்டத்தில் 300 சதுர அடி பரப்பளவில் வீடுகள் கட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் சூரிய ஒளி மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டித் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாக இருக்கும். 2011–2012ம் ஆண்டில் 60,000 பசுமை வீடுகள் கட்டப்படவுள்ளன.

ஒவ்வொரு பசுமை வீடும், 300 சதுரஅடி பரப்பளவில், ரூ. 1.80 லட்சம் அலகுத் தொகையில் கட்டப்படவுள்ளது. இத்தொகையில் பசுமை வீடுகளில் சூரியஒளி சக்தி விளக்குகள் அமைப்பதற்கான ரூ.30,000/– தொகையும் அடங்கும். 2011–12–ஆம் நிதியாண்டில் 60,000 பசுமை வீடுகள் கட்டிட ரூ.1,080 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 3.2.1 சிறப்பு அம்சங்கள்

1. பசுமை வீடுகள் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு மாநில அரசால் முழுமையாக வழங்கப்படும்.
2. ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்தினர் மட்டுமே பசுமை வீடுகள் பெறத் தகுதியானவர்கள்.
3. ஒவ்வொரு வீடும் 300 சதுர அடி பரப்பளவு கொண்டதாக இருக்கும்.
4. ஒரு வீட்டின் அலகுத் தொகை ரூ. 1.80 லட்சம் ஆகும்.

5. ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்படும்.
6. ஒவ்வொரு வீட்டிலும் சூரிய ஒளி சக்தியில் எரியும் அடர்குறு விளக்குகள் (CFL) பொருத்தப்படும்.
7. சூரியஒளி சக்தி விளக்குகள் அமைக்கும் பணி தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் மூலமாகச் செயல்படுத்தப்படும்.

### 3.3 சூரிய சக்தியுடன் கூடிய தெருவிளக்குகள்

தமிழக சட்டப்பேரவையில் ஏற்கனவே அறிவித்தவாறு ‟இந்த அரசு பரிட்சார்த்த முறையில் தெருவிளக்குகளை சூரிய எரிசக்தி மூலம் அமைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கும்.” மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 17,42,804 தெருவிளக்குகள் உள்ளன. மின்சாரக் கட்டணம் மற்றும் பராமரிப்புச் செலவினைக் குறைப்பதற்கும், ஊரகப் பகுதிகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியினை ஊக்குவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டும் இந்த அரசு தற்போதுள்ள தெருவிளக்குகளை சூரிய சக்தி தெருவிளக்குகளாக மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டமானது, கிராம ஊராட்சிகளில் பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்பட உள்ளதால், வரும் ஐந்தாண்டுகளில், 2016–ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் 1,000 கிராம ஊராட்சிகளில் ஒரு இலட்சம்



தெருவிளக்குகள் சூரிய சக்தி விளக்குகளாக மாற்றியமைக்கப்படும். 2011–12–ஆம் ஆண்டில் 20,000 தெருவிளக்குகள் சூரிய சக்தி தெருவிளக்குகளாக மாற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான மொத்த செலவினம் ரூ.49.60 கோடியாகும். இதில், ரூ. 11.28 கோடி மத்திய அரசின் மானியமாகவும், மீதித் தொகை ரூ. 38.32 கோடி, மாநில அரசும் வழங்கும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையுடன் ஒருங்கிணைந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தும்.

### 3.4 ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இந்த அரசு ‟ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்” எனும் புதிய திட்டத்தை இந்த ஆண்டு முதல் செயல்படுத்தவுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான, புதிய கட்டிடங்கள், சமையல் அறை, குடிநீர் வசதி மற்றும் கழிப்பறைகள் ஆகியவைகளை ஏற்படுத்துவது ஆகும். தேவைப்படும் இடங்களில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளும் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய பள்ளிக் கட்டிடங்கள் அனைத்தும் கான்கிரீட் கூரைகளுடன் தண்ணீர் கசியாத வகையில் தட்டோடு மற்றும் இதர வசதிகளுடன் கட்டப்படும். புதிய பள்ளிக் கட்டிடங்கள், பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள காலி இடத்தில் அமைக்கப்படும். பள்ளிக் கட்டிடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரீட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையை சரிபார்த்து அதன் மேல் தளத்தில் புதிய கட்டடம் அமைக்கப்படும்.

சமையல் அறை இல்லாத ஊராட்சி ஒன்றியப்பள்ளிகளில் புதிய சமையல் அறைகள் அமைக்கப்படும். தேவையின் அடிப்படையில் பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் பணி மேற்கொள்ளப்படும். ஏற்கனவே உள்ள சமையல் அறைக் கட்டடத்தில் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப்பொருட்களை இருப்பு வைத்துக் கொள்ளும் கூடுதல் அறைகளும் தேவையின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் ஏற்கெனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின் அவைகள் பழுது நீக்கிச் சீரமைக்கப்படும். குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள், புதிய குடிநீர் இணைப்புகள், கழிவறைக்குத் தேவையான தண்ணீர் வசதி, ஆகியன மேற்கொள்ளப்படும்.



அவசியமான இடங்களில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படும்.

அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் பயிலும் மாணவ, மாணவிகளுக்குத் தனித்தனியாக, போதுமான அளவில் கழிப்பறைகள் அமைக்கப்படும். மேலும், ஏற்கனவே கட்டப்பட்டுள்ள பழுதடைந்த கழிப்பறைகளைப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக பழுதுநீக்கம் செய்வதற்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். நடுநிலைப் பள்ளிகளில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் (Incinerator) அமைக்கப்படும். முழு சுகாதாரத் திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் அமைக்கப் போதிய நிதி இல்லையெனில், இத்திட்டத்தின் கீழ் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படும். பேரூராட்சிகள் மற்றும் மூன்றாம் நிலை நகராட்சிப் பகுதிகளில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ள மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்படும்.

**2011–12–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.**

## 3.5 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்குத் தேவைப்படும் முக்கியப் பணிகளைக் கண்டறிந்து செயல்படுத்திடவும், தேவையான கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளையும் நிரப்புவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மாநில அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் ஆகும். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் தனது தொகுதியில் தேவைப்படும் பணியினைக் கண்டறிந்து அப்பணியினைச் செயல்படுத்திடப் பரிந்துரைப்பார். இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் செயல்படுத்தப்படும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியாகத் தற்போது ஒவ்வொரு தொகுதிக்கும் வழங்கப்பட்டு வரும் ரூ.1.75 கோடியானது, 2011–12ம் ஆண்டு முதல் ரூ.2.00 கோடியாக உயர்த்தி வழங்கப்படும்.

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்கிச் செயல்படுத்தும் முகமையினை நிர்ணயிப்பார். தொகுதிக்கான மொத்த ஒதுக்கீட்டில் ரூ.1 கோடியே 12 லட்சத்து 50 ஆயிரம் அரசால் குறிப்பிடப்பட்ட முன்னுரிமைப் பணிகளையும், மீதமுள்ள ரூ.87 லட்சத்து 50 ஆயிரம் நிதியினைச் சட்டமன்ற உறுப்பினர் தனது விருப்பப்படி திட்ட



வழிக்காட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள பணிகளையும் தேர்வு செய்யலாம்.

### 3.5.1 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – வரையறுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

மேற்குறிப்பிட்டவாறு ஒதுக்கீட்டில் ரூ.1.125 கோடி வரையறுக்கப்பட்ட நிதியின் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்குச் செலவிடலாம். 2011–12–ஆம் ஆண்டிற்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான கழிப்பறை வசதி, குடிநீர் வசதி போன்ற வசதிகளை ஏற்படுத்த ரூ.25 இலட்சம் ஒதுக்கப்பட வேண்டும். மேலும், பெரும்பான்மையான அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையற்கூடங்கள், குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் மற்றும் ஓரளவு ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதாக அறியப்படுவதால், அவைகளுக்குப் படிப்படியாகப் புதிய கட்டிடங்கள் கட்டித் தர இந்த அரசால் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.20 இலட்சத்தை அங்கன்வாடிக் கட்டிடங்கள், சத்துணவு மையக் கட்டிடங்கள், சத்துணவு சமையற்கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் ரூ.5.00 லட்சத்தை மாற்றுத் திறனாளிகளுக்கு கருவிகள்

மற்றும் உபகரணங்கள் வாங்கிடவும் தனியே நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூபாய் 62 லட்சத்து 50 ஆயிரத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர் தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட வகையான ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மேற்கொள்ளலாம்.

3.5.1 .1 ஊரகப் பகுதிகளில்

1. சூரிய ஒளி தெரு விளக்குகள் பொருத்துதல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.
6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. இடுகாடு மற்றும் சுடுகாடு வசதி இல்லாத கிராம ஊராட்சிகளில் இவ்வசதிகளை அமைத்தல்.
9. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல்.

3.5.1.2 நகர்ப்புறப் பகுதிகளில்

1. சூரிய ஒளி தெரு விளக்குகள் அமைத்தல்
2. சரளை மற்றும் கப்பிச்சாலைகளை தார்ச்சாலையாக மேம்படுத்துதல்
3. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்ச்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப் பணி மட்டும் மேற்கொள்ளல்.)
4. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்
5. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள்

ஆகியவைகளுக்கு கட்டிடம் மற்றும் சுற்றுச்சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகள் ஆகியவைகளுக்குக் கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல்.

6. மாற்றுத் திறனாளிகளுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதி செய்து கொடுத்தல்.
7. பாலங்கள் கட்டுதல்
8. சுடுகாடு / இடுகாடுகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்
9. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்
10. புதிய பொதுப் பூங்காக்கள் அமைத்தல்
11. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்
12. ஜெட்ராடிங் இயந்திரங்கள் மற்றும் ஹைட்ராலிக் விசையால் இயக்கப்படுகின்ற தூர்வாரும் இயந்திரங்களை வாங்குதல்.



3.5.2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – வரையறுக்கப்படாத நிதியிலிருந்து எடுத்துச் செய்யக்கூடிய பணிகள்

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ள குளம், ஆறு, ஊரணிகள் மற்றும் கால்வாய்கள் தூர்வாரும் பணிகளை இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பட்டியலின்படி தடை செய்யப்பட்டுள்ள பணிகளைத் தவிர இதரப் பணிகளை வரையறுக்கப்படாத திட்ட நிதியான ரூ.87.50 லட்சம் ஒதுக்கீட்டிலிருந்து சட்டமன்ற உறுப்பினரால் பரிந்துரை செய்யலாம்.

3.5.3 தடை செய்யப்பட்ட பணிகள்

1. மத்திய, மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகள், அரசு முகமைகள்/நிறுவனங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டுதல்
2. தனியார், கூட்டுறவு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகம், குடியிருப்புக் கட்டிடங்கள் மற்றும் இதர பணிகள்.
3. வணிக நோக்குடன் கூடிய அனைத்து வகையான பணிகள்

4. அனைத்து வகையான பராமரிப்புப் பணிகள்
5. அனைத்து வகையான புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள்
6. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்
7. அனைத்து வகையான அசையும் சொத்துக்கள் வாங்குதல்
8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்
9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீள ஈடு செய்தல்.
10. தனிநபர்/குடும்பப் பயனுள்ள சொத்துக்களை உருவாக்குதல்
11. அனைத்து வகையான வருவாய் மற்றும் தொடர் செலவினங்கள்
12. மதவழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புக்கள், குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்
13. குளங்கள், ஊரணிகள், ஆறு மற்றும் கால்வாய்கள் தூர்வாரும் பணிகள்
14. சரளை/கப்பிச் சாலைகள் (தார்ச் சாலை வரை அமைக்கும் சாலைப் பணிகளை மட்டுமே எடுத்துக் கொள்ளலாம்)



15. உயர் கோபுர மின்விளக்குள் பொருத்துதல்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் மொத்த நிதியில், ஊரகப் பகுதியில் 19 விழுக்காடு ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதி அல்லது நகர்ப்புறங்களில் குடிசைப் பகுதிகளில் (Slums) வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் அப்பகுதிக்கென ஒதுக்கப்பட வேண்டும்.

2011–12–ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ.470 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.6 தன்னிறைவுத் திட்டம்

இவ்வரசு 2001ம் ஆண்டில் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய கிராம தன்னிறைவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகம் அமைத்தல், தெருவிளக்கு வசதி ஏற்படுத்துதல், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகம் கட்டுதல் போன்ற பணிகளுக்கு முன்னுரிமை வழங்கி செயல்படுத்தியது. கலந்தாலோசித்து முடிவு செய்தல், சமுதாய சிந்தனை மற்றும் கருத்தொருமைப்பாடு ஏற்படுத்தும் முயற்சி ஆகியவற்றில் சமுதாயப் பங்களிப்பின் முக்கியத்துவத்தை இந்த அரசு அடையாளம் கண்டுகொண்டுள்ளது. இதன் மூலம் தனிநபர் மற்றும்

குழுக்கள் தங்களது கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து வெளிப்படையான மற்றும் பொறுப்புடன் கூடிய முயற்சியின் மூலம் பயன்தரத்தக்க சமுதாயச் சொத்துக்களை உருவாக்க இயலும்.

மக்களின் பங்கேற்பினைக் குறிக்கோளாகக் கொண்டு கிராமப்புற மக்கள் தம்முடைய தேவைகளைத் தாமே பூர்த்தி செய்யும் மனப்பான்மையை உருவாக்கவும், வலுப்படுத்தவும் தான் தன்னிறைவுத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம், திட்டமிடுதல், நிதி ஆதாரங்களை திரட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளில் கிராமப்புற சமுதாயத்தை நேரடியாக ஈடுபடுத்துவதாக அமைந்தது. இத்திட்டத்திற்கு நிதி உதவி அளித்தும், தொழில் நுட்ப ரீதியாகவும் உதவி செய்து மக்களின் முயற்சியை அரசு ஊக்குவித்தது. மக்களின் தேவைகள் எளிதில் உணரப்பட்டு அவை இத்திட்டத்தின் கீழ் நிறைவு செய்யப்பட்டது.

ஊரகப் பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளை தாமே நிறைவு செய்யும் மனப்பான்மை, பொது மக்கள் பங்கேற்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் தன்னிறைவுத் திட்டத்தினை 2011–12ம் ஆண்டு முதல் மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டம் ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் செயல்படுத்தப்படும். பொதுமக்கள், தங்கள் பகுதிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகளைத் தேர்வு செய்வதுடன்



(identify the work) வேலையின் மதிப்பீட்டுத் தொகையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாமல் பங்களிப்பு செய்ய வேண்டும்.

**3.6.1** தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் பணிகளை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள்

1. தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் தேவையான பணிகளை எடுத்துச் செய்வதற்கான கருத்துரு, தனிநபர், குழு, தனியார் மற்றும் பொது நிறுவனங்கள் அல்லது சமுதாய மக்கள் மூலமாக உருவாகலாம்.
2. தேர்வு செய்யப்பட்ட பணி குறித்த விண்ணப்பமும், மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை வழங்குவதற்கான ஒப்புதல் கடிதத்தினையும் பொது மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பெறலாம்.
3. தேவையின் அடிப்படையிலும், செய்யக்கூடியதாகவும் பணிகள் அமைந்தால் மட்டுமே மதிப்பீடுகள் தயார் செய்யப்படுதல் வேண்டும்.
4. ஒதுக்கீட்டை விடத் தேவையான பணிகளின் எண்ணிக்கை அதிகமாகும் நிலையில், முன்னுரிமை அடிப்படையில் பணியினைத் தேர்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

3.6.2 பணிகளின் பட்டியல்

1. அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், மலைவாழ் மக்களுக்கான பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு விடுதிகளுக்கு கட்டிடங்கள், ஆய்வகங்கள், கழிவறைகள் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.
2. அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையங்கள், துணை மையங்கள், கால்நடை மருந்தகங்கள், கால்நடை வளர்ப்பு மையங்கள் மற்றும் நூலகங்கள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் சுற்றுச் சுவர் / சுற்று வேலி அமைத்தல்.
3. நகர்ப்புறப் பகுதிகளில் நூலகங்கள் கட்டுதல் மற்றும் ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் சத்துணவு மையங்கள், சத்துணவு மைய சமையல் கூடங்கள், அங்கன்வாடிகள் மற்றும் பொது விநியோகக்கடைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.
4. கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் குடிநீர் ஆதாரங்கள் உருவாக்குதல், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மற்றும் கதிரடிக்கும் களங்கள் போன்ற சமுதாயச் சொத்துக்களை உருவாக்குதல்.



5. அனைத்து சமூகச் சொத்துக்களையும் பராமரித்தல். முன்னுரிமை அடிப்படையில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத்தினை பராமரிக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படலாம்.
6. பாலங்கள் அல்லது சிறிய பாலங்கள் கட்டுதல், சரளை/கப்பிச் சாலைகளை தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை புதுப்பித்தல். தெருக்கள் மற்றும் சிறிய சந்துகளை செங்கல் அல்லது கப்பி கற்கள் அல்லது சிமெண்ட் பலகை அல்லது சிமெண்ட் கான்கிரீட் கொண்டு சீரமைத்தல்.
7. பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், சாலை திட்டு (Traffic Island) நீரூற்று, தெருவிளக்குகள் (சூரிய ஒளி விளக்குகள் உட்பட) போன்றவற்றை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.
8. பொதுமக்கள் பயன்படுத்துவதற்கு ஏதுவாக அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், நூலகங்கள் மற்றும் கட்டிடங்களுக்குத் தேவையான அறைகலன்கள் (Furniture), கணினிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றை வாங்குதல். பழைய கணினிகள், உபகரணங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கக்கூடாது. .

9. 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ்வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டுதல்.

### 3.6.3. தடை செய்யப்பட்ட பணிகள்

சிறப்பினமாக எடுத்துச் செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் தடை செய்யப்பட்ட பணிகளை தன்னிறைவுத் திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது.

1. மத்திய, மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

   விதிவிலக்கு– ஆரம்ப சுகாதார நிலையங்கள்/ அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு வசிப்பிடங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல் மற்றும் சீரமைத்தல். அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்குக் கட்டிடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டிடம்



கட்டுதல், நேரடிக் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டிடங்கள், மொத்தக் குளிர்பதன மையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுதல்.

2. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

   விதிவிலக்கு – அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அங்கன்வாடிகள், மதிய உணவு மையங்கள், அரசுக் கல்லூரிகள், அரசு மாணவர் தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்குத் தளவாட சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

3. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

   விதிவிலக்கு– 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் தமிழ் வழிக் கல்வி கற்பிக்கப்படும் பள்ளிகளில், பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். நிதி உதவி பெறும் தகுதி

வாய்ந்த பள்ளி ஒன்றுக்குத் தன்னிறைவு திட்டத்தில் அரசு மான்யம் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ.10 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று தன்னிறைவுத் திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி அடுத்த மூன்றாண்டுகளுக்குப் பிறகே மீண்டும் இந்நிதி உதவியைப் பெற இயலும்.

மேற்காணும் பணிகளைப் பொறுத்தவரை, மாவட்ட ஆட்சித் தலைவர் உரிய விசாரணை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்காணும் சான்றிதழ்களைப் பணி மேற்கொள்வதற்கு முன் பெற வேண்டும்.

i) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள்/பிரிவுகள் கொண்டது. ஆங்கில வழி பயிற்றுவிக்கும் பிரிவுகள் கிடையாது.
ii) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகத்திலோ நடத்தப்படும் இந்தப்

பள்ளியில் சுய நிதி பிரிவுகள்/வகுப்புகள் இயங்கவில்லை.

4. அனைத்து வணிக நிறுவனங்கள் /அலகுகள் குறித்த பணிகள்.
5. மானியம், கடன் மற்றும் மாநில, யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களித்தல்
6. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.
7. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்காக தொகை மீளச் செலுத்துதல்.
8. தனிநபர்/குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்
9. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்
10. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள்/ குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்
11. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்

    விதிவிலக்கு: மாவட்ட ஆட்சியர் அவசியம் எனக் கருதினால், பொதுப்பணித்துறைக் கண்மாய்கள் தூர் வாருதல், கரைகளைப் பலப்படுத்துதல் மற்றும் மதகு / அணைகளைப் புதுப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளலாம். இதில் மக்கள் பங்களிப்புத் தொகை பொதுப்பணித் துறையினரால் தயாரிக்கப்படும் மதிப்பீட்டிற்கு 50 சதவீதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். தேவையிருப்பின் நீர் நிலைகள், வரத்து கால்வாய் மற்றும் உபரி நீர் கால்வாய் ஆகியவற்றைத் தூர்வாரும் பணியினைப் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டம் / IAMWARM போன்ற திட்டங்களின் கீழ் மேற்கொள்ளலாம்.

12. சரளை / கப்பிச் சாலைகள் (தார்ச்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).
13. சோடியம் ஆவி விளக்குகள்/உயர் கோபுர மின் விளக்குகள் பொருத்துதல்

**3.6.4** பணிகளைச் செயல்படுத்துதல்

சம்மந்தப்பட்ட துறைகள் அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998ன்படி ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் செயல்படுத்தப்படும். மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தும் நோக்குடன் மதிப்பீட்டில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக பங்களிப்பு செய்த பணிகளை பொது மக்களோ, பணம் செலுத்தியவரோ நேரடியாக செயல்படுத்திட அனுமதி கோரும் நிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான அனுமதியை

வழங்கலாம். ஆனால் பொதுப்பணித்துறைக் கண்மாய்கள் தூர்வாரும் பணியைப் பொருத்த மட்டில் பொது மக்கள் பங்களிப்பு 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தால் கூட ஒப்பந்தப்புள்ளி முறையைப் பின்பற்றியே பணிகள் செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்துக்களை கூடுமானவரை, ®பயன்படுத்துவோர் குழுக்கள்ò தங்களிடமுள்ள நிதி ஆதாரத்தைக் கொண்டு பராமரிக்கலாம்.

2011–12–ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

### 3.7 ஊரக கட்டமைப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் நிலையான சொத்துக்களை உருவாக்குவதும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் சொத்துக்களை நிலைப்படுத்துதலுமே, ஊரக கட்டமைப்புத் திட்டத்தின் நோக்கம் என்பதால் இந்த அரசு ஊரக கட்டமைப்புத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தும். இதற்காக 2011–12ம் ஆண்டில் மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ரூ.380 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். பின்வரும் வேலைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.



- தற்போதுள்ள மண் கிராவல் சாலைகளை கற்சாலைகளாகத் (WBM) தரம் உயர்த்துதல்.
- தற்போதுள்ள கற்சாலைகளைத் தார்ச்சாலைகளாக தரம் உயர்த்துதல்.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் பணிகளில் பொருட்கூறுடன் செயல்படுத்த வேண்டிய பணிகளான மதகு சீரமைத்தல், மறுகால் சீரமைத்தல், தடுப்புச் சுவர் கட்டுதல்.
- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சாலைகளில் சிறுபாலங்கள் (Culvert) / தடுப்புச் சுவர்கள் கட்டுதல்.

### 3.8 ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைப்பு

2001–ஆம் ஆண்டில் இந்த அரசு பதவியேற்ற போது பெண்களுக்கு மேம்பட்ட சுகாதாரத்தை ஏற்படுத்துவது என்பதே தாரக மந்திரமாயிருந்தது. முறையான சுகாதார வசதிகள் கிடைக்கப் பெறாததால், கிராமப் பெண்களின் வாழ்க்கை சிரமத்துக்குள்ளானது. பெண்கள் காலைக்கடனை மாலைக்கடனாக மாற்ற வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. இவ்வாறாக இருட்டும் வரை காத்திருந்து தங்களின் உபாதைகளைக் கழிக்க வேண்டிய கட்டாயம் இருந்ததால், மலச்சிக்கல் ஏற்பட்டு உணவு மற்றும் குடிநீர் உட்கொள்ளுவதில் சிக்கல் ஏற்பட்டு சுகாதாரக் கேடுகள்

ஏற்பட்டன. ஏழ்மை மற்றும் கலாச்சாரப் பழக்கங்களால் சுகாதார வசதி இல்லாதிருந்த நிலையிலிருந்து அவர்கள் மீளவேண்டியிருந்தது. எனவே, ஊரகப் பெண்களுக்கான தனித்துவம் மற்றும் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்களின் பொது சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மிகவும் அவசியமானதும் முக்கியமானதும் ஆகும்.

தமிழகத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் சுமார் 750 சதுர அடி பரப்பளவில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் கட்ட, 2001–ஆம் ஆண்டில் இந்த அரசால் முடிவெடுக்கப்பட்டது. பெண்கள் எளிய முறையில் உபயோகப்படுத்தும் வண்ணமாக, அவை கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டன. ஒவ்வொரு வளாகமும், 14 கழிவறைகள், 2 குளியலறைகள், தண்ணீர் தொட்டி மற்றும் துணி துவைக்கத் தேவையான கல் ஆகியவற்றை உள்ளடக்கியதாயிருந்தது. குளிக்கவும் துணி துவைக்கவும் தேவையான தண்ணீர் விநியோகம் இவ்வளாகத்தில் உறுதிசெய்யப்பட்டது. இவ்வளாகத்திலுள்ள கழிவறைகளை ஒதுக்கீடு செய்ய உபயோகிப்பாளர்கள் இனங்கண்டு குழுவாக்கப்பட்டனர். தண்ணீர் விநியோகம் மற்றும் விளக்குகளுக்குத் தேவையான மின்வசதியைக் கிராம ஊராட்சிகள் செய்து கொடுத்து சம்மந்தப்பட்ட குடும்பங்கள் அதனை பராமரிக்க ஏற்பாடு செய்யப்பட்டன. மகளிர் வசதிக்காக இவ்வளாகங்களில் எரியூட்டிகள் (Incinerators) அமைக்கப்பட்டன.



தொடக்கத்தில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு மகளிர் சுகாதார வளாகம் என்ற அடிப்படையில் ரூ.2 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பின்னர், அலகுத்தொகை ரூ.2.25 லட்சமாக உயர்த்தப்பட்டது. 2001 முதல் 2004–ஆம் ஆண்டு வரை மாநிலத்தில் உள்ள அனைத்துக் கிராம ஊராட்சிகளிலும், மகளிர் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டன.

குறைவான தண்ணீர் மட்டுமே உபயோகப்படுத்தக்கூடிய ஊரகக் கழிப்பறைகளை கட்ட ஊக்குவிப்பது மட்டுமில்லாமல் குளிப்பதற்கு உபயோகித்த தண்ணீரைக் கொண்டு தோட்டம் அமைத்து அதில் இருந்து உற்பத்தியாகும் காய்கறிகளை விற்பனை செய்வதன் மூலம் பெறப்பட்ட தொகை மகளிர் சுய உதவிக்குழுக்களால் சுகாதார வளாகம் பராமரிக்க உதவியாக இருந்தது. மகளிர் சுகாதார வளாகங்கள் நல்ல காற்றோட்டமான வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டது. மனிதக்கழிவு இணைந்த எரிவாயு கலன் அமைப்பதை ஊக்குவித்து அதன் மூலம் பெறப்படும் எரிவாயு மின்விளக்கு மற்றும் தண்ணீர் இறைப்பானுக்கும் பயன்படுத்தப்பட்டது. மொத்தத்தில், கிராம மக்களிடையே சுற்றுச்சூழல் சுகாதாரத்தின் அவசியங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலமே இத்திட்டத்தின் நோக்கம் முழுமை பெறும். முந்தைய அரசு, சுகாதார வளாகப் பராமரிப்பிற்கு போதிய முன்னுரிமை அளிக்காததால் பெருமளவில் மகளிர் சுகாதார வளாகங்கள் பயனற்று

போயின. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மகளிர் சுகாதார வளாகங்களையும் உடனடியாக சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள்.

### 3.9 ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டம்

பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளைச் சாா்ந்த கட்டடங்கள் முறையாக, தொடா்ந்து பராமரிக்கப்பட்டு வந்தால் மட்டுமே முழுமையாகப் பயன்படுத்த இயலும் என்பதால் இந்த அரசு ஊரக கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் புனரமைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தும். 2011–12–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். நடப்பாண்டில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்படுவதற்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.

### 3.10 தூய்மையான கிராம இயக்கம்

தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் பொருட்டு இந்த அரசால் 2003–ஆம் ஆண்டில் "தூய்மையான கிராம இயக்கம்"



துவக்கப்பட்டது. இவ்வியக்கம் சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை உள்ளடக்கியதாகும்.

தூய்மையான கிராம இயக்கத்தின் முக்கிய நோக்கம் :

1. திறந்தவெளியில் மலம் கழிப்பதனால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் மற்றும் விளைவுகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
2. பல்வேறு தரப்பு மக்களின் சுகாதாரத் தேவைகளைக் கண்டறிவதுடன், சுகாதாரத்தில் குறிப்பிட்ட இலக்கான மகளிர் மற்றும் குழந்தைகள், இளவயதினர், வயதானோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு சுகாதாரத் தேவையின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தல்.
3. அங்கன்வாடிகள், பள்ளிகள் மற்றும் பொது இடங்கள் ஆகியனவற்றில் சுற்றுச்சூழல் சுகாதாரங்களை மேம்படுத்துதல்.
4. பல்வேறு புவியமைப்புகளில், தண்ணீர் கிடைக்கும் நிலை, நீராதாரம் ஆகியவற்றைக் கண்டறிவதற்கான தொழில் நுட்பங்களை மேம்படுத்துதல்.
5. அறிவுசார் திறமைகள் மூலம் சுகாதாரப் பழக்க வழக்கத்தை ஊக்குவித்து சுற்றுச்சூழல் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.
6. சுற்றுச்சூழல் சுகாதாரத்தைப் பேணுவதில், சமுதாயத்திற்கும் ஊராட்சி அமைப்புகளுக்கும் மேலாண்மைத் திறனைப் பலப்படுத்துதல்.

7. சுகாதாரத்தைப் பேணும் நோக்கில் பணியாற்றும் பலதரப்பட்ட அமைப்புகளை ஒருங்கிணைப்பதன் மூலம் அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளை நிலைப்படுத்துதல்.

மேலும், தீவிர தகவல் தொடர்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலமாக கிராம ஊராட்சிகள் மற்றும் இதரத் துறைகளையும் சமூகத்துடன் ஒருங்கிணைப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

தூய்மையான கிராம இயக்கத்தின் கூறுகள்:

1. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தல்.
2. மழை நீர் சேகரிப்பு மற்றும் கழிவுநீரினை மறு சுழற்சி செய்தல்.
3. திடக்கழிவு மேலாண்மை
4. மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல்.

தனிநபர் இல்லங்கள், பள்ளிகள் ஆகியவற்றில் சுகாதார வசதி மற்றும் திறந்தவெளி மலங்கழித்தலை முழுமையாக அகற்றுவதன் மூலம் தூய்மையான சூழலை உருவாக்கியும், திடக்கழிவு மேலாண்மை மற்றும் நீர் சேகரிப்பு வாயிலாக நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகள் மாநில அரசு வழங்கும் ரூ.5 இலட்சம் ரொக்கப் பரிசு பெறத் தகுதியாகின்றன. அரசு ஒவ்வொரு ஆண்டும்



15 கிராம ஊராட்சிகளுக்கு ரொக்கம் மற்றும் செயலாக்க ஊக்கத்தொகை வழங்கியது. இருப்பினும், முந்தைய அரசால் கைவிடப்பட்ட இத்திட்டமானது ஊரகப் பகுதிகளில் சுகாதாரத்தை மேம்படுத்தி நடைமுறைப்படுத்தும் நோக்கில் மீண்டும் இந்த ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

3.11 தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டம்

நக்சலைட்டுகளின் செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் விதமாகவும், அவர்களின் வளர்ச்சியைத் தடுத்திடும் வகையிலும் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்கான சிறப்புத் திட்டமாக 2003–04–ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீட்டில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் பழுது பார்த்தல், கிராமப்புற இளைஞர்களுக்குத் தேவையான பல்வேறு தொழில் சார்ந்த தளவாடக் கருவிகள் அளித்தல், மாற்றுத்திறனாளிகள், விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்குத் தனிநபர் உதவி வழங்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 2011–12–ஆம் ஆண்டில், ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.12 பகுதி 2 திட்டங்கள்

கீழ்கண்ட ஆறு இனங்களுக்கு ரூ.2.00 கோடி அனுமதிக்க அரசு உத்தேசித்துள்ளது.

| வ. எண். | இனம் | தொகை |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலகத்தின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கணினி மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்துதல் | ரூ.14.20 லட்சம் |
| 2. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கக அலுவலகத்தை நவீனப்படுத்துதல் | ரூ.56.40 லட்சம் |
| 3. | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்திற்கு வாகனம் மற்றும் இதர வசதி ஏற்படுத்துதல் | ரூ.19.40 லட்சம் |
| 4. | பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்கு குடியிருப்புக் கட்டடம் கட்டுதல் | ரூ.35.00 லட்சம் |
| 5. | அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநருக்குக் குடியிருப்புக் கட்டடம் கட்டுதல் | ரூ.35.00 லட்சம் |
| 6. | ஏழு உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) / நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ஆகியோருக்கு வாகனம் வழங்குதல் | ரூ.40.00 லட்சம் |
| மொத்தம் | | ரூ.200.00 லட்சம் |



4. மத்திய அரசு திட்டப் பணிகள்

4.1 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் உருவாக்கப்பட்டு, திட்டத்திற்கு சட்டப் பாதுகாப்பு வழங்கிட நாடாளுமன்றத்தில் செப்டம்பர் 2005ம் ஆண்டு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் இயற்றப்பட்டது.

ஒவ்வொரு நிதியாண்டிலும், ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள, வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு ஆண்டில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலை வாய்ப்பினை அளிப்பதன் மூலம் அவர்களது வாழ்வாதாரப் பாதுகாப்பினை உயர்த்துவதே இச்சட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் உடலுழைப்பினால் செய்யப்படும் வேலைவாய்ப்பினை வழங்குவது இத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோளாகும். வறுமையை உருவாக்கும் காரணிகளான வறட்சி, காடுகள் அழிப்பு, மண் அரிப்பு போன்றவற்றைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் இயற்கை ஆதாரங்களின் மேம்பாட்டினை உறுதி செய்து, நிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் துணைக் குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில், முதலில் இத்திட்டம் 6 மாவட்டங்களில் 2.2.2006ல் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மற்ற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**
**மூன்று கட்டங்களில் விரிவாக்கம்**

| முதற் கட்டம் (2.2.2006 லிருந்து ) | இரண்டாம் கட்டம் (1.4.2007 லிருந்து ) | மூன்றாம் கட்டம் (1.4.2008 லிருந்து) | |
|---|---|---|---|
| 1. கடலூர் | 1. தஞ்சாவூர் | 1. காஞ்சிபுரம் | 11. திருச்சி |
| 2. விழுப்புரம் | 2. திருவாரூர் | 2. திருவள்ளூர் | 12. பெரம்பலூர் |
| 3. திருவண்ணாமலை | 3. கரூர் | 3. வேலூர் | 13. அரியலூர் |
| 4. நாகப்பட்டினம் | 4. திருநெல்வேலி | 4. சேலம் | 14. புதுக்கோட்டை |
| 5. திண்டுக்கல் | | 5. நாமக்கல் | 15. மதுரை |
| 6. சிவகங்கை | | 6. தர்மபுரி | 16. தேனி |
| | | 7. கிருஷ்ணகிரி | 17. இராமநாதபுரம் |
| | | 8. ஈரோடு | 18. விருதுநகர் |
| | | 9. கோயம்புத்தூர் | 19. தூத்துக்குடி |
| | | 10. நீலகிரி | 20. கன்னியாகுமரி |
| | | | 21. திருப்பூர் |

### 4.1.1. திட்டத்தின் சிறப்பம்சங்கள்

1. ஊரகக் குடும்பங்களில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பம் உள்ள வயது வந்தோர், எழுத்து மூலமாகவோ அல்லது வாய் மொழியாகவோ தமது விருப்பத்தினை, கிராம ஊராட்சிக்கு தெரிவித்து பதிவு செய்துகொள்ள வேண்டும்.
2. புகைப்படம் மற்றும் பதிவு எண்ணுடன் கூடிய வேலை அட்டையினை கிராம ஊராட்சி இலவசமாக வழங்கும்.



3. எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ பெறப்பட்ட வேண்டுகோளின்படி 15 நாட்களுக்குள் வேலை அட்டை வழங்கப்படும்.
4. வேலை அட்டை உள்ளோர் எழுத்து மூலமாகவும் வேலை கோரலாம். அத்தருணங்களில், கிராம ஊராட்சி தேதியுடன் கூடிய ஒப்புகைச் சீட்டு வழங்கும். அது அவர்களுக்கு 15 நாட்களுக்குள் வேலை வழங்குவதற்கு உத்தரவாதமாக விளங்கும்.
5. வேலை நடைபெறும் இடம் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும். வேலை நடைபெறும் இடம் 5 கி.மீ. தூரத்திற்கு மேல் இருந்தால், போக்குவரத்து மற்றும் வாழ்வாதாரத் தொகையாக ஊதியத்தில் 10 சதவீதம் கூடுதலாக வழங்கப்படும்.
6. குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948ன்படி, விவசாய தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும்.
7. தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு நபருக்கு ஒரு நாளுக்கான ஊதியம் ரூ.119/– என மத்திய அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
8. ஆண்கள் மற்றும் பெண்களுக்குச் சமஅளவிலான ஊதியம் வழங்கப்படும்.
9. பொதுவாக, வாரம் தோறும் ஊதியம் வழங்கப்படுதல் வேண்டும். 15 நாட்களுக்குள்

ஊதியம் வழங்கப்படுதல் உறுதிசெய்யப்பட வேண்டும்.

10. மூன்றில் ஒரு பங்கு பயனாளிகள் பெண்களாக இருக்க வேண்டும்.
11. வேலை நடைபெறும் இடங்களில், குடிநீர், நிழற் கூடங்கள் போன்ற வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.
12. வழிகாட்டி நெறிமுறைகளின்படி, கிராமத்திற்கான திட்டத் தொகுப்பினை, கிராம சபை ஒப்புதல் அளித்தபின், அதில் 50 விழுக்காடு வேலைகள் கிராம ஊராட்சியின் மூலம் செயல்படுத்த ஒதுக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில், கிராம ஊராட்சியே அனைத்து வேலைகளையும் செயல்படுத்தி வருகிறது.
13. இத்திட்டத்தின் வேலைகளுக்கான ஊதியம் மற்றும் பொருட்களுக்கிடையேயான விகிதாச்சாரம் 60:40 என்று அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 100 விழுக்காடு முழுமையான மனித உழைப்பைக் கொண்டு செய்யப்படும் வேலைகள் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.
14. ஒப்பந்ததாரர்கள் மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது.
15. திறன்சாரா உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கான (unskilled labour) ஊதியச் செலவு 100 விழுக்காடு, கட்டுமானப் பொருட்களின் செலவினம், திறன் சார்ந்த (skilled labour) மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களின் (semi-skilled labour) ஊதியச் செலவில் 75 விழுக்காடு மத்திய அரசால் ஏற்கப்படுகிறது.
16. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் சமூகத் தணிக்கையினை, கிராம சபை, அதற்காக அமைக்கப்பட்டுள்ள “சமூகத் தணிக்கைக் குழு” மூலம் மேற்கொள்ளும்.
17. குறைகளைத் துரிதமாகத் தீர்க்கும் வகையில், குறை தீர்க்கும் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், கட்டணம் இல்லாத் தொலைபேசி சேவை “1299” (Toll free Helpline (1299) ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது.
18. இத்திட்டத்தின் அனைத்துக் கணக்கு மற்றும் ஆவணங்களை பொதுமக்கள் பரிசீலிக்கலாம்.
19. இத்திட்டச் செயல்பாடு குறித்து அறிவுரைகள் வழங்கிடவும், கண்காணிக்கவும் மற்றும் மதிப்பீடு செய்யவும், “தமிழ்நாடு அரசு மாநில வேலை உறுதி மன்றம்” என்ற அமைப்பு தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் பிரிவு 12–ன்படி அமைக்கப்பட்டுள்ளது.

4.1.2 அனுமதிக்கப்பட்ட பணிகள்

1. நீராதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் சேகரிப்புப் பணிகள்.
2. வறட்சியினைத் தடுக்கும் வகையில், காடு வளர்ப்பு மற்றும் மரங்கள் நட்டு வளர்த்தல்.
3. சிறு மற்றும் குறுநீர்ப்பாசனப் பணிகள் உள்ளிட்ட பாசனக் கால்வாய்கள்.
4. தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர், சிறு / குறு விவசாயிகள், நிலச்சீர்திருத்தத் திட்டப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளோர் ஆகியோரின் நிலங்களில் பாசன வசதிகளை ஏற்படுத்துதல், நில மேம்பாட்டுப் பணிகள் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பணிகள்.
5. குளங்கள் / ஏரிகள் தூர் வாருதல் உள்ளிட்ட பாரம்பரிய நீராதார அமைப்புகளைப் புனரமைத்தல்
6. நிலங்களை மேம்படுத்துதல்.
7. நீர் தேங்கக்கூடிய இடங்களில் வடிகால்களை ஏற்படுத்துதல் உள்ளிட்ட வெள்ளத் தடுப்புப் பணிகள்.
8. அனைத்துப் பருவகாலத்திற்கும் ஏற்ற சாலைகள் அமைத்தல் மற்றும் தேவையான இடங்களில் சிறுபாலங்கள் மற்றும் வடிகால்கள் ஏற்படுத்துதல்.



9. மாநில அரசினைக் கலந்தாலோசித்து மத்திய அரசால் தெரிவிக்கப்படும் இதர பணிகள்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தும் பொருட்டு இவ்வரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது:–

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 8 மணிநேர வேலைக்கு ஒரு நபருக்கு ஒரு நாள் ஊதியமாக ரூ.119/– அறிவிக்கப்பட்டுள்ளது. ஊதியம், தொழிலாளர்களால் செய்யப்படுகின்ற வேலையின் அளவைப் பொறுத்தே வழங்கப்படுவதால், தொழிலாளர்கள், பெரும்பாலான நேரங்களில் ரூ.80/– முதல் ரூ.90/– வரை மட்டுமே ஊதியம் பெறும் நிலை உள்ளது. ஆகையால், இத்திட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு இயக்கம் மற்றும் விரிவான விளம்பரங்கள் வாயிலாக இத்திட்டத்தில் செய்யப்பட வேண்டிய பணியின் அளவு குறித்து அறியச் செய்து முழு ஊதியமான ரூ.119/–ஐப் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.
- இத்திட்டத்தின் கீழ், தாழ்த்தப்பட்ட/ பழங்குடியினர், சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலச் சீர்திருத்தப் பயனாளிகள், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டப் பயனாளிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும்

மக்கள் ஆகியோரின் நிலங்கள் மேம்படுத்தப்படலாம். இவ்வாறான நிலச் சீர்த்திருத்தப் பணிகள் சில மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய பணிகளை இத்திட்டத்தின் மூலம் எடுத்துச் செய்வது குறித்து இவ்வரசு விரிவாக ஆய்வு செய்து நிலமேம்பாட்டுப் பணிகள், பாசனப் பணிகள், தோட்டக் கலை போன்ற பணிகளை தகுதியுடையவர்களின் நிலங்களில் செயல்படுத்த வழிவகை செய்யும்.

- இத்திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட வேலைக்கான ஊதியத்தினை அவ்வார இறுதியில் ஊதியம் வழங்கும் நாளில் ரொக்கமாகப் பணம் வழங்கப்படும் நிலையை மாற்றி தொழிலாளர்களின் வங்கிக் கணக்கில் செலுத்துவதற்கான தக்க ஏற்பாடுகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். இதன் மூலம் முறைகேடுகள் தடுக்கப்படுவதுடன், திட்டச் செயல்பாட்டு முகமையும், பணம் வழங்கும் முகமையும் வெவ்வேறாக அமைவதை இந்த அரசு உறுதி செய்யும்.

- தற்போது இத்திட்டத்தின் கீழ் ஒரு கிராம ஊராட்சியில் ஒரே நேரத்தில் ஒரு பணி மட்டுமே எடுத்துச் செய்யப்படுகின்றது. இதனால், ஒரே பணித்தளத்தில் அதிக அளவு பணியாளர்கள் கூடுவதால் பணிகளை முறையாகக் கண்காணிக்க



இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, ஒரு கிராம ஊராட்சியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகள் செய்வதற்கு அனுமதிப்பதோடு அவற்றை கண்காணிக்க ஒவ்வொரு பணிக்கும் ஒரு பணித்தள உதவியாளர் (Work Site Assistant) நியமிக்கப்படுவார்.

- தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணிகளைச் செய்வதற்குப் பெருமளவு பணியாளர்கள் சென்று விடுவதால், விவசாயப் பணிகளை மேற்கொள்வதற்கு பணியாளர்கள் உரிய காலத்தில் கிடைக்கவில்லை என விவசாயத்தைச் சார்ந்திருப்போரால் தொடர்ந்து முறையீடு செய்யப்படுகிறது. எனவே, விவசாயப் பணிக் காலத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் திட்ட இடைவேளை அளித்திட மத்திய அரசிடம் கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

- இந்த அரசு, இத்திட்டத்திற்கான நிதியினை, திட்டச் செயலாக்க முகமைகளுக்குத் துரிதமாக மாற்றம் செய்திட முடிவு செய்துள்ளது. அதன்படி, தொடர்பு வங்கிகளில் நிர்வகிக்கப்படும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியினை மின்னணு பரிமாற்றம் (Electronic Transfer) மூலம் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு ஒரு மணி

நேரத்திற்குள் மாற்றம் செய்திட வழிவகை செய்யப்படும்.

- செயற்கைக்கோள் உதவியுடன் தயாரிக்கப்பட்ட வரைபடங்களின் மூலம் நீராதாரங்களின் தற்போதைய நிலையினைக் கண்டறிந்து, நீராதாரப் பணிகள் மேற்கொள்ளப்படுவதில் முன்னுரிமை அளிப்பதில் சரியான நடைமுறை பின்பற்றப்பட்டு, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் குட்டைகள், குளங்கள், ஊரணிகள் தூர்வாரும் பணிகளை அங்கொன்றும் இங்கொன்றுமாக மேற்கொள்ளப்படுவது தவிர்க்கப்படும்.
- அரசால் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய திட்டம் 'மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டமாகும்'. ஆகையால், இத்திட்ட செயல்பாட்டினைப் பணி நடைபெறும்போதே முறையாகக் கண்காணித்தல் (Real time monitoring) அவசியமானதாகும். அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒரே நேரத்தில் இப்பணிகள் மேற்கொள்ளப்படுவதால், வட்டாரம் முதல் மாநில அளவிலான அலுவலர்கள் வரை பணிகளின் முன்னேற்றத்தினை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் வகையில், இந்த அரசு குறுஞ்செய்தி மூலமான கண்காணிப்பை (SMS based monitoring) அறிமுகப்படுத்திட உள்ளது.



2011–12 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 3,472 கோடிக்கான மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### 4.2 இந்திரா நினைவு குடியிருப்பு திட்டம்

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒரு அங்கமாக இருந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தனித் திட்டமாக ஜனவரி 1996 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வீடற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஆதிதிராவிட, பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு இலவச வீடுகள் கட்டித் தருதல் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். கிராம சபையினால் ஒப்பளிக்கப்பட்ட வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களின் பட்டியலில் இருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்திற்கான ஒதுக்கீட்டில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு (SC/ST) புதிய வீடுகள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படும். அதிகபட்சமாக 40 விழுக்காடு ஒதுக்கீடு தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் அல்லாத பிற வகுப்பினைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் நபர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். மேற்கண்ட இனங்களில் 3 விழுக்காடு உடல்

ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு ஒதுக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்ட வீடுகளில் 15 விழுக்காடு சிறுபான்மையினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமெனவும் மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.45,000/– என மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு பங்களிப்பு 75:25 விழுக்காடு ஆகும். மத்திய அரசு ரூ. 33,750/– மற்றும் மாநில அரசு ரூ.11,250/– வழங்குகின்றன. இதுதவிர, தமிழக அரசால் கூடுதலாக ரூ. 30,000/– கான்கிரீட் கூரை அமைப்பதற்கு வழங்கப்பட்டு, 2010–11 வரை தமிழகத்தில் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை ரூ.75,000/– ஆக இருந்தது. இந்த ஆண்டு முதல், மாநில அரசால் கான்கிரீட் கூரை அமைப்பதற்காக வழங்கப்பட்ட தொகையான ரூ.30,000/–, ரூ.55,000/–ஆக உயர்த்தப்படுகிறது. எனவே, தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் கட்டப்படும் வீடு ஒன்றிற்கான அலகுத்தொகை ரூ.75,000/– லிருந்து ரூ.1 லட்சமாக உயர்த்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்ந்தெடுக்கக் கிராம சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. வீடுகள், பெண்கள் பெயரிலோ அல்லது கணவர் மற்றும் மனைவி பெயரிலோ ஒதுக்கீடு செய்யலாம். முழு சுகாதாரத் திட்ட ஒதுக்கீட்டினை ஒருங்கிணைத்து அனைத்து வீடுகளிலும் கழிப்பறை வசதி



ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயனாளிகளே வீட்டைக் கட்டிக் கொள்ள வேண்டும்.

2011ï 12–ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 1,00,553 வீடுகள் ரூ.1,005.53 கோடி செலவில் கட்டப்பட உள்ளது. இதில், மாநில அரசின் நிதி ஒதுக்கீடு மட்டும் ரூ.666.16 கோடி (66.25 விழுக்காடு) ஆகும்.

### 4.3 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1993–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் துவங்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூர் தேவைக்கேற்ப நிலையான சமுதாயச் சொத்துக்கள் மற்றும் சமுதாயக் கட்டமைப்புப் பணிகளை உள்ளடக்கிய அடிப்படை வசதிகளுக்கான வளர்ச்சிப் பணிகளை பரிந்துரைப்பர்.

நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) ரூ.2 கோடி வீதம் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. மத்திய அரசு 2011–12–ஆம் ஆண்டு முதல் தற்போதைய ஒதுக்கீட்டுத் தொகையான ரூ.2 கோடியினை ரூ.5 கோடியாக உயர்த்தியுள்ளது.

மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலேயே இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களைப் பொறுத்தவரை, அவரவர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத்திற்குள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் பணிகளைப் பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை, இந்தியாவில் எந்தப் பகுதியிலும் பணிகளைச் செயல்படுத்தப் பரிந்துரைக்கலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர், தனக்குத் தேவையான ஒருங்கிணைப்பு மாவட்டத்தினை (Nodal District) தேர்வு செய்து, புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்துக்கு தெரிவிக்கலாம். மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதி ஒரு மாவட்டத்திற்கும் மேல் இருப்பின், மக்களவை உறுப்பினர் ஏதேனும் ஒரு மாவட்டத்தினை ஒருங்கிணைப்பு மாவட்டமாக தேர்வு செய்யலாம்.

நாடாளுமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் நிலையான சொத்துக்களை உருவாக்கிடக் குறிப்பாகக் குடிநீர் பணிகள், கல்வி, மக்கள் நல்வாழ்வு, சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகளை பரிந்துரை செய்யலாம். நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியில் 15 விழுக்காடு தாழ்த்தப்பட்ட பிரிவினர் வசிக்கும் பகுதிகளுக்கும், 7.5 விழுக்காடு பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளுக்கும் பயன்படுத்தப்பட



வேண்டும். நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் பழங்குடியினர் வாழும் பகுதி இல்லையெனில் வரையறுக்கப்பட்ட நிதியினைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதிகளுக்கு பயன்படுத்தலாம். அதேபோல, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாழும் பகுதி இல்லையெனில் பழங்குடியினர் வாழும் பகுதிக்கு ஒதுக்கீடு செய்யலாம்.

வெள்ளம், புயல், சுனாமி , பூகம்பம் மற்றும் வறட்சி போன்ற பேரிடர்களால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் பணிகளை பரிந்துரை செய்யலாம். பேரிடர் பாதிக்கப்படாத பகுதியில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர், பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் செய்யப்பட வேண்டிய பணிகளுக்காக இத்திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை பரிந்துரை செய்யலாம். ஒருவேளை, பேரிடரின் விளைவு கடுமையாக இருப்பின், பாதிக்கப்பட்ட மாவட்டத்திற்கு அதிகபட்சமாக ரூ.50 லட்சம் வரை பணிகளுக்காக பரிந்துரை செய்யலாம்.

இத்திட்டத்திற்கான நிதி, மத்திய அரசால் இரண்டு தவணைகளாக விடுவிக்கப்படுகிறது. முந்தைய ஆண்டின் இரண்டாவது தவணை சம்மந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, முதல் தவணை, நிதி ஆண்டின் தொடக்கத்திலேயே விடுவிக்கப்படும். மேற்கொள்ளப்பட்ட செலவினம் மற்றும் அனுப்பப்பட்ட பயன்பாட்டுச் சான்றுகளின்

அடிப்படையில் இரண்டாம் தவணைத் தொகை விடுவிக்கப்படும்.

மத்திய அரசால் விடுவிக்கப்படும் தொகையில், ஒரு நிதியாண்டில் செலவிடப்படாமல் இருப்பில் உள்ள தொகையினை அடுத்து வரும் நிதியாண்டிலும் பயன்படுத்தலாம். ஒரு நாடாளுமன்ற தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில், பயன்படுத்தப்படாத நிதியினை அந்தத் தொகுதியில் அடுத்து வரும் நாடாளுமன்ற உறுப்பினரால் பயன்படுத்த ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒரு ஆண்டில் முடிக்கப்பட்ட பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத் தொகையில் 0.5 விழுக்காடு நிதியினை சம்மந்தப்பட்ட மாவட்டங்களில் எழுதுபொருள்கள், அலுவலகத் தளவாடங்கள், தொலைபேசி கட்டணம் போன்ற சில்லரைச் செலவினங்களுக்குப் பயன்படுத்தலாம்.



**4.3.1** நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தடை செய்யப்பட்ட பணிகள் விவரம்

1. மத்திய, மாநில அரசு மற்றும் அது சார்ந்த துறைகள், அரசு முகமைகள்/நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள்.
2. தனியார், கூட்டுறவு மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகம், குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் இதர பணிகள்.
3. வணிக நோக்குடன்கூடியஅனைத்து வகையான பணிகள்
4. அனைத்து வகையான பராமரிப்புப் பணிகள்
5. அனைத்து வகையான புதுப்பித்தல் மற்றும் பழுது பார்த்தல் பணிகள்
6. மானியம் மற்றும் கடன், மத்திய, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்குப் பங்களிப்பு செலுத்துதல்.
7. உருவாக்கப்பட்ட சொத்துக்களில் தனிநபர் பெயர் வைத்தல்
8. அனைத்து வகையான அசையும் சொத்துக்கள் வாங்குதல்

9. நிலஎடுப்பு அல்லது எடுக்கப்பட்ட நிலத்திற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்
10. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள்அல்லது பகுதியாக முடிக்கப்பட்ட பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை மீள ஈடு செய்தல்.
11. தனிநபர்/குடும்பம் பயன் பெறும் சொத்துக்களை உருவாக்குதல்
12. அனைத்து வகையான வருவாய் மற்றும் தொடர் செலவினங்கள்
13. மதவழிபாட்டு இடங்கள் மற்றும் மத அமைப்புகள், குழுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் பணிகள்.

மத்திய அரசின் (புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்) இணைய தளத்தின்படி தமிழ்நாடு, தேசிய அளவில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் 1993 ஆம் ஆண்டிலிருந்து ஒருங்கிணைந்த நிதிப் பயன்பாட்டில், 97.29 விழுக்காட்டை அடைந்து நாட்டிலேயே மூன்றாவது இடத்தில் உள்ளது.

2011–12–ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செய்யப்படும் பணிகளுக்கு ரூ.285 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



4.4 முழு சுகாதார இயக்கம்

முழு சுகாதார இயக்கம் முதலாவதாக கடலூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் தொடங்கப்பட்டு 2004 ஆம் ஆண்டு வரை அனைத்து மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டக் காலம் 1999 முதல் 2012 வரை ஆகும்.

ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி, திறந்தவெளி மலம் கழித்தலை அடியோடு ஒழிப்பதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய அரசின் ராஜுவ்காந்தி தேசிய குடிநீர் இயக்கத்தால் ''முழு சுகாதார இயக்கம்'' ஆரம்பிக்கப்பட்டது. ஊரக சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து வீடுகளுக்கும் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள், சுகாதாரப் பழக்கங்களில் முன்னேற்றம் ஆகியவற்றை ஏற்படுத்துவதாகும். தேவையின் அடிப்படையிலும், மக்களை மையப்படுத்தியும் ஊரக ஏழைக் குடும்பங்கள் குறைந்த அளவு மானியத்துடன் கூடிய கழிப்பிடங்கள் கட்டுவதற்கு இத்திட்டம் ஊக்கம் அளிக்கிறது. ஊராட்சி அமைப்புகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளை ஈடுபடுத்தி, செய்தி, கல்வி மற்றும் தொடர்பு, திறன் வளர்த்தல் மற்றும் சுகாதாரக் கல்வி ஆகியவற்றைச் செம்மையாக அளிப்பதன் மூலம் ஊரக மக்களின் செயல்பாடுகளில் மாற்றம் கொண்டுவருவதை முழு சுகாதார இயக்கம் வலியுறுத்துகிறது.

இத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாக, தனிநபர் இல்லக் கழிப்பிடம், பள்ளி சுகாதாரம், சுகாதாரக் கல்வி, சமூகச் சுகாதார வளாகம் மற்றும் அங்கன்வாடிக் கழிப்பிடம் ஆகியவை இனங்காணப்பட்டுள்ளன.

மத்திய, மாநில அரசுகள் மற்றும் பயனாளிகளின் பங்களிப்பு கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

(ரூபாயில்)

| வ. எண் | கூறுகள் | மத்திய அரசு | மாநில அரசு | பயனாளியின் பங்குத் தொகை | மொத்த அலகுத் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | தனிநபர் கழிப்பறை | 2,200 (63%) | 1,000 (28%) | 300 (9%) | 3,500 |
| 2 | பள்ளிக்கழிப்பறை | 24,500 (70%) | 10,500 (30%) | 0 | 35,000 |
| 3 | அங்கன்வாடி கழிப்பறை | 5,600 (70%) | 2,400 (30%) | 0 | 8,000 |
| 4 | சுகாதார வளாகங்கள் | 1,20,000 (60%) | 40,000 (20%) | 40,000 (20%) | 2,00,000 |

இத்திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1064.25 கோடி ஆகும். அவற்றில் இதுவரை ரூ.725.73 கோடி விடுவிக்கப்பட்டு ரூ.609.47 கோடி செலவிடப்பட்டுள்ளது.



### 4.4.1 தனிநபர் இல்லக்கழிப்பிடங்கள்

இதன் முக்கிய நோக்கம்

- ஊரகப் பகுதிகளில், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- ஊரகப் பகுதிகளில் சுகாதாரம் முழுமை பெறுவதை விரைவுபடுத்துதல்.
- சுகாதாரக் கல்வி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சுகாதார வசதியின் அவசியத்தை உணரச் செய்தல்
- ஊரகப் பகுதிகளிலுள்ள பள்ளிகள் / அங்கன்வாடிகளில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி அதன் மூலம் சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதாரப் பழக்கங்கள் மாணவர்களைச் சென்றடையச் செய்தல்.
- சுகாதாரத்திற்கான குறைந்த செலவுள்ள, சரியான தொழில் நுட்பங்களை ஊக்குவித்தல்.
- திறந்தவெளி மலங்கழிக்கும் பழக்கத்தை முற்றிலும் அகற்றி, தண்ணீர் மற்றும் உணவு மாசுபடுதலைத் தடுத்தல்
- உலர் கழிப்பிடங்களைத் (dry latrines), தண்ணீர் ஊற்றிப் பயன்படுத்தும் கழிப்பிடங்களாக (flush out latrines) மாற்றுவதன் மூலம் மனித கழிவுகளைத் துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு சுத்தப்படுத்தும் அவல நிலையை அகற்றுதல்.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடும்பங்களையும் இத்திட்டத்தின் கீழ்கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும். வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள அனைவருக்கும் ஊக்கத் தொகை அளிப்பதன் மூலம் சமுதாயத்தை முழு ஈடுபாட்டுடன் இத்திட்டத்தில் பங்கேற்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள மக்களையும் அவர்களின் வீடுகளில் சொந்தச் செலவிலேயே கழிப்பிடங்களைக் கட்ட ஊக்கப்படுத்தப்படுகின்றனர். தனிநபர் இல்லக் கழிப்பிடங்களை வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் தாங்களாகவே கட்டிக் கொள்கின்றனர். தமிழ்நாட்டில் கட்டப்பட வேண்டிய தனி நபர் இல்லக் கழிப்பிடங்களின் இலக்கு 44,22,133 ஆகும். அவற்றில் 31.7.2011 வரை 37,06,650 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 7,15,483 கழிப்பிடங்களில் 5,22,214 தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள் 2011–12–ஆம் ஆண்டில் கட்டப்பட உள்ளன.

தற்போதுள்ள விதிமுறைகளின்படி தனிநபர் கழிப்பிடத்திற்கு ரூ.3,500/– அலகுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டு, ரூ.2,200/– மத்திய அரசாலும் ரூ.1000/– மாநில அரசாலும் மானியமாக வழங்கப்படுகிறது. இதற்கான பயனாளிகளின் பங்குத் தொகை ரூ.300/– ஆகும்.



### 4.4.2 பள்ளி சுகாதாரமும், சுகாதாரக் கல்வியும்

மாணவர்கள், புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் திறன் கொண்டவர்களாதலால் திறந்தவெளி மலம் கழித்தலைத் தவிர்த்துக் கழிப்பிடங்களை உபயோகிப்பதைக் கல்வி மற்றும் ஊக்கப்படுத்துதல் மூலம் அவர்களின் எண்ணங்கள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றுவதில் பள்ளிகளும், அங்கன்வாடிகளும் சிறந்த பங்கு வகிக்கின்றன. ஆசிரியர்கள் புகட்டும் சுகாதாரக் கல்வி மற்றும் கழிப்பிடங்களை உபயோகிப்பதால் கிடைக்கும் அனுபவம், மாணவர்கள் மூலம் வீடுகளை அடைந்து அதன் மூலம் பெற்றோர்கள் சுகாதாரப் பழக்கங்களைக் கடைபிடிக்கின்றனர். எனவே, பள்ளி சுகாதாரம், முழு சுகாதாரத் திட்டத்தில் முக்கியப் பங்காற்றுகிறது. ஆரம்பப்பள்ளி, உயர் நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்கள் என அனைத்து வகையான கல்வி நிறுவனங்களிலும் இத்திட்டத்தின் மூலம் கழிப்பிடங்கள் கட்டப்படுகின்றன. பெண்கள் பயிலும் பள்ளிகளில் கழிப்பறை கட்ட அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் சுகாதாரக் கல்வி தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பள்ளிக் கல்வித்துறையுடன் ஒருங்கிணைந்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்துப் பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவதை இந்த அரசு உறுதி செய்யும்.

முழு சுகாதார இயக்கத் திட்டத்தில் பள்ளி சுகாதாரத்திற்கான மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி 70:30 என்ற விகிதத்தில் அளிக்கப்படுகிறது. ரூ.118.09 கோடி மதிப்பீட்டில் 53,678 பள்ளிக்கழிப்பிடங்கள் கட்ட நிர்ணயிக்கப்பட்ட இலக்கில், இதுவரை 40,201 பள்ளிக் கழிப்பிடங்கள் ரூ.88.44 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. ரூ.47.170 கோடி மதிப்பீட்டில் மீதமுள்ள 13,477 பள்ளிக் கழிப்பிடங்கள் 2011–12–ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும்.

### 4.4.3 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள்

குழந்தைகளின் இளவயதிலேயே சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அங்கன்வாடிக் கழிப்பறைகள் அமைத்து அதனைப் பயன்படுத்தச் செய்வதன் மூலம் அவர்களிடையே சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றச் செய்து மாணவர்களுக்கும், அங்கன்வாடிகளில் இருந்து மாணவர்களை அழைத்துச் செல்ல வருகைதரும் தாய்மார்களுக்கும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமாகும். அங்கன்வாடிகளில் குழந்தைகள் பயன்படுத்துவதற்கேற்ற கழிப்பிடங்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் 24,212 அங்கன்வாடிக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 3,758 கழிப்பிடங்கள் 2011–12–ஆம் ஆண்டில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளது. எனினும், மாவட்டங்களில் பள்ளி மற்றும் அங்கன்வாடிகளின் 



தேவையை மீண்டும் கணக்கிட்டுக் கூடுதல் எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் வரும் நிதியாண்டில் கட்டப்படும்.

### 4.4.4 சமூக சுகாதார வளாகங்கள்

முழு சுகாதார இயக்கத்தில், சமூக சுகாதார வளாகம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. கிராமத்தில் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய மற்றும் எளிதில் அணுகக்கூடிய இடத்தில் சுகாதார வளாகங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வளாகங்களை, கிராம ஊராட்சிகள் முறையாகப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டும் அல்லது அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

மத்திய அரசு, மாநில அரசு மற்றும் சமுதாயப் பங்குத் தொகை 60:20:20 என்ற விகிதத்தில் அமைந்துள்ளது. கிராம ஊராட்சி, சமுதாயப் பங்களிப்பையும் அளிக்கலாம். 1,438 வளாகங்கள் கட்டப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலையில், இதுவரை 1,548 வளாகங்கள் ரூ.23.22 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

### 4.4.5 ஊரக சுகாதார அங்காடிகள்

ஊரக சுகாதார அங்காடிகள், சமூக நோக்குடன் உள்ள வர்த்தகச் செயல்பாட்டு அமைப்பு ஆகும். சுகாதார வளாகங்கள் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் மற்றும்

ஊரகப் பகுதிகளில் உள்ள தனி நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கழிப்பறை கட்டத் தேவையான பொருட்களை வழங்குவதே ஊரக சுகாதார அங்காடிகளின் நோக்கமாகும். சம்மந்தப்பட்ட பகுதிகளுக்கேற்ற தொழில் நுட்பம் மற்றும் நிதி வசதிகளுக்கு ஏற்பக் கட்டப்படும் பல்வேறு விதமான கழிப்பிடங்களுக்கான பொருட்கள், அவை சார்ந்த சேவை மற்றும் ஆலோசனை வழங்குதல் ஆகியவை இதன் குறிக்கோளாகும். இந்த அங்காடிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், மகளிர் நிறுவனங்கள், ஊராட்சி அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளால் துவக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களில், 195 அங்காடிகள் ரூ.2.93 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளன.

### 4.4.6 உற்பத்தி மையங்கள்

குறைந்த செலவில், தரமான கட்டுமானப் பொருட்களின் உற்பத்தியை பெருக்குவதற்கு இந்த உற்பத்தி மையங்கள் உதவி புரிகின்றன. ஒவ்வொரு மையத்தினை அமைப்பதற்கும், கொத்தனார் பயிற்சி மற்றும் சுழல் நிதிக்காக அதிகபட்சம் ரூ.3.50 லட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை, ரூ. 65 லட்சம் செலவில் 65 உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



### 4.4.7 நிர்மல் கிராம புரஸ்கார் விருது

சுகாதாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக ஜுலை 2003–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ‘‘தூய்மையான கிராம இயக்கம்‘‘ என்ற விருது, சுகாதார திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, மத்திய அரசாலும், முழு சுகாதார இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நிர்மல் கிராம புரஸ்கார் விருது 2005–லிருந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது தங்கள் பகுதிகளில் முழு சுகாதாரத்தை எய்தும் ஊராட்சிகளுக்கும் இதர அமைப்புகளுக்கும் ஒரு அங்கீகாரமாகத் திகழ்கிறது.

இதன் நோக்கம்

1. சமூக மற்றும் அரசியல் தொடர்புகளை ஏற்படுத்தி இந்தியாவில் உள்ள ஊரகப் பகுதிகளில் சுகாதார வசதியினை மேம்படுத்தி வளர்ச்சி பெறச் செய்தல்.
2. திறந்தவெளியில் மலம் கழித்தலைத் தடுத்தலும் தூய்மையான கிராமத்தை உருவாக்குதலும்.
3. முழுசுகாதார இயக்கத்தை, தொடர்ந்து வெற்றிகரமாகச் செயல்படுத்த ஊராட்சி அமைப்புகளை ஊக்குவித்தல்.

4. முழு சுகாதாரத்தை எய்தப் பாடுபடும் அமைப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்.

இதுவரை தமிழ்நாட்டில் 5 வட்டார ஊராட்சிகள் மற்றும் 2,334 கிராம ஊராட்சிகள் சுகாதாரம் மற்றும் முழுமையான தூய்மைக்காக இவ்விருதினைப் பெற்றுள்ளன. இந்த விருதுக்குரிய தொகை ரூ.50,000/–ல் இருந்து ரூ.5 லட்சம் வரை கிராம ஊராட்சிகளுக்கும் ரூ.10 லட்சத்திலிருந்து ரூ.20 லட்சம் வரை வட்டார ஊராட்சிகளுக்கும் மக்கள் தொகைக்கேற்ப வழங்கப்படுகிறது.

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில், சுகாதாரமான மற்றும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராமங்களை உருவாக்க பல ஊடக மக்கள்தொடர்பு சாதனங்கள் (Multi-media) மூலம் இந்த அரசு உறுதி செய்யும்.

4.5 பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (**BRGF)**

தமிழகத்தில் பின்தங்கிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட தேசிய வளர்ச்சி மற்றும் புனரமைப்புத் திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) மத்திய திட்டக் குழுவிலிருந்து மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சகத்திற்கு 2006–07 முதல் மாற்றப்பட்டது. பஞ்சாயத்து ராஜ்



அமைச்சகம் இத்திட்டத்தைப் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி (Backward Regions Grant Fund) என மாற்றியமைத்தது. இத்திட்டம், தற்போது தமிழ்நாட்டில் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், திண்டுக்கல் மற்றும் சிவகங்கை ஆகிய ஆறு மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சியில் பல்வேறு பகுதிகளில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் கண்டறிந்து அவற்றைக் களைவதற்காக உருவாக்கப்பட்டதே பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதி ஆகும். தற்போதுள்ள திட்டங்களின் செயல்பாடுகளால் வளர்ச்சியில் முழுமை பெறாத பகுதிகளுக்கு ஏற்றவாறு இது வடிவமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகளின் திட்டமிடல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை மேம்படுத்துதல், அவைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட முக்கியக் கடமைகளை நிறைவேற்றுதலில் திறனை மேம்படுத்த உதவுதல் மற்றும் வளர்ச்சியில் ஏற்றத்தாழ்வுகளைக் களைதல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

இத்திட்டத்தின் கீழ் இரு வழிகளில் நிதி அளிக்கப்படுகிறது.

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தொடர்புடைய

அலுவலர்களுக்குப் பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் வகையில் திட்டமிடல், செயலாக்கம், கண்காணித்தல், கணக்குகளைப் பராமரித்தல் ஆகியவற்றிற்கான திறனை மேம்படுத்தப் பயிற்சி அளித்தல்.

2. ஊராட்சிகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் பகுதிகளில் உள்ள அடைப்படை வசதிகளில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் களையும் விதமாக மக்களோடு இணைந்து திட்டமிடல் வாயிலாக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தும் வகையில் வரையறுக்கப்படாத மானியத்தை வழங்குதல்.

விடுவிக்கப்பட்ட நிதி விவரம்

அ) மறைமலை நகரிலுள்ள மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு திறன்வளர் பயிற்சிக்காக ரூ.21.55 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆ) வரையறுக்கப்படாத நிதி 6 மாவட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு விடுவிக்கப்பட்டுள்ளது.



| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | விடுவிக்கப்பட்ட தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | நாகப்பட்டினம் | 36.94 |
| 2 | சிவகங்கை | 38.19 |
| 3 | விழுப்புரம் | 55.66 |
| 4 | திருவண்ணாமலை | 47.26 |
| 5 | திண்டுக்கல் | 45.85 |
| 6 | கடலூர் | 43.44 |
| மொத்தம் | | 267.34 |

2011–12–ஆம் ஆண்டு செயலாக்கத் திட்டம் ரூ. 117.14 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, நிதி விடுவிக்கும் பொருட்டு மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 4.6 தேசிய கரிமவாயுத் திட்டம்

காகிதம் மற்றும் சர்க்கரை உற்பத்திக் கழிவுகள், கால்நடைக் கழிவுகள் போன்ற கழிவுகளில் இருந்து கரிமவாயுவினை எளிதாக உற்பத்தி செய்யலாம். இது போன்ற கழிவுகளைச் சேகரித்து இயற்கையாக இரசாயன மாற்றத்திற்கு உட்படுத்தி எளிதில் எரிகின்ற தன்மையுடைய மீத்தேன் வாயுவினை உற்பத்தி செய்யலாம். அதிக அளவு

எரிசக்தித் தேவைகளைத் நிறைவு செய்திடக் கரிம வாயு பெருமளவில் உதவி புரிகின்றது. சுற்றுச் சூழலுக்கு ஊறுவிளைவிக்காத, பல நன்மைகளை அளிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தியை உற்பத்தி செய்வதே கரிமவாயுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இயற்கை எரிவாயு மற்றும் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் எரிபொருளின் உபயோகத்தைக் குறைக்கும் வகையில் சமையலுக்குத் தேவையான சுத்தமான எரிபொருளை உற்பத்தி செய்வதும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

சாண எரிவாயு உருவாக்குவதன் மூலம் இரசாயன உரங்கள் பயன்பாட்டைக் குறைத்து இயற்கை உரங்கள் பயன்படுத்துதலை ஊக்குவிப்பதுடன், கிராமப்புற மகளிர், சமையலுக்காக விறகுகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் இன்னல்களை நீக்கி, காடுகளையும் பாதுகாக்கின்றது. மேலும், கரிம வாயுக்கலன்களுடன் கிராமங்களிலுள்ள கழிவறைகளை இணைப்பதன் மூலம் கிராம சுகாதாரத்தை மேம்படுத்த உதவுகிறது. அத்துடன் ஊறு விளைவிக்கக்கூடிய புகை வெளியேறுவதைக் கட்டுப்படுத்தி, தட்பவெப்ப மாறுதலைப் பாதுகாக்கின்றது.

**2011–12–**ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் **1000** கரிம வாயுக் கலன்கள் அமைத்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான நிதி பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



| வ. எண். | விபரங்கள் | அமைக்கப் பட உள்ள அலகு | தொகை (ரூபாயில்) | மொத்தம் (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1. | மானியம் | 1000 | 8,000 | 80,00,000 |
| 2. | திட்ட முகவர் ஊக்கத் தொகை | 500 | 1,500 | 7,50,000 |
| 3. | சாண எரிவாயு கலனுடன் கழிவறை இணைப்பு | 200 | 1,000 | 2,00,000 |
| 4. | பயனாளிகளுக்கான பயிற்சி | 50 | 2,000 | 1,00,000 |
| 5. | கொத்தனார் பயிற்சி | 2 | 37,500 | 75,000 |
| | மொத்தம் | | | 91,25,000 |

## 5. சாலைகள்

ஊரகப் பகுதிகளில் விரைவான மற்றும் தொடந்து நிலையான வளர்ச்சி, வறுமை ஒழிப்பு மற்றும் சமூக பொருளாதார மாற்றம் ஏற்படுவதற்கு அனைத்து பருவ காலங்களிலும் பயன்படுத்தக்கூடிய வகையில் உள்ள ஊரக இணைப்புச் சாலைகள் மிகவும் அவசியம். வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் சுகாதார மேம்பாட்டிற்குத் தரமான சாலை வசதி இன்றியமையாதது. ஒரு பகுதியின் சமூகப் பொருளாதார வளர்ச்சி அப்பகுதியில் அமைந்துள்ள தரமான சாலைகளின் நிலையினைப் பொறுத்தே அமையும்.

குக்கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகள் கிராமப்புற மக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும். குறிப்பாக விவசாயத்திற்குத் தேவையான மூலப்பொருட்களின் இருப்பு, பயிரிடும் முறைகளின் மாற்றம், விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதி, விவசாய உற்பத்தி பொருட்களுக்கு போதிய விலை நிர்ணயம் மற்றும் பால் உற்பத்திப் பெருக்கம் ஆகியவற்றிற்கு போதிய இணைப்புச் சாலைகள் இருப்பது மிகவும் அவசியம்.

இந்த அரசு ஏற்கனவே ‘‘மக்கள் தொகை 500க்கு அதிகமாக உள்ள அனைத்து கிராமங்களுக்கும் தார்சாலைகள் அமைக்கப்படும். பிற குடியிருப்புகளுக்கு எல்லா பருவ காலத்திலும் பயன்படுத்தக்கூடிய வகையில் சாலைகள் அமைக்கப்படும்’’ என்று அறிவித்துள்ளது.

மாநிலத்தின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்துவது இந்த அரசின் நோக்கமாகும். மேலும், தொலைதூரப் பகுதிகளிலுள்ள குக்கிராமங்களுக்கும் நல்ல சாலை வசதிகளை இந்த அரசு ஏற்படுத்தித் தரும். புதிய சாலைகளை அமைப்பது மற்றும் பழுதுபட்ட சாலைகளை மேம்படுத்துவதன் மூலமாக பொருட்கள் பரிமாற்றம் மற்றும் மக்களின் போக்குவரத்து அதிகரித்து வேலைவாய்ப்பு பெருகும்.



### 5.1 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

சாலை வசதியில்லாத குக்கிராமங்களுக்கு அனைத்து பருவ காலத்திற்கும் ஏற்ற சாலை வசதியினை ஏற்படுத்தித் தருவதற்காக மத்திய அரசால் 2000ம் ஆண்டில் பிரதம மந்திரி கிராமச் சாலை திட்டம் துவங்கப்பட்டது. இத்திட்டம் 100 விழுக்காடு மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

ஆண்டு முழுவதும், அனைத்து பருவகாலங்களிலும் பயன்படுத்தத் தக்கவகையில் தேவையான சிறு பாலங்கள் மற்றும் வடிகால் வசதிகளுடன் கூடிய சாலைகள் அமைப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

இத்திட்டத்தின் முதல் ஏழு கட்டங்களில், அதாவது 2000–2001ல் இருந்து 2007–08 (பாரத் நிர்மான் கட்டம் II) வரை 9,984.32 கி.மீ. நீளமுள்ள 4,949 சாலைப்பணிகள், மொத்தம் ரூ.2,024 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில், 4801 பணிகள் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும். தற்போது ரூ.577.90 கோடி மதிப்பீட்டில் 2,031 கி.மீ. நீளமுள்ள 1,176 சாலைகளை மேம்பாடு செய்ய பாரத் நிர்மான்–III-ன் (பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் கட்டம் VIII) கீழ் விரிவான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அதற்கான கருத்துரு, தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமைக்கு

அனுப்ப தயார் நிலையில் உள்ளது. இருப்பினும், மத்திய அரசின் தற்போதைய நெறிமுறைகளின்படி, கீழ்க்கண்ட வகையிலான சாலைப் பணிகளை மட்டுமே பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்ய இயலும்.

i) பாரத் நிர்மான் திட்டத்தின் முதல் கட்டத்தில் விடுபட்டுப்போன குக்கிராமங்களுக்கான இணைப்புச்சாலைகள்.
ii) உலக வங்கி மற்றும் ஆசிய வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள்.
iii) இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டதாக கண்டறியப்பட்ட 33 மாவட்டங்களில் இணைப்புச் சாலைகள்.
iv) எல்லைப் பகுதியில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட சிறப்புச் சாலைகளின் தொகுப்பு

தேசிய ஊரகச் சாலை மேம்பாட்டு முகமையின் முன்னுரிமை மேற்கூறியபடியுள்ள நிலையில், தமிழ்நாட்டில் பிரதம மந்திரி கிராம சாலைத்திட்ட செயலாக்கம் தொடர்ந்து சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக, 500க்கு மேல் மக்கள் தொகை கொண்ட அனைத்து குக்கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுவிட்டதால் தேசிய ஊரக சாலை மேம்பாட்டு முகமை தெரிவித்துள்ள நெறிமுறைகளுக்கு ஏற்ற சாலைகள் நம் மாநிலத்தில் இல்லை. இச்சூழ்நிலையில், அடுத்த



கட்டமாக 250 முதல் 500 வரை மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்களுக்குத்தான் தற்போது இணைப்புச்சாலைகள் அமைக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. ஆனால், 500க்கும் மேல் மக்கள் தொகை கொண்ட குக்கிராமங்கள் அனைத்திற்கும் இணைப்புச்சாலை அமைக்கப்பட்டு விட்டதால், நம் மாநிலத்திற்கு பிரதம மந்திரி கிராம சாலைத் திட்ட நிதி, மேலே தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மறுக்கப்படுகிறது. நம் மாநிலம் இத்திட்டச் செயலாக்கத்தில் விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதுகுறித்து மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவரிடம், 6.7.2011 அன்று புதுடெல்லியில் 2011–12–ஆம் ஆண்டின் தமிழ்நாட்டிற்கான ஆண்டுத் திட்டத்தினை இறுதி செய்யும்பொழுது நேரில் எடுத்துரைத்துள்ளார்கள். மேலும், இந்த சந்திப்பின்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தற்போதுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கு தமிழ்நாட்டிற்கு அதிக நிதி ஒதுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தி உள்ளார்கள்.

### 5.2 நபார்டு ஊரக உட்கட்டமைப்பு சாலைப் பணிகள்

மத்திய அரசின் வழிகாட்டுதலுக்கிணங்க, 1995–96 ஆம் ஆண்டு நபார்டு வங்கி, கிராமப் பகுதிகளில் மாநில அரசு, அரசுத்துறை நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகளுக்கு, உட்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிதி

உதவி வழங்கும் பொருட்டு, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியை உருவாக்கியது. நபார்டு வங்கி பல்வேறு பகுதிகளாக இந்த நிதியினை விடுவித்து வருகிறது. இந்த நிதியின் மூலம் பெரும்பான்மையான கிராமப்புறச் சாலைகள், பாலங்கள், சிறுபாசனக் கட்டமைப்புகள், பள்ளிகள், சுகாதார மையங்கள் மற்றும் மின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நபார்டு வங்கி தமிழக அரசுக்கு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியினை கடனாக வழங்கி வருகிறது. சாலைகள் மற்றும் பாலங்களுக்கு நிதி வழங்குவது, ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி–IIவது பகுதியில் இருந்து துவங்கியது. இந்த நிதி, சாலைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மேம்படுத்துதல், பழுதடைந்த தார்ச்சாலைகளை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் மூலமாக இதுவரை மொத்தம் **4,307** சாலைப்பணிகள், ரூ.**1,322.37** கோடி மதிப்பீட்டில் **10580.46** கி.மீ நீளத்திற்கு எடுக்கப்பட்டு, இதுவரையில் **3888** பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

ஊரக உள்கட்டமைப்பு நிதி XVII–ன் கீழ் **2011–12–**ஆம் ஆண்டில், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்பாடு செய்திட, **2,837.06** கி.மீ நீளமுள்ள சாலைப் பணிகளுக்காக ரூ.**452.12** கோடி மதிப்பீட்டிலான



கருத்துருவினை தமிழக அரசு நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளது. இதில் முதல் கட்டமாக, நபார்டு வங்கியானல் ஒப்புதல் அளிக்கப்பட்ட **902.07** கி.மீ நீளமுள்ள **333** சாலைப் பணிகள் ரூ.**143.67** கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தபடவுள்ளது.

**5.3** தரமான திட்ட செயலாக்கத்திற்கான புதிய நடவடிக்கைகள்

- தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை பலப்படுத்தும் விதமாக முக்கியமான சோதனைக்கருவிகள் மாவட்டங்களில் உள்ள தரக்கட்டுப்பாடு ஆய்வகங்களுக்கு வழங்கப்படும். மேலும், அனைத்து ஆய்வகங்களிலும் ஒரே தரத்திலான சோதனைக்கருவிகள் இருப்பது உறுதி செய்யப்படும்.
- அரசு நிறுவனங்களால் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மற்றும் சிறந்த பொறியியல் நிறுவனங்கள் மூலம் பல்வேறு தரக்கட்டுப்பாடு சோதனைகள் செய்வதன் மூலமாக பணிகள் உரிய தரத்தில் செயல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும்.
- ஒப்பந்தப்புள்ளி கோரும் அனைத்து அமைப்புகளும் ரூ.**10.00** லட்சம் மதிப்பீட்டிற்கு மேலுள்ள அனைத்து பணிகளுக்கும் மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வழிவகை செய்யப்படும்.

- ஊரக வளர்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில், மாவட்ட மற்றும் வட்டார அளவில் மதிப்பீடுகள் தயாரித்தல், நிர்வாக அனுமதி வழங்குதல், ஒப்பந்ததாரர் மற்றும் பயனாளிகளுக்கு வேலை உத்திரவு வழங்குதல் மற்றும் இதர நிர்வாக நடவடிக்கைகள் மிகஅதிகமான எண்ணிக்கையில் உள்ளது. இதனால், மாவட்ட மற்றும் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திற்கும், பொறியியல் பிரிவிற்கும் மிகுந்த பணிச்சுமை ஏற்படுகிறது. இப்பணிகளை எளிதாக்கி, மதிப்பீடுகளை துரிதமாக தயாரிக்க மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும். கணினி மூலமாக நிர்வாக அனுமதி மற்றும் வேலை உத்தரவு வழங்கி அதன்மூலம் நிர்வாக காரணங்களால் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்த்து, மேலும் திறமையான, வெளிப்படையான மற்றும் பொருத்தமான நிர்வாக முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.
- இந்த அரசு, பல்வேறு திட்டங்கள் மூலம் கட்டப்படும் கட்டடங்களின் மாதிரி வடிவமைப்புகளில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வர முடிவு செய்துள்ளது. இக்கட்டடங்களின் பயனீட்டாளர்களை கலந்தாலோசித்து தேவைக்கேற்ப ஒரே மாதிரியான வடிவமைப்பில் மாற்றி அமைக்கப்படும்.
- பணிகளின் நிலை குறித்த விவரங்களை அவ்வப்போதே தெரிந்துகொள்வதற்காக கள



ஆய்வின்போதே பணிகளைப் புகைப்படம் எடுத்து உடனடியாக விரைவு கைபேசி (smart phone) மூலம் அனுப்பும் வசதி அறிமுகப்படுத்தப்படும்.

தற்போது பல திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும் சாலைப்பணிகள் வெவ்வேறு தரத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தவிர்க்கும் விதமாக, அனைத்துத் திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகளும் ஒரே தரத்தில் உள்ளவாறு அமைக்கப்படும்.

**6.** பணியமைப்பு

**6.1.** ஊராட்சி உதவியாளர் பணியிடம் தரம் உயர்த்துதல்

ஊராட்சி உதவியாளர்கள் தற்போது சிறப்புக் கால முறை ஊதியம் ரூ.**2500** ï **5000** மற்றும் தர ஊதியம் ரூ.**500/–** பெற்று வருகின்றனர். இவர்களுடைய பணியின் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு ñ ஊராட்சி உதவியாளர்ò என்ற பதவிப் பெயரினை ñஊராட்சி செயலாளர்ò என மாற்றம் செய்து, இவர்கள் ஏற்கனவே பெற்றுவரும் ஊதியத்துடன், சிறப்புப் படியாக மாதம் ரூ.**500/–** வழங்கிடவும் அரசு உத்தேசித்துள்ளது.

**6.2** காலிப் பணியிடங்களை நிரப்புதல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள இணை இயக்குநர், உதவி இயக்குநர், வட்டார வளர்ச்சி அலுவலர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், உதவியாளர், இளநிலை உதவியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர், பணிப் பார்வையாளர்/இளநிலை வரைவாளர் மற்றும் சாலை ஆய்வாளர் ஆகிய பல்வேறு நிலையிலான பணியிடங்கள் பின்வரும் அட்டவணையில் கண்டுள்ளபடி காலிப் பணியிடங்களாக உள்ளன.

| வ.எண் | பணியிட விவரம் | காலிப் பணியிடம் |
|---|---|---|
| 1. | இணை இயக்குநர் | 8 |
| 2. | உதவி இயக்குநர் | 41 |
| 3. | வட்டார வளர்ச்சி அலுவலர் | 7 |
| 4. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர் | 130 |
| 5. | உதவியாளர் | 3,757 |
| 6. | இளநிலை உதவியாளர் | 870 |
| 7. | உதவி செயற் பொறியாளர் | 5 |
| 8. | உதவிப் பொறியாளர் | 451 |
| 9. | இளநிலைப் பொறியாளர் | 15 |
| 10. | பணிப் பார்வையாளர்/இளநிலை வரைவாளர் | 304 |
| 11. | சாலை ஆய்வாளர் | 536 |
| மொத்தம் | | 6,124 |



இந்தக் காலிப் பணியிடங்களால், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பாதிப்புகள் ஏற்படும் என்பதால், காலிப் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பிட இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

7. திறன் மேம்பாடு

திறன் மேம்பாடு என்பது வளர்ச்சித்திட்ட செயலாக்கத்தில் ஈடுபடும் குழுவினர், வளர்ச்சிக்கு சவாலாக உள்ள காரணங்களை அடையாளம் கண்டு அவற்றைக் களைந்து இலக்கை அடைவதற்கான திறமைகளை அதிகப்படுத்த ஏதுவாக உள்ள அணுகு முறையாகும். திறன் மேம்பாடானது ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். இதன் மூலம் வளர்ந்து வரும் சமூகத்தின் திறன்கள், தகுதிகள் மற்றும் முயற்சிகளை வலுப்படுத்துவதாகும். இது தனி மனித அளவிலும், நிறுவன மற்றும் சமுதாய அளவிலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆற்றல், திறமை மற்றும் சாதனை ஆகிய இலக்குகளை அடைவதற்கான அறிவு, திறன் மற்றும் திறமைகளைப் பெறுவதே பயிற்சியாகும்.

7.1 மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும்

இத்துறையோடு தொடர்புடைய இதர துறை அலுவலர்களுக்கும் தொடர்ச்சியாக பல்வேறு பயிற்சிகளை வழங்கி வருகிறது. இப்பயிற்சி பெறுவோர் தங்களது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை முழுவதுமாக அறிந்து கொள்ளும் வகையிலும், திறன் மேம்பாடு அடைந்து சிறப்பாகப் பணியாற்றும் வகையிலும் பயிற்சித்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மண்டல அளவில் ஐந்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களும், மாநில அளவில் முதன்மை நிறுவனமாக ஊரக வளர்ச்சி நிறுவனமும் செயல்பட்டு வருகின்றன. மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் ஊரக வளர்ச்சித்துறையில் கிராம ஊராட்சி உதவியாளர் தொடங்கி, ஊர் நல அலுவலர், இளநிலை உதவியாளர், உதவியாளர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், பணி மேற்பார்வையாளர், சாலை ஆய்வாளர் போன்ற அலுவலர்களுக்கும், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் சார்புத் துறையினருக்கும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இத்தகைய மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள சத்திய விஜய நகரம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி அணை, ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை மற்றும் மதுரை மாவட்டத்தில் உள்ள தே.கல்லுப்பட்டியிலும் அமைந்துள்ளன. ஒவ்வொரு பயிற்சி நிறுவனமும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில்



உள்ள அலுவலர்கள் / உள்ளாட்சி பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளிக்கின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனத்தில், உதவி இயக்குநர் நிலையிலான விரிவுரையாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சார்புத் துறையிலிருந்து நியமிக்கப்படுகின்றனர். பண்ணை மேற்பார்வையாளர்கள், பணிமனை மேற்பார்வையாளர்கள், கம்மியர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோர் இந்த நிறுவனத்தின் நிர்வாக அமைப்பில் உள்ளனர். இந்நிறுவனங்களில் ஆண்டு முழுவதும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்கள், 10 வகையான பொதுவான பயிற்சிகளையும், 5 வகையான கணினிப் பயிற்சிகளையும் அளிக்கின்றன. மேலும், மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்படும் புதிய திட்டங்களுக்கான சிறப்புப் பயிற்சிகளும் இந்நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இவை தவிர, சார்புத்துறைகளால் நடத்தப்படும் பயிற்சிக்கான மையங்களாகவும் இந்நிறுவனங்கள் விளங்குகின்றன.

மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் ஊதியம் மற்றும் ஊதியம் சாராத செலவினங்களுக்குத் தேவையான நிதியை மாநில அரசு வழங்குகிறது. இது தவிர மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் தொடர் செலவின மானியமாக ரூ.10 இலட்சத்தினை ஒவ்வொரு மண்டல ஊரக

வளர்ச்சி நிறுவனத்திற்கும் வழங்குகின்றது. இத்துடன், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினையும் மத்திய அரசு அளிக்கிறது.

7.2 மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம்

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்கள் அரசின் நலத்திட்டங்களை செவ்வனே செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புற மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்கள் மற்றும் ஊராட்சி அமைப்பு பிரதிநிதிகளின் திறன் மேம்பாடு, அறிவை வளர்த்தல் மற்றும் தரமான சேவையை வழங்குவதற்கான மனப்பாங்கை வளர்த்திட திறன் மேம்பாட்டு பயிற்சி அவசியமான கருவியாக விளங்குகிறது. மாநில அளவில், திறன்வளர்த்தல் பயிற்சியினை அளிக்கும் பொறுப்பு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் முதன்மையான பயிற்சி நிறுவனமான மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்குப் பல்வேறு வகையான பயிற்சிகளை நடத்தி வருகிறது.



மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், 1961–ஆம் ஆண்டு பவானிசாகரில் நிறுவப்பட்டது. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975ன் படி தன்னாட்சி அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டு 1991–ஆம் ஆண்டு முதல் மறைமலைநகரில் இயங்கி வருகிறது.

இந்நிறுவன நிர்வாக மேலாண்மை குறித்துத் தமிழக அரசு 1) ஆட்சிமன்றக்குழு, 2) செயற்குழு ஆகிய அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலர் அவர்கள் இதன் தலைவர் ஆவார். ஆட்சிமன்றக்குழு ஆண்டிற்கு ஒரு முறையும், செயற்குழு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் கூடுகிறது.

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர் நிலையில் நியமிக்கப்படுகிறார். இவர், இக்குழுவின் உறுப்பினர்–செயலர் நிலையில் இந்நிறுவனத்தின் நிர்வாகத்தினைக் கண்காணித்து வருகிறார்.

7.2.1 விரிவுரையாளர்கள்

தமிழக அரசு, இந்நிறுவனத்திற்காக மொத்தம் 13 விரிவுரையாளர்கள் பணியிடங்களுக்கு அனுமதி அளித்துள்ளது. நேரடி நியமனம் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தல நிதிக் கணக்குகள்,

வேளாண்மைத் துறை ஆகிய துறைகளில் இருந்து அயற்பணி மூலமும் மேற்கண்ட 13 விரிவுரையாளர்கள் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. மேலும், நிர்வாகப் பணிகளுக்காக 24 பணியிடங்கள் மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்குத் தமிழக அரசு அனுமதித்துள்ளது. இதைத்தவிர மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை, 5 சிறப்பு விரிவுரையாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்திட இந்நிறுவனத்திற்கு அனுமதியளித்துள்ளது.

7.2.2 நிதி ஆதாரம்

மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம், பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் பயிற்சிகளை மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் நடத்துகிறது. மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் கீழ்கண்டவாறு நிதி ஆதாரம் பெறுகிறது.

- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத்திட்டம், பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம், ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து மக்களை நோக்கி செல்லுதல் போன்ற திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்திட அளிக்கப்படும் பயிற்சிகளுக்கு 100 விழுக்காடு நிதியுதவி மத்திய அரசின் ஊரக வளர்ச்சித்துறை அளிக்கிறது.



- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களின் செயல்திறனை மேம்படுத்திட பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பயிற்சிகளுக்கு 100 சதவீத நிதி, மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறை அளிக்கிறது. தற்போது இத்திட்டம், விழுப்புரம், திருவண்ணாமலை, கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 6 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எஞ்சிய 25 மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் பயிற்சி செலவினங்களுக்காக, RGSY திட்டத்தின் கீழ் மத்திய அரசு 75 சதவீதமும், மாநில அரசு 25 சதவீதமும் நிதியினைப் பகிர்ந்து வழங்குகின்றன.
- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம் :– ஹைதாரபாத்தில் அமைக்கப்பட்டுள்ள தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனமானது, தேசிய அளவிலான பயிற்சி அளிக்கும் முதன்மை நிறுவனமாகத் திகழ்கிறது. இந்நிறுவனம், ஊரக வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்திடத் தேவையான ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி குறித்த பயிற்சி, மேலாண்மைத் திறன் வளர்த்தல் பயிற்சி மற்றும் புவியியல் தகவல் அமைப்புப் பயிற்சிகளை அளித்திட 100 விழுக்காடு நிதி உதவி அளிக்கிறது.

மேலும், ஆராய்ச்சி மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள உதவி அளிக்கிறது.

- மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்கத் துறை, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிப்பதற்காக நிதியுதவி அளிக்கிறது.
- மத்திய அரசின் சார்புச் செயலர்களுக்கான களப்பயிற்சிகளை அளித்திட மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்திற்கு மத்திய அரசின் பணியாளர்கள் மற்றும் பயிற்சித் துறை நிதியுதவி வழங்குகிறது.

### 7.2.3 நிர்வாகச் செலவினங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், நிர்வாகச் செலவினத்திற்குக் கீழ்க்கண்டவாறு நிதியுதவி (Grants-in-Aid) பெறுகிறது.

### 7.2.4 ஊதிய மானியம்

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் விரிவுரையாளர்கள் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசு மற்றும் மாநில அரசு 50:50 என்ற விகிதத்தில் நிதியினைப் பகிர்ந்து வழங்குகிறது.



- சிறப்பு விரிவுரையாளர்களின் ஊதியச் செலவினம் முழுவதும் மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறையால் 100 விழுக்காடு வழங்கப்படுகிறது.

### 7.2.5 ஊதியம் அல்லாத மானியம்

- மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தின் அலுவலகச் செலவினங்களுக்காக தமிழக அரசு ஆண்டு தோறும் நிதி வழங்குகிறது.

### 7.2.6 தொடராச் செலவின மானியம்

- இந்நிறுவனத்தின் உட்கட்டமைப்பினை வலுப்படுத்திட பயிற்சி வகுப்புகள் மற்றும் தங்கும் விடுதிகள் கட்டுதல், பயிற்சி அளிக்கத் தேவையான உபகரணங்கள் ஆகியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள மத்திய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் நிதியுதவி அளிக்கிறது.

### 7.2.7 பயிற்சியாளர்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், பல்வேறு வகையான பயிற்சிகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு அளிக்கிறது. மேலும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் வட்டார

வளர்ச்சி அலுவலர் முதல் கூடுதல் இயக்குநர் வரையிலும், வட்டாரப் பொறியாளர்கள் முதல் செயற்பொறியாளர்கள் வரையிலும் பயிற்சி அளிக்கிறது. மேலும் இந்நிறுவனம், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புப் பிரதிநிதிகள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கியாளர்களுக்குப் பயிற்சியினை அளிக்கிறது.

### 7.2.8 பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், உறைவிடப் பயிற்சிகளை நிறுவனத்திலும், வெளியிடப் பயிற்சிகளை மாவட்டங்கள், வட்டாரங்கள் மற்றும் ஊராட்சிகளிலும் பல்வேறு தொகுப்புகளாகப் பிரித்து நடத்தி வருகிறது. ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் யோஜனா (RGSY) குறித்த பயிற்சிகளை மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனங்களின் மூலம் நடத்தி வருகிறது.

### 7.2.9 பயிற்சி வல்லுநர்கள்

பயிற்சிகளில் பெருமளவில் பயிற்சியாளர்கள் பங்கேற்பதையும் பயிற்சியின் தரத்தையும் உறுதி செய்யும் பொருட்டு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் பின்வரும் சிறந்த நிறுவனங்களிலிருந்து கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் வல்லுநர்களைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

- தேசிய தகவல் தொழில் நுட்ப மையம், சென்னை
- தேசிய ஊரக வளர்ச்சி நிறுவனம், ஹைதராபாத்



- ஊரகத் தொலையுணர்வு மையம் (அண்ணா பல்கலைக்கழகம்), சென்னை
- அண்ணா மேலாண்மை நிறுவனம், சென்னை
- எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம்
- காட்டாங்கொளத்துார், காஞ்சிபுரம் மாவட்டம்
- கிரிஷ்ஷீ விக்யான் கேந்திரா, காட்டுப்பாக்கம். காஞ்சிபுரம் மாவட்டம்
- கால்நடை ஆராய்ச்சி நிலையம், பொத்தேரி, காஞ்சிபுரம் மாவட்டம்
- சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை
- பொது சுகாதார நிறுவனம், பூந்தமல்லி, திருவள்ளூர் மாவட்டம்
- வேளாண்மைப் பொறியியல் துறை. சென்னை
- டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம், சென்னை
- சி.பி.இராமசாமி ஆராய்ச்சி மையம், சென்னை
- பல துறைகளைச் சார்ந்த அலுவலர்கள்
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள்
- தேசிய மற்றும் மாநிலத் தரக் கண்காணிப்பாளர்கள்.

சிறந்த ஊராட்சித் தலைவர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் ஓய்வு பெற்ற

அலுவலர்களைக் கொண்டு பயிற்சிகளைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்ட விபரங்கள்

| வருடம் | ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் | | அலுவலர்கள் மற்றும் இதரர் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | பயிற்சி களின் எண்ணிக்கை | பயிற்சியாளர்களின் எண்ணி க்கை | பயிற்சி களின் எண்ணி க்கை | பயிற்சியாளர் களின் எண்ணி க்கை | பயிற்சி களின் எண்ணி க்கை | பயிற்சியாளர்களின் எண்ணி க்கை |
| 2003-04 | 19 | 593 | 52 | 1,670 | 71 | 2,263 |
| 2004-05 | 55 | 2,399 | 31 | 1,119 | 86 | 3,518 |
| 2005-06 | 38 | 1,374 | 83 | 3,077 | 121 | 4,451 |
| 2006-07 | 150 | 13,091 | 46 | 1,393 | 196 | 14,484 |
| 2007-08 | 71 | 5,559 | 95 | 4,643 | 166 | 10,202 |
| 2008-09 | 887 | 45,151 | 490 | 19,341 | 1,377 | 64,492 |
| 2009-10 | 1,495 | 71,582 | 372 | 17,826 | 1,867 | 89,408 |
| 2010-11 | 2,528 | 81,011 | 221 | 31,339 | 2,749 | 1,12,350 |
| 2011-12 (ஜுன் 2011 வரை) | 14 | 1,197 | 32 | 1,985 | 46 | 3,182 |

### 7.2.10 உள்கட்டமைப்பு வசதிகள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தில் பயிற்சிகளைச் செம்மையாக நடத்திட ஏதுவாக குளிர்சாதன வசதியுடன் கூடிய கூட்டரங்கம், பயிற்சிக் கூடம், படிக்கும் வசதியுடன் கூடிய நூலகம், இணையதள வசதி மற்றும் புதிய



தொழில்நுட்பத்துடன் கூடிய 25 கணினிகள் கொண்ட கணினி அறை, 130 பயிற்சியாளர்கள் தங்கும் வசதியுடன் கூடிய விடுதி மற்றும் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட 40 பயிற்சியாளர்கள் தங்கும் விடுதி, தானியங்கி மின் ஆக்கி (125 KVA) மற்றும் ஒலி, ஒளி சாதனங்கள் உள்ளன.

### 7.2.11 2011–12–ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்களுக்குப் பயிற்சிகள் நடத்தக் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு:

- ஊராட்சி அமைப்புகள் நிர்வாகம்
- கணக்குகள் மற்றும் தணிக்கை
- பணியமைப்பு விபரங்கள்
- கணினி பயன்பாடு
- மத்திய அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்
- மாநில அரசுத் திட்டங்கள்
- பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள்
- தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சி
- சமூகத் தணிக்கை
- தகவல் அறியும் உரிமைச் சட்டம்
- பரவலாக்கப்பட்ட திட்டங்கள்

மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம் நடப்பு ஆண்டில் சிறப்புக் கவனத்துடன் செயல்படுத்தும் பயிற்சிகள் :

- முழு சுகாதார இயக்கம்
- மழைநீர் சேகரிப்பு
- சூரிய ஒளி சக்தி
- தமிழ்நாடு குக்கிராம மேம்பாட்டுத் திட்டம் (தாய்)
- ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்
- பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித் திட்டம், ராஷ்ட்ரிய கிராம சுவராஜ் யோஜனா திட்டங்களின் கீழ் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்கான பயிற்சி
- ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து மக்களை நோக்கி செல்லுதல் திட்டம் குறித்த பாரத் நிர்மான் திட்டத் தன்னார்வலர்களுக்கான பயிற்சி
- மத்திய மற்றும் மாநில அரசுச் சார்புச் செயலாளர்களுக்கான களப்பயிற்சி
- பரவலாக்கத் திட்டம் குறித்த பயிற்சி

7.2.12 தற்போது நடவடிக்கையில் உள்ள பணிகள்

- ஊரகத் தொழில் நுட்ப ஆதார மையக் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.



- ஊராட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட நிதியுதவி கோரி ராஷ்ட்ரிய கிராம் ஸ்வராஜ் யோஜனா திட்டத்தின் கீழ் கருத்துருக்கள் மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

- பரவலாக்கப்பட்ட திட்டங்கள் குறித்து ஊராட்சி அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்திட நிதியுதவி கோரி மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது.

2011–2012–ஆம் ஆண்டில் 2,879 அணிகளில் 2,46,746 நபர்களுக்கு ரூ.19.12 கோடி செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வெளி வளாகப் பயிற்சியாக 2,714 அணிகளில் 2,31,890 நபர்களுக்கு ரூ.15.45 கோடி செலவில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் 1983ஆம் ஆண்டு துவக்கப்பட்டு மாநில அரசின் முழு நிதி உதவியுடன் மகளிர் மேம்பாட்டிற்கும் அதிகாரப்பகிர்வுக்கும் வழிவகுக்கும் "மகளிர் திட்டத்தை'', தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுடன் இணைந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் கடன் இணைப்பு வழங்குதல், திறன் வளர்ப்பு, இளைஞர் திறன் பயிற்சி, பொருளாதார செயல்பாடுகளை மேம்படுத்துதல், உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கு உதவுதல் மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை அமைத்தல் முதலிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மத்திய அரசின் ஊரக வறுமை ஒழிப்புத் திட்டமான பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினையும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகிறது.

### 8.1. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் (மகளிர் திட்டம்)

1991–92 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதியைக் கொண்டு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டுத் திட்டம் பரிசோதனை முறையில் துவக்கப்பட்டது. பின்னர்



இத்திட்டம் 1992ï 1994ஆம் ஆண்டுகளில் சேலம், தென் ஆற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் பெண்களிடையே பரவலான வரவேற்பைப் பெற்றதால் வருங்கால வளர்ச்சிக்கு முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளப்பட்டு ஏழைக் குடும்பங்களையும் நலிவுற்ற பிரிவினரின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு மாநில அரசின் நிதி உதவியுடன் 1995–96 ஆம் ஆண்டிலிருந்து பல கட்டங்களாக அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மாநிலத்தில் உள்ள சுய உதவிக் குழு இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் முக்கிய நிறுவனமாக இருப்பதால் மகளிர் அதிகாரப் பகிர்வு செயல்பாடுகளுக்கு அச்சாணியாக திகழ்கின்றது.

ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன் வந்து தங்கள் வளர்ச்சிக்காக ஒன்று சேர்ந்து சேமிப்பினை பெருக்கிடவும், குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து ஆலோசித்து ஒரு குறிப்பிட்ட தொகையினை வாரம் அல்லது மாதந்தோறும் சேமித்து, தங்களுக்குள்ளேயே சிறுகடன் கொடுத்து உதவிக்கொள்ளும் ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12 முதல் 20 மகளிர் வரை உறுப்பினர்களாக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயது உடையவர்களாக இருக்க வேண்டும். மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள சுய உதவிக்

குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சிகள் மகளிரின் சிந்தனையில் நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் சிறப்பாகவும், ஒற்றுமையுடனும் செயல்பட வழி வகுக்கிறது.

### 8.1.1. தொண்டு நிறுவனங்களின் பங்கு

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், அங்கீரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமுதாயம் சார்ந்த அமைப்புகளான ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளைப் பங்குதாரர்களாக இணைத்துக் கொண்டு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், பயிற்சி அளித்தல், வழிநடத்துதல் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை கண்காணித்தல் போன்ற பணிகளை செயல்படுத்தி வருகிறது. வருங்காலத்தில் இந்நிறுவனமானது சுய உதவிக் குழு இயக்கத்தினை நிலைத்த தன்மை உடையதாக்கவும், கூட்டமைப்பு உருவாக்கத்தைத் தீவிரப்படுத்தவும், இக் கூட்டமைப்புகளை சமுதாயம் சார்ந்த அமைப்புகளாக உயர்த்துவதையும் மற்றும் இதுவரை சுய உதவிக் குழு அமைக்கப்படாத குடியிருப்புகள், நகர்ப்புற குடிசை பகுதிகளில் விரிவாக்கம் செய்வதையும் நோக்கமாக கொண்டு செயல்பட்டு வருகிறது.

இதுவரை **452** தொண்டு நிறுவனங்கள் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால்



அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பணியின் தரத்திற்கு முக்கியத்துவம் அளித்தல், அதற்கேற்ப செயல்திறன் ஊக்குவிப்புத் தொகை வழங்குதல் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பைச் சமுதாயம் சார்ந்த அமைப்பாக உருவாக்குதல் போன்ற சிறப்பம்சங்கள் தொண்டு நிறுவனங்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ளன. இது தவிர, சுய உதவிக் குழுக்களை அமைப்பதில் பயிற்சி தருவதற்காகத் தொண்டு நிறுவனங்களுக்கு குழு அமைப்புத் தொகை, குழு கண்காணிப்புத் தொகை மற்றும் சுய உதவிக் குழுக்கள் வங்கியை அணுகி கடன் பெற உதவி செய்வதற்காக ஊக்கத் தொகை ஆகியன தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் இத்தொண்டு நிறுவனங்களின் செயல் திறன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 8.1.2 மகளிர் திட்டத்தின் செயல்பாடுகள்

1. குழு அமைத்தல்
2. திறன் மேம்பாடு
3. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி
4. சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு
5. இளைஞர் திறன் பயிற்சி
6. மகளிருக்கான தொழில் திறன் பயிற்சி
7. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மறுசீரமைத்தல்

8. நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதி அளவிலான சுய உதவிக் குழு கூட்டமைப்புகளை அமைத்தல்
9. சந்தைப்படுத்த உதவுதல் மற்றும் விற்பனை கண்காட்சிகள் ஏற்பாடு செய்தல்

8.1.3 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

இதுவரை சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படாத மக்களிடையே குழுக்கள் அமைப்பதும், சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், திருநங்கைகள், நலிவுற்றோர் மற்றும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை சிறப்புக் கவனம் செலுத்தி சுய உதவிக் குழுக்களில் சேர்ப்பதும் இந்த அரசின் நோக்கமாகும்.

2011–12–ஆம் ஆண்டில், 65,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்க இந்த அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைஉறுதித் திட்ட பெண் தொழிலாளர்களைக் கொண்டும், நகர்ப்புற குடிசைப் பகுதிகள் மற்றும் குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிப் பகுதிகளிலும் முன்னுரிமை அடிப்படையில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். மேலும் திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள், எச்.ஐ.வியால் பாதிக்கப் பட்டவர்களைக் கொண்டும் சிறப்புக் குழுக்கள்



உருவாக்கப்படும். செயல்படாத குழுக்களை மீண்டும் இயங்கச் செய்யவும், மகளிர் திட்டத்தின் கீழ் இதுவரை சேர்க்கப்படாத சுய உதவிக் குழுக்களை கண்டறிந்து அவர்களை மகளிர் திட்டத்தில் இணைத்து அனைத்து அரசு நலத்திட்டங்களும் ஏழைப் பெண்களுக்கு சென்றடையவும் அனைத்துவகையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதுவரை அமைக்கப்பட்ட சுய உதவிக் குழுக்களின் விவரம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்கள் பற்றிய விவரம்

| | |
|---|---|
| சுய உதவிக் குழுக்களின் மொத்த எண்ணிக்கை | 4,91,311 |
| மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை | 76.60 இலட்சம் |
| ஊரக சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 3,32,092 |
| ஊரக சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 51,77,028 |
| நகர்ப்புற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 1,59,219 |
| நகர்ப்புற சுய உதவிக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 24,82,654 |
| மொத்த சேமிப்புத்தொகை | ரூ. 2,973 கோடி |
| வங்கிக் கடன் இணைப்பு பெற்ற சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 4,51,248 |
| மொத்த வங்கிக் கடன் தொகை | ரூ. 11,603.83 கோடி |

### 8.1.4 சமுதாய வள பயிற்றுநர்கள்

சுய உதவிக் குழுக்களின் இயக்கத்தை வலுப்படுத்தவும் அதை சமுதாயம் சார்ந்ததாக்கவும் சுய உதவிக் குழுக்களிலிருந்து சமுதாய வள பயிற்றுநர்கள் (CRPs) உருவாக்கப்பட்டனர். சமுதாய வள பயிற்றுநர்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தைச் சார்ந்த சமூக தணிக்கைக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிப்பதுடன் சுய உதவிக் குழுக்களுக்கு திறன் வளர்ப்புப் பயிற்சியினையும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்குவித்திடவும் உறுதுணையாக உள்ளனர். அவர்கள் சுய உதவிக் குழுக்களுக்கு மற்ற அரசு திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துபவர்களாகவும் உள்ளனர்.

### 8.1.5 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சி

மகளிர் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட குழுக்களுக்கும் குழுக்களின் நிர்வாகிகளுக்கும் ஒற்றுமையாகவும், சிறப்புடனும் செயல்பட முறையான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. அனைத்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் பயிற்சி 4 பாடத் திட்டங்களாக 4 நாட்களில் அளிக்கப்படுகிறது. சுய உதவிக்குழு நிர்வாகிகளான ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகள் ஆகியோருக்கு 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சிகள் குழுவை வழி



நடத்திச் செல்லும் தலைமைப் பண்பு, குழுவாகச் செயல்படும் திறன் மற்றும் கணக்குப் பதிவேடுகளை பராமரிக்கும் முறை ஆகியவற்றை மேம்படுத்த உதவுகின்றன. இப்பயிற்சிகளில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவர்களின் வருமான இழப்பினை ஈடுகட்டும் தொகையாக ரூ.45/– வீதம் பயிற்சி நடக்கும் நாட்களுக்கு வழங்கப்படுகிறது.

### 8.1.6 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்

குறைந்தபட்சம் ஆறு மாத காலம் முடிவுற்ற சுயஉதவிக் குழுக்கள், முதல் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெற்றிருப்பின் அக்குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்படுகிறது. குழுக்களின் ஆதார நிதி உயரவும், சிறிய வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ளவும், அல்லது உடல் நலம் பேணுவதற்காகவும் அல்லது கல்வித் தேவைக்காகவும் இந்த நிதியிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடத்திற்குள் பொருளாதாரக் கடன் பெறும் தகுதியினை சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவரை 4,47,081 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியாண்டில் 42,214 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்க இவ்வரசு திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு சுய உதவிக் குழுவிற்கும் மானியத்துடன் கூடிய சுழல் நிதியாக ரூ .15,000/– மற்றும் வங்கிக் கடனாக ரூ. 50,000/– வழங்கப்படும்.

### 8.1.7 திருநங்கை சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

இந்த அரசு இதுவரை சமுதாயத்தால் கவனிக்கப்படாத திருநங்கைகள் நல மேம்பாட்டில் தனி கவனம் செலுத்தும். முதல் முறையாக திருநங்கைகளைக் கொண்டு 100 சுய உதவிக் குழுக்கள் இந்த அரசால் அமைக்கப்படும். இத்திருநங்கைகள் சுயஉதவிக் குழுக்களுக்கு பயிற்சி, சுழல்நிதி மற்றும் பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டு அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர உதவி செய்யப்படும்.

### 8.1.8 திருநங்கை சுய உதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் கூடிய கடன்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணைப்படி தகுதியுள்ள திருநங்கை சுய உதவிக் குழுக்களுக்கு தொழில் துவங்க ரூ. 15 இலட்சம் வரை 25 சதவீத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்க இந்த அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் இலாபகரமான தொழில்களை தொடங்கி, தங்கள் வருவாயைப் பெருக்கி, சமுதாயத்தில் மதிப்புடன் வாழ வழி வகுக்கப்படும்.



### 8.1.9 வங்கிகள் மூலம் பொருளாதாரக் கடன்

சுய உதவிக் குழுக்கள் கந்து வட்டிக்காரர்களின் பிடியில் சிக்கி, நாளடைவில் கடனாளியாக மாறி விடுகின்றனர். வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களை மேற்கொள்ள வங்கிகள் குறைந்த வட்டியில் கடன் அளிப்பதால் சுய உதவிக் குழுக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைகின்றன. வங்கிகள் மூலம் முதல் கடன் இணைப்பாக வழங்கப்பட்ட ரூ.50,000/– பின்னர் தொடர் கடன் இணைப்புகளாக ரூ.1 இலட்சமாகவும் ரூ.1.50 இலட்சமாகவும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் நிலைத்த தன்மையை அடைய இரண்டாவது மறுகடன் மற்றும் தொடர் மறுகடன் இணைப்பு, வங்கிகள் மூலமாக வழங்குவது அவசியமாகிறது.

மகளிர் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட மொத்த கடன் தொகை ரூ. 11,603.83 கோடி ஆகும். 2011–12 ஆம் ஆண்டில் வங்கி கடன் பெற்று சுய உதவிக் குழுக்களுக்கு வழங்க உயரிய இலக்காக ரூ. 4,000 கோடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### 8.1.10 சுய உதவிக் குழுக்களுக்கு உயர்த்தப்பட்ட பொருளாதாரக் கடன் உதவி

கடந்த காலங்களில் பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.5 இலட்சம் வரை பொருளாதாரக் கடன் உதவி 50 சதவீத மானியத்துடனோ அல்லது அதிகபட்ச மானியமாக ரூ.1.25 இலட்சமாகவோ வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொருளாதாரக் கடன் உதவியை ரூ.10 இலட்சம் வரை உயர்த்தி 25 சதவீதம் வரையிலான மானியத்துடன் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

### 8.1.11 இளைஞர்களுக்கு உறுதி செய்யப்பட்ட வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி

இன்று மாநிலத்தில் ஏற்பட்டு வரும் பெரும் தொழில் வளர்ச்சியின் காரணமாக உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் தொழில்திறன் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. வளர்ந்து வரும் பொருளாதாரச் சூழலில் பெருகி வரும் வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்தி உரிய வேலை பெற்றிட, திறன் பெறாத மற்றும் குறை திறன் பெற்ற இளைஞர்களுக்கு தேவையான தொழில் திறன் பயிற்சி அளிப்பது இன்றியமையாததாகும். இளைஞர் தொழில் திறன் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படுவதால் ஊரக இளைஞர்களை வேலை வாய்ப்பிற்கேற்ப உருவாக்கிடவும், அவர்கள் அதிக



வருமானம் ஈட்டக்கூடிய வேலை வாய்ப்பினைப் பெற்றிடவும் வழிவகை செய்யப்படுகிறது. இதுவரை 93,762 இளைஞர்கள் பல்வேறு வகையான தொழில்களில் திறன் பயிற்சி பெற்றுள்ளனர். இதில் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களைத் தவிர 60,408 இளைஞர்களுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

2011–12 ஆம் ஆண்டில் 25,000 இளைஞர்களுக்கு ரூ. 20 கோடி மதிப்பீட்டில் தொழில்திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்க இந்த அரசினால் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.1.12 தொழில் மேம்பாட்டுப் பயிற்சி திட்டம்

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, குறிப்பாக நகர்ப்புற குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் ஆர்வம் காட்டும் தொழில்களில் சிறந்த நிறுவனங்களின் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதுவரை 12,329 உறுப்பினர்கள் பல்வேறு தொழில்களில் பயிற்சி பெற்றுள்ளனர்.

இந்த அரசினால் 2011–12ஆம் ஆண்டில் 4,000 பெண்களுக்கு இப்பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

- நகர்ப்புற சுய உதவிக் குழுக்களில் உறுப்பினராக உள்ள 18 முதல் 60 வயதுடைய பெண்களில் 35 வயதிலிருந்து 50 வயதிற்குள் உள்ள பெண்களுக்கு

முன்னுரிமை தரப்பட்டு அவர்களுக்கு தொழில் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படுகிறது.

- ஒரு பயிற்சியாளருக்கு போக்குவரத்து செலவுடன் கூடிய உதவித் தொகை ஒரு நாளைக்கு ரூ.25/– வீதம் வழங்கப்படுகிறது.
- பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள், தொழில் ஆகியவை பயிற்சி பெறவுள்ள பெண்களின் விருப்பத்திற்கேற்ப, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறது.
- சிறந்த, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் சுய தொழில்களில் ஈடுபட பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் பயிற்சி அளிப்பதற்கு போதுமான கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலப்பொருட்கள் கொள்முதல், இயந்திரங்கள், மதிப்புக்கூட்டல், பேக்கேஜிங், பெயரிடுதல், விலை நிர்ணயம், தரமதிப்பீடு மற்றும் சான்றிதழ் போன்றவற்றில் பயிற்சி அளிக்க வல்ல தகுதிவாய்ந்த பயிற்றுநர்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.
- பயிற்சி பெற்ற பெண்கள் சுய தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வசதி பெற்றுத் தர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.



- சுய தொழில் மேற்கொள்ளும் பெண்களால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விளம்பரப்படுத்தவும், சந்தைப்படுத்தவும் ஏதுவாக மாநில மற்றும் மாவட்ட அளவில் விற்பனை கண்காட்சிகள் நடத்தப்படுகின்றது.

### 8.1.13 சுய உதவிக் குழுக்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு

மகளிர் சுய உதவிக் குழுக்களின் இயக்கத்தை வலுப்படுத்தி நிலைத்த தன்மை உடையதாக்க ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டு வருகிறது.

சுய உதவிக் குழுக்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும், ஒன்று கூடித் தீர்வு காண்பதற்கும் ஒரு பங்கேற்புக் களமாக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அமைகிறது. சுய உதவிக் குழுக்கள் தனியாக சாதிக்க முடியாததை, அவை கூட்டமைப்பில் இணைந்து தங்களுடைய ஒட்டு மொத்த ஆற்றலையும் வளங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலமாக சாதிக்கலாம். பொருட்களை கொள்முதல் செய்வதிலும் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள வகையில் செயலாற்றலாம். கூட்டமைப்புகள் தங்களது ஊராட்சிகளில் புதிய சுய உதவிக் குழுக்கள்

அமைத்து பயிற்சிகள் வழங்கி அவற்றை வழிநடத்தி கண்காணிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம். சுய உதவிக் குழுக்களின் பொதுவான இலட்சியங்களை பிரதிபலிக்கின்ற வலுவான மற்றும் ஒற்றுமையான கூட்டமைப்புகளை அமைப்பதே வருங்காலங்களில் நிலைத்த தன்மையினை அடைய வழிவகுக்கும்.

- கூட்டமைப்பு நிர்வாகிகளுக்கு பயிற்சியளித்தல், ஆதார நிதி வழங்குதல் மற்றும் சிறந்த கூட்டமைப்புகளுக்கு விருது வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினை வலுப்படுத்துகின்றன. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்துத் தரப்பு மக்களையும் உள்ளடக்கி வெளிப்படையான முறையில் அனைவரின் பங்கேற்புடன் செயல்படும் வகையிலும், சீரான நிர்வாகம் மற்றும் நிலைத்த தன்மை அடையும் வகையிலும் செயல்படுவது மிகவும் முக்கியமாகும்.

- மொத்தமுள்ள 12,618 ஊராட்சிகளில் இதுவரை மகளிர் திட்டத்தின் கீழ் 7,646 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. 2011–12ஆம் ஆண்டில் மேலும் 4,972 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, கூட்டமைப்பு மற்றும் குடியிருப்பு அளவிலான மன்றங்களின் உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு நிர்வாகம், நிதி மேலாண்மைப் பயிற்சிகள் வழங்குவதன் மூலம் வலுப்படுத்தப்படும். அத்துடன் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் கூட்டமைப்பு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு சமூகத் தணிக்கை, தொழில் வாய்ப்புகளைக் கண்டறிதல் மற்றும் மதிப்புக்கூட்டல் போன்ற இனங்களில் பயிற்சி வழங்கப்படும்.



- ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு 6 மாதங்கள் முடிவுற்ற பின் அவை அனைவரின் பங்கேற்பு, உள்ளடக்கம், சிறந்த மற்றும் வெளிப்படையான நிர்வாகம், கடன் ஒழுக்கம் மற்றும் சமூக மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் போன்ற நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகளின் அடிப்படையில் தர மதிப்பீடு செய்யப்படும்.

### 8.1.14 மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத்தொகை

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்று சிறப்பாகச் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை ஊக்கப்படுத்தும் வகையில் கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வழங்கப்படுகிறது. இதுவரை தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற 2,825 கூட்டமைப்புகளுக்கு ரூ.1 இலட்சம் வீதம்

வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையில் இருந்து கிடைக்கும் வட்டித் தொகை ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகச் செலவினங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

2011–12 ஆம் ஆண்டில் 3,000 தகுதி வாய்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் வழங்க ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 8.1.15 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன்

கடன் வசதிகளைப் பெற்றுத் தரும் நிதியிடையீட்டாளராக செயல்படுவது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் முக்கியப் பணிகளில் ஒன்றாக உள்ளது. நாளடைவில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் சமுதாய அளவிலான நிதி நிறுவனங்களாக மலரும். இந்த வகையில் தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் நிதி இணைப்பு பெறுவதற்கும், வங்கிகள் மூலம் பெருங்கடன் பெற்று உறுப்பினர்களுக்கு கடனாகக் கொடுப்பதற்கும் தகுதி பெறுகின்றன. சில மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக மறுசீரமைக்கப்பட்ட கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் வழங்கப்பட்டது. இந்த கூட்டமைப்புகளிடமிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் வங்கிகளிடமிருந்து கூட்டமைப்புகள் பெருங்கடன் பெற்று, அதனை சுய உதவிக் குழுக்களுக்கு கடனாக



வழங்குவதிலும், கொடுத்த கடனை வட்டியோடு திரும்பப் பெற்று அதனை முறையாக தவணை தவறாமல் வங்கிகளுக்கு மீளச் செலுத்துவதிலும் வெற்றிகரமாக செயல்பட முடியும் எனத் தெரிய வந்துள்ளது. இது வரை 300 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 73.48 கோடி பெருங்கடன் பல்வேறு வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளது. 2011–12 ஆம் ஆண்டில் இவ்வரசின் மூலம் 400 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

### 8.1.16 சிறந்த மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கான விருதுகள்

மகளிர் சுய உதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான விருதுகள் வழங்கப்படுகின்றது. மாநில அளவில் 5 சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில், ஒரு சிறந்த சுய உதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் மூன்று சிறந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுய உதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்விருதுகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மத்தியில் பெருமிதம்

மிக்கதாகவும் சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளைச் சிறப்பாக செயல்பட வைக்கும் காரணிகளாகவும் அமைந்துள்ளன.

### 8.1.17 வங்கியாளர்களுக்கு விருதுகள்

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு அவர்கள் கந்து வட்டி மற்றும் பிற நிறுவனங்களில் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்தவும், தொழில் முதலீடு மற்றும் அன்றாட செலவினம் போன்ற பல்வேறு கடன் தேவைகளை பூர்த்தி செய்வதன் மூலம் வங்கியாளர்கள் மகளிர் பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றனர். சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்குவதில் மிகச் சிறப்பாக செயலாற்றும் வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளை கௌரவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவில் வங்கியாளர்களுக்கான விருது வழங்கப்படுகிறது. இவ்விருதுகள் சிறப்பாகச் செயல்படும் வங்கியாளர்களை மேலும் ஊக்கப்படுத்துவதோடு வங்கியாளர்கள் மத்தியில் ஆரோக்கியமான போட்டியையும் ஏற்படுத்துகிறது.

மாநில அளவில் சிறந்த மூன்று வங்கிகளுக்கும், ஐந்து வங்கிக் கிளைகளுக்கும், மாவட்ட அளவில் ஒரு வங்கி மற்றும் மூன்று வங்கிக் கிளைகளுக்கும் விருதுகள் வழங்கப்படும்.



### 8.1.18 சுய உதவிக் குழுக்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

சுய உதவிக் குழுக்கள் வங்கிகள், அரசுத் துறைகள் மற்றும் பிற நிறுவனங்களை அணுகுவதில் பல்வேறு சிரமங்களை சந்திக்கின்றன. சுய உதவிக்குழு மகளிர் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும் அடையாள அட்டை உதவுகிறது. இந்த அடையாள அட்டையில் சேமிப்பு, தர மதிப்பீட்டின் நிலை, குழு பெற்ற கடன் மற்றும் குழு உறுப்பினர்களின் விவரங்கள் இருக்கும். இந்த அடையாள அட்டைகள் ஒரே உறுப்பினர் ஒன்றிற்கும் மேற்பட்ட குழுவில் உறுப்பினராக இருப்பதைத் தவிர்க்கும். தகுதி வாய்ந்த மற்றும் செயல்படும் அனைத்து சுய உதவிக் குழுக்களுக்கும் இந்த நிதியாண்டில் அடையாள அட்டை அரசினால் வழங்கப்படும்.

## 8.2 பொன் விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SGSY)

பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டம், 1999–ம் ஆண்டு ஏப்ரல் முதல் மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாநில அரசினால் செயல்படுத்தப்படுகிறது. ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் போதுமான மற்றும் நிலையான வருமானத்தை ஏற்படுத்தித் தருவதன் மூலம் வறுமைக்

கோட்டிற்கு மேல் உயர்த்தும் முக்கியமான வறுமை ஒழிப்புத் திட்டமாக இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏழை மகளிரைச் சென்றடையவும் அவர்களை நுண்கடன் பெறும் நிலையிலிருந்து சிறுதொழில்கள் முனைவோர் நிலைக்குப் படிப்படியாக உயர்த்தும் நோக்கத்திற்கும் சுய உதவிக் குழு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. இக் குறிக்கோளை அடைவதற்கு இவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பதுடன், பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தந்தும் இவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவாக சந்தைப்படுத்துதல் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் ஏற்கின்றன.

8.2.1 பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கூறுகள்

1. சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்குதல்
2. சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார உதவி வழங்குதல்
3. சிறந்த நிறுவனங்கள் மூலமாக தரமிக்க திறன் வளர்ச்சி பயிற்சி வழங்குதல்
4. கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
5. பயிற்சி அளித்தல்



மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் நலனுக்காக செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மேற்பார்வையிடும் மற்றும் கண்காணிக்கும் பொறுப்பு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2011–12ஆம் ஆண்டிற்கு மத்திய மாநில அரசுகளால் இத்திட்டத்திற்கு ரூ.135.25 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் ரூ.284.10 கோடி கடன் வழங்க இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் வகையில் செயலாக்கம் செய்ய கீழ்க்கண்ட முயற்சிகள் 2011–12 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்:

- ஊரகப் பகுதிகளில் உள்ள 22,214 தகுதி பெற்ற குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ.33.32 கோடி வழங்கப்படும்.
- 7,464 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் வழங்கப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் பெரிய அளவில் முக்கியத் தொழில்களை தேர்வு செய்யவும், அதனை ஊக்கப்படுத்தவும் மாவட்ட மற்றும் வட்டார அளவில் சரியான தொழில் தொகுப்புகளை உருவாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

- **22,214** சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.**7.77** கோடி மதிப்பீட்டில் தரமான திறன் வளர்ப்பு பயிற்சி சிறந்த நிறுவனங்களின் மூலம் வழங்கப்படும்.
- **4,860** தனி நபர்களுக்கு ரூ. **5.832** கோடி மதிப்பீட்டில் பொருளாதார கடனுதவி வழங்கப்படும்.

### 8.2.2 சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல்

சுய உதவிக் குழுக்கள் தங்களது பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய சந்தை நிலவரம் தெரியாமலும் மற்றும் வணிகப் பேச்சுவார்த்தை நடத்தப் போதுமான திறமை குறைவாக உள்ளதாலும், அவர்களுக்கு உதவிடும் வகையில், சுய உதவிக்குழு உற்பத்திப் பொருட்களின் விற்பனையை மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்த இந்த அரசினால் உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சுய உதவிக் குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்த மாநில அளவில் ஒரு நிரந்தரமான வணிக வளாகம் சென்னையில், நுங்கம்பாக்கத்தில் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. மேலும் இதே



போன்று ஊரகப் பகுதிகளில் விற்பனையை மேம்படுத்தும் வகையில் ரூ.**12.90** கோடி மதிப்பீட்டில் **30** மாவட்டங்களில் கட்டப்பட்டு வரும் **86** கிராமச் சந்தைகள் இந்த ஆண்டில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் சுய உதவிக் குழுக்களின் விற்பனையை மேம்படுத்தும் வகையில் விற்பனை மற்றும் கண்காட்சி அட்டவணை ஆண்டுதோறும் தயாரிக்கப்பட்டு மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் விற்பனைக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. **2011–12** ஆம் ஆண்டில் மாநில அளவில் இரண்டு, மாவட்ட அளவில் **64** மற்றும் வட்டார அளவில் **130** விற்பனைக் கண்காட்சிகளும் நடத்த தீர்மானிக்கப் பட்டுள்ளது.

### 8.2.3 சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வணிகச்சின்னம் மற்றும் பேக்கேஜிங்

சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், குறைந்த விலையில் இருந்தும் கூட, பொதுவான வணிகச்சின்னம் மற்றும் சிறப்பான பேக்கேஜிங் இல்லாத காரணத்தினால் சந்தையில் நிலையான இடத்தினைப் பெற இயலவில்லை. **2011–12** ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு மகளிர் உற்பத்தி செய்யும் பொருட்களின் சந்தைத் திறனை மேம்படுத்திட, சுய உதவிக் குழுக்கள்,

தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாநில / மாவட்ட அளவிலான அலுவலர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிறந்த நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கும். மாநில அளவில் ஒரு சிறந்த நிறுவனத்தை தேர்வு செய்து பொதுவான வணிகச்சின்னம் வழங்குவதற்கும், கண்கவரும் பேக்கேஜிங் செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. சுய உதவிக் குழு உற்பத்திப் பொருட்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவில் ஐந்து வருட வணிக மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 8.3 தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM)

மத்திய அரசு, பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை மறுசீரமைத்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தினை அறிவித்துள்ளது. இந்த அரசினால் இத்திட்டம் 2011–12ஆம் ஆண்டிலிருந்து "தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்" என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து குடும்பங்களையும் சுய உதவிக் குழுவில் இணைப்பது, மாவட்ட, வட்டார மற்றும் ஊராட்சி அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை உருவாக்குவது, உறுப்பினர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்குவதற்காக வரையறுக்கப்படாத நிதியினை கூட்டமைப்புகளுக்கு வழங்குவது மற்றும் ஊரக இளைஞர்களுக்கு வேலை



வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிப்பது போன்ற அம்சங்கள் திட்டமிடப்பட்டுள்ளது.

பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தை விட மேம்படுத்தப்பட்ட இந்த திட்டம், கிராமப்புறத்தில் வாழும் ஏழைகளின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைபடுத்துதலுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இத்திட்டம் மக்களின் பங்கேற்பு முறைகளின் மூலம் அவர்களின் தேவைகளுக்கேற்ப செயல்படுத்தப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் கிராமப்புற ஏழை மக்களை ஒன்று திரட்டி தங்களை தாங்களே நிர்வகிக்கும் நிறுவனங்களை உருவாக்கும் தளமாக விளங்குகிறது. குழுக்களாகவும் கூட்டமைப்புகளாகவும் மற்றும் தொழில் உற்பத்திக்கான அமைப்புகளாக விளங்கும் இந்த நிறுவனங்கள் பல்வேறுபட்ட நிதி மற்றும் தொழில் நுட்ப வசதிகளை மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் மூலமாகவும் வங்கிகளின் மூலமாகவும் பெறுவதற்கு வழிவகை உள்ளது.

## 8.4 நடப்பாண்டில் (2011–12) செயல்படுத்தப்படவுள்ள முக்கிய பணிகள்

1. சுய உதவிக் குழுக்களின் பொருளாதார தரத்தை மேம்படுத்த ரூ.10.00 இலட்சம் வரை தொழிற் கடன் 25 சதவீதம் வரையிலான மானியத்துடன் வழங்கப்படும்.

2. சிறப்பு கவனம் செலுத்தி திருநங்கையர் குழுக்கள் அமைத்து அவைகளில் தகுதி வாய்ந்த குழுக்களுக்கு ரூ.15.00 இலட்சம் வரை கடன் வழங்கி பொருளாதார நடவடிக்கைகளில் முன்னேறவும் மேலும் அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் வழிவகை செய்யப்படும்.

3. 65,000 சுய உதவிக் குழுக்கள் ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் அமைக்கப்படும். சுயஉதவிக் குழுக்கள் விடுபட்ட பகுதிகளிலும் குறைவாக அமைக்கப்பட்ட பகுதிகளிலும் முன்னுரிமை அளிக்கப்படும். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் விளிம்புநிலை மக்களைக் கொண்டும் சிறப்பு குழுக்கள் அமைக்கப்படும்.

4. சுழல் நிதி மானியமாக தலா ரூ.15,000/– வீதம் 42,214 சுய உதவிக் குழுக்களுக்கு (ஊரகம் 22,214 மற்றும் நகர்ப்புறம் 20,000) ரூ.63.32 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வங்கிகளிலிருந்து கடன் தொகை பெற்று தரப்படும்.

5. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பொருளாதார மேம்பாடு அடைவதற்காக வங்கிகள் மூலம் ரூ.4,000 கோடி கடன் பெற ஏற்பாடு



செய்யப்படும். சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் தேவையை கண்டறிந்து அதன் அடிப்படையில் கடன் உதவி வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

6. மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் 3000 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.1.00 இலட்சம் வீதம் ஊக்கநிதியாக இந்த நிதியாண்டில் வழங்கப்படும்.

7. நகர்ப்புற குடிசைப்பகுதி அளவிலான 300 கூட்டமைப்புகள் அமைத்து அவற்றை மேலும் வலுப்படுத்தும் வகையில் தரமதிப்பீட்டில் தேர்ச்சி பெறும் 150 குடிசைப்பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.1.00 இலட்சம் வீதம் ஊக்கநிதி வழங்கப்படும்.

8. சிறந்த நிறுவனங்கள் மூலம் 25,000 இளைஞர்களுக்கு பல்வேறுபட்ட தொழிற் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு, அந்த நிறுவனங்கள் மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

9. பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 7,464 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதாரக் கடன் வழங்கப்படும். திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.1.25 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

10. தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் / தேசிய ஊரக வாழ்வாதார திட்டம் (75% மத்திய அரசு மற்றும் 25% மாநில அரசு நிதி உதவியுடன்) தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டம் என்னும் பெயருடன் இந்த ஆண்டு 15 மாவட்டங்களில் 60 வட்டார ஊராட்சிகளில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.



## 9. உலக வங்கி உதவி பெறும் புதுவாழ்வு திட்டம்

### 9.1 முன்னுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நவம்பர் 2005–ம் ஆண்டு ''புதுவாழ்வு'' என்ற பெயரில் இத்திட்டம் துவக்கப்பட்டது. ''வாழ்ந்து காட்டுவோம்'' என 2006–ல் மறு பெயரிடப்பட்ட இத்திட்டம் 2011 முதல் மீண்டும் ''புது வாழ்வு'' என்றே அழைக்கப்படும். உலக வங்கி நிதி உதவியுடன் 5.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் 16 மாவட்டங்களில் இத்திட்டம் ரூ.717 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்ட காலம் செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. கூடுதல் நிதி ஆதாரத்துடன் மேலும் 3.8 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் பயன் பெற்றிடும் வகையில் ரூ.950 கோடி நிதி ஆதாரத்துடன் 10 மாவட்டங்களுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டு செப்டம்பர் 2014ல் நிறைவடைய உள்ளது.

மக்களே முன்நின்று தங்களின் வளர்ச்சிக்கு பொறுப்பேற்று நடத்துதல் என்ற அணுகுமுறையின் அடிப்படையில் திட்ட வடிவமைப்பு அமைந்துள்ளது. ஏழை எளிய மக்கள் குறிப்பாக பெண்களின் குரல் எடுபடும் வகையில் அவர்கள் பங்கேற்று அதிகார பங்களிப்பு பெற்றிட மக்கள் அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் இவர்கள் முக்கிய முடிவு எடுக்கின்ற அதிகாரம் பெறுவதுடன் வளர்ச்சிக்கான முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக்

கொள்ளும் வகையில் ஆற்றலளிப்பு பெறுகின்றனர். இந்த அணுகுமுறையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

- முடிவுகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஆதாரங்களை மேலாண்மை செய்யும் பொறுப்பு மக்கள் அமைப்புகளுக்கு பெற்றுத் தருதல்.
- மிகவும் ஏழை, நலிவுற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் நலனில் அதிக கவனம் செலுத்துதல்.
- ஊராட்சி அமைப்புகளுடன் வலுவான இணைப்புகளை ஏற்படுத்துதல்.
- வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை உருவாக்கித்தருதல்.
- மக்களின் தேவைகளுக்கு செவி சாய்த்து, பொறுப்புடன் மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் அனைத்து நிலைகளிலும் செயலாற்றுதல்.

### 9.2 திட்ட விரிவாக்கத்திற்கான கூடுதல் நிதி ஆதாரம்

மக்களை முன் நிறுத்தி, அவர்களை தங்களின் வளர்ச்சிக்கு பொறுப்பாக்கும் வழிமுறை மற்றும் புதுவாழ்வு திட்ட வடிவமைப்பு எதிர்பார்க்கும் பலன்களை அளிக்கவல்லதா என்பதை கண்டறியும் முகத்தான், குறிப்பிட்ட சில வட்டாரங்களில் இத்திட்டம் முன்னோடியாக செயல்முறைப்படுத்தப்பட்டது. இம்முயற்சி அடைந்த



வெற்றியின் அடிப்படையில் இத்திட்டம் 16 மாவட்டங்களில் குறிப்பிட்ட 70 வட்டாரங்களில் அடங்கும் 2509 கிராம ஊராட்சிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மொத்த கிராம ஊராட்சிகளில், 20 சதவீத ஊராட்சிகளும், மொத்தமுள்ள வட்டாரங்களில், 18 சதவீத வட்டாரங்களும், திட்ட செயலாக்கத்தின் கீழ் வந்துள்ளன. புது வாழ்வு திட்டம் அடைந்த வெற்றியே இதை மேலும் சில மிகவும் பின்தங்கியுள்ள மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த ஊக்குவித்தது.

திட்ட விரிவாக்கத்திற்கான மேலும் 10 மாவட்டங்கள் கண்டறியப்பட்டு அவற்றில் திட்ட செயலாக்கத்திற்கு தகுதியானவை என 46 வட்டாரங்கள் தெரிவு செய்யப்பட்டன. மேலும், ஏற்கனவே திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாவட்டங்களில் 4 வட்டாரங்கள் கூடுதலாக எடுக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே திட்ட செயலாக்கத்திற்கு உட்படும் 70 வட்டரங்கள் நீங்கலாக இவ்விரிவாக்கத்தின் மூலம், புதிதாக எடுக்கப்பட்டுள்ள 50 வட்டாரங்களில் 3.8 இலட்சம் ஏழை குடும்பங்கள் பயனடையும்.

### 9.3 திட்ட செயலாக்கப் பகுதிகள்

தமிழ்நாட்டில் உள்ள 385 வட்டாரங்களில், ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு வட்டாரங்களான 120 வட்டாரங்களில் திட்ட செயலாக்கம் நடைபெறும். மேலும்,

2011 செப்டம்பர் மாதம் முடிவடைய இருந்த திட்ட காலம், செப்டம்பர் 2014 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

திட்டம் ஏற்கனவே செயல்படும் வட்டாரங்கள் மற்றும் புதிதாக எடுத்துக்கொள்ளப்பட்ட வட்டாரங்கள் இவற்றில் அடங்கும் ஊராட்சிகள் தொடர்பான விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

### 9.3.1 திட்டப்பகுதிகள்

| திட்டம் | வட்டாரங்கள் | கிராம ஊராட்சிகள் | மொத்த குடும்பங்கள் (இலட்சத்தில்) | மொத்த இலக்கு குடும்பங்கள் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள் | 70 | 2,509 | 16.97 | 5.8 |
| புதிதாக எடுத்துக் கொள்ளப்பட்ட பகுதிகள் | 50 | 1,661 | 11.24 | 3.8 |
| மொத்தம் | 120 | 4,170 | 28.21 | 9.6 |



திட்ட நிதி ஆதாரம் – திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள்

| நிதி ஆதாரம் | ரூ. (கோடியில்) | சதவீதம் |
|---|---|---|
| உலக வங்கி (பன்னாட்டு வளர்ச்சி நிதியம் – IDA) | 541 | 75 |
| தமிழ்நாடு அரசு | 122 | 17 |
| மக்கள் பங்களிப்பு | 54 | 8 |
| மொத்தம் | 717 | 100 |

திட்ட நிதி ஆதாரம் – புதிய திட்டப் பகுதிகள்

| நிதி ஆதாரம் | ரூ. (கோடியில்) | சதவீதம் |
|---|---|---|
| உலக வங்கி (பன்னாட்டு வளர்ச்சி நிதியம் – IDA) | 760 | 80 |
| தமிழ்நாடு அரசு | 132 | 14 |
| மக்கள் பங்களிப்பு | 58 | 6 |
| மொத்தம் | 950* | 100 |

* ரூ.222.85 கோடி ஏற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டப்பகுதிகளுக்கும், ரூ.727.15 கோடி புதிய பகுதிகளுக்குமான ஒதுக்கீடாகும்.

## 9.4 திட்ட செயலாக்க அமைப்புகள்

திட்டத்தை செம்மையாக செயல்படுத்த மாநில சங்கம் ஏற்படுத்தப்பட்டு திட்ட இயக்குநர் தலைமையில் பல்முனை திறன் படைத்த வல்லுநர்கள் அடங்கிய குழு ஒன்று உள்ளது. புது வாழ்வு திட்ட விரிவாக்கத்தால் ஏற்படும் அதிக பளுவை கருத்தில் கொண்டு இவ்வலுவலகத்தில் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

திட்ட செயல்பாடு மற்றும் அதன் மேற்பார்வையை ஏற்று வழி நடத்த ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அளவிலான ஒரு சங்கம் உள்ளது. இச்சங்கத்தின் கீழ் பல்துறை வல்லுநர்களை அடக்கிய செயலாக்க அமைப்பு இயங்குகிறது.

களத்தில் திட்ட அமலாக்கத்தை செவ்வனே மேற்கொள்ள 10–15 கிராம ஊராட்சிகள் அடங்கிய ஒவ்வொரு பகுதிக்கும் 5 பணியாளர்கள் கொண்ட திட்ட ஒருங்கிணைப்பு அணி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணி கிராம அளவிலான அமைப்புகளுக்கு உறுதுணையாக நிற்கும்.

கிராம ஊராட்சி அளவில், இலக்கு மக்களை உள்ளடக்கிய சுயமாக செயல்படக்கூடிய தற்சார்பு அமைப்பான கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், திட்ட செயல்பாட்டிற்கு பொறுப்பாகிறது.



## 9.5 திட்ட செயலாக்க கட்டங்கள்

திட்ட செயல்பாட்டின் பல்வேறு கட்டங்கள் பின்வருமாறு:

புதிய திட்ட பகுதிகளில் செயல்பாடுகள்

1. துவக்க நிலை செயல்பாடுகள்
2. மக்கள் அமைப்புகள் அமைத்தல்
3. வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்

ஏற்கனவே உள்ள திட்ட பகுதிகளில் செயல்பாடுகள்

4. கிராம அளவில் நடவடிக்கைகளை வலுப்படுத்துதல்
5. கிராமங்களுக்கு இடையேயான மக்கள் அமைப்புகளை ஏற்படுத்துதல்
6. கிராமங்களுக்கு இடையில் வாழ்வாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்
7. சுய சார்பு நிலை அடைதல்

*{கூடுதல் விவரங்கள் பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளன}*

### 9.5.1 துவக்க நிலை செயல்பாடுகள்

1. திட்ட தொலைநோக்கு, குறிக்கோள்கள், உயிர் மூச்சுக் கொள்கைகள் மற்றும் திட்டம் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளில் பங்கேற்பாளர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தகவல்கள் மக்களை சென்றடைவதற்கான

செறிவான தகவல் தொடர்பு நடவடிக்கைகள் ஆரம்பக் கட்டத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

2. மக்களின் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு நடத்தப்பட்டு, சமூக வரைபடம் மற்றும் பொருளாதார நிலை அடிப்படையில் திட்ட இலக்கு மக்களாகிய ஏழை எளியோர், விளிம்பு நிலையில் உள்ளோர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோர் கண்டறியப்படுகின்றனர். இம்முறை இலக்கு மக்களை வெளிப்படைத்தன்மையுடன் கண்டறிய உதவுவதுடன், திட்ட செயற்பாங்கு மற்றும் அதன் வெளிப்பாடு இலக்கு மக்களால் அங்கீகரிக்கப்பட்டு முழுமையாக உரிமை கொண்டாடப்படுகிறது.

9.5.2 மக்களமைப்புகள் மேம்பாட்டு நடவடிக்கைகள்

1. கிராம வறுமை ஒழிப்புச்சங்கங்கள், சமூக தணிக்கைக்குழுக்கள், சுய உதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான சுய உதவிக்குழு கூட்டமைப்புகள் மற்றும் ஒத்த தொழில் குழுக்கள் (பூச்சரம்) போன்ற மக்கள் அமைப்புகளை உருவாக்கி, வலுப்படுத்தி, இவைகளின் திறன் வளர்த்தல்.
2. சுய உதவிக் குழுக்கள் கிராம அளவிலான ஏழை மக்களின் அடிப்படை அமைப்புகளாகும். விடுபட்ட இலக்கு மக்களைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் இத்திட்டத்தால் உருவாக்கப்படுகின்றன. பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறன் படைத்தோரின் நலனுக்காக இவர்களை உள்ளடக்கிய சிறப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்படுகின்றன.
3. ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக்குழுக்களுக்கு தேவைப்படும் நிதி மற்றும் பிற உதவிகளை புரிந்திடும் சிறப்பு அமைப்புகளாகும். இவை, ஏழை எளிய குடும்பங்கள் பயன்பெறும் வகையில் குறைந்த செலவினத்தில் நிதி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளை சிறந்த முறையில் வழங்குகின்றன.
4. கிராம அளவில் ஒரே மாதிரியான வாழ்வாதார நடவடிக்கையில் ஈடுபடுவோரை ஒருங்கிணைத்து பூச்சரமாக வடிவமைத்து இவர்களுக்கு தேவைப்படும் உதவிகள், பொது கொள்முதல், சந்தைப்படுத்துதல் போன்ற பொதுவான சேவைகளை பெற்று தரும் அமைப்பாக ஒத்த தொழில் குழு செயல்படும்.

9.5.3 வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள்

இலக்கு மக்கள் குடும்பங்கள் தங்களது வருவாயை பெருக்குவது, சொத்துக்கள் உருவாக்குவது மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் வாழ்வாதார மேம்பாட்டு கொள்கையாகும். இக்குடும்பங்கள் நிலையான வருவாயை ஈட்ட வழிவகை செய்யும் விதத்தில் வாழ்வாதார நடவடிக்கைகள் பேணப்பட்டு அவற்றின் வளர்ச்சிக்கான யுத்திகள் மேற்கொள்ளப்படும். இந்த குறிக்கோளை எட்டுவதற்காக கீழ்கண்ட அணுகுமுறைகள் கையாளப்படுகின்றன.

1. நிதிப் பற்றாக்குறை நிலையால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வாக உரிய காலத்தில் தேவையான நிதி ஆதாரம் பெறுவதற்கான சாதகமான சூழலை ஏற்படுத்துதல்.
2. தனியார் மற்றும் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களிலுள்ள வேலை வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் கிராமப்புற இளைஞர்களுக்கு தக்க தொழிற் பயிற்சி தந்து இவர்களைத் தயார் செய்தல்.
3. கிராம அளவிலான வாழ்வாதார வாய்ப்புகளை கண்டறிந்து இவற்றை தக்க முறையில் பயன்படுத்தி பலனடைய தேவையான நடவடிக்கைகள், உற்பத்தி பொருட்களுக்கான தேவை மற்றும் சந்தை வாய்ப்புகள் கண்டறிதல், தொழில் தொடர்பான இடையூறுகளை தவிர்ப்பதற்கான அறிவுரைகள் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளுதல். கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளிலிருந்து, தனிநபர் வாழ்வாதார மேம்பாட்டிற்கு சிறு கடன் வசதிகள் பெற வழிவகை செய்தல்.
4. தேவையான அடிப்படை வசதிகள், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதலுக்கான உதவி, மதிப்பு கூட்டும் நடவடிக்கைகள் மற்றும் உற்பத்தி தொடர்பான இடையூறுகளை தவிர்த்தல் ஆகியவற்றின் அடிப்படையில் தனிநபர் வாழ்வாதார நடவடிக்கைகளை



ஒத்த தொழிற் குழுக்களாகவும், தொழில் கூட்டமைப்புகளாகவும் உயர்த்திட ஆவன செய்தல்.

### 9.5.4 கிராம அளவிலான நடவடிக்கைகளை வலுப்பெறச் செய்தல்

இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் அனைத்தும் கிராம ஊராட்சி அளவிலானவை. முதல்நிலை மக்கள் அமைப்புகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டிய நிலை தற்போது தோன்றியுள்ளது. திட்டத்தின் சாதனைகள் நிலைத்திட, மக்கள் அமைப்புகள் தாங்களே தங்களது பணிகளை கவனித்துக்கொள்ளும் வகையிலும், திட்ட காலத்திற்கு பின்னர் திட்டப்பணியை இவ்வமைப்புகளே மேற்கொள்வதற்கான முயற்சிகளுடன் திட்ட செயல்பாடுகளை தீவிரப்படுத்துவதற்கு வேண்டிய சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வாயிலாக தேவையான வளங்கள், உள்ளீடுகள், திறன், அறிவாற்றல் ஆகியவற்றை இத்திட்டம் திரட்டும். இதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் தனிக் குழுக்கள் அமைக்கப்படும். இவை, திட்டத்தால் தோற்றுவிக்கப்பட்டுள்ள மக்கள் அமைப்புகளுக்கும், அரசுத்துறை மற்றும் பிற நிறுவனங்களுக்கிடையே ஒரு கூட்டாண்மை ஏற்பட பாடுபடும்.

இத்திட்டத்தால் உருவாக்கப்படும் சமூக வல்லுநர்கள் என்ற சமூக மூலதனத்தை இத்திட்டத்தின் பல்வேறு செயல்பாடுகளுக்கு பெருவாரியாக பயன்படுத்தப்படுகிறது. இந்த சமூக வல்லுநர்கள் தங்களது களப்பணி மூலம் பெற்றுள்ள அறிவு, திறன் ஆகியவற்றை சமுதாய அமைப்புகள், அரசுத்துறைகள் மற்றும் பிற நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. திட்டம் செயல்படுத்தப்படும் அனைத்து மாவட்டங்களிலும் சமூக வல்லுநர்களை உள்ளடக்கிய மக்கள் கற்றல் மையங்கள் (மகமை) தோற்றுவிக்கப்பட்டு இவர்களுக்கென தனித்துவமுடைய அமைப்புச் சார்ந்த அங்கீகாரம் பெற்றுத்தரப்பட்டுள்ளது.

### 9.5.5 கிராமங்களுக்கு இடையிலான அமைப்புகளை உருவாக்குதல்

முதல் தலைமுறை மக்களமைப்புகளாகிய சுயஉதவிக்குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றை ஊக்குவித்து வழிநடத்திட மக்கள் கற்றல் மையம், தொழில் கூட்டமைப்புகள் போன்ற இரண்டாம் தலைமுறை மக்கள் அமைப்புகளை உருவாக்கி அவற்றைப் பேணுதல். திட்ட காலத்திற்குப் பின்னரும் மக்கள் தொடர்ந்து தங்கள் தேவைகளை பூர்த்தி செய்திடவும் நிலையான சேவைகளைப் பெற்றிடவும் இரண்டாம் தலைமுறை மக்களமைப்புகள் செயலாற்றும்.



இந்த இரண்டாம் தலைமுறை அமைப்புகள் கிராமங்களுக்கு இடையே, பகுதி அளவில், வட்டார அளவில் மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பெற்று கீழ்க்கண்ட குறிக்கோள்களுடன் சேவை புரியும்.

1. கிராம அளவில் உள்ள முதல் தலைமுறை மக்கள் அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் இந்த அமைப்புகள் மக்களுக்கு தரமான சேவை புரிதலை உறுதி செய்தல்.
2. திட்ட காலத்திற்குப் பின்னரும் முதல் தலைமுறை மக்கள் அமைப்புகள் அடைந்துள்ள சாதனைகளை நிலைக்கச் செய்து அனைத்து இலக்கு மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலுதல்.
3. இலக்கு மக்களின் வாழ்வாதார தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து மக்களின் முயற்சிகளை ஒருமுகப்படுத்தி, தொழில் மேம்பாடடைய தேவையான அடிப்படை வசதிகள், உபகரணங்கள், தொழில்நுட்ப உதவிகள் மற்றும் சந்தை இணைப்புகள் ஏற்படுத்துதல்.
4. கிராமங்களுக்கு இடையே தோன்றக்கூடிய பிரச்சனைகளை சுமுகமாக தீர்ப்பதற்கான வழிவகை காணுதல்.
5. நிதி நிறுவனங்களுடன் முறையான தொடர்புகள் ஏற்படுத்தித் தருதல், வாழ்வாதார நடவடிக்கைகள் குறித்த அடிப்படை தகவல் பரிமாற்றம், தேவைப்படும் கடன்களை எளிதில் பெறுவதற்கான முயற்சிகள்

மற்றும் காப்பீடு வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்துதல்.

**9.5.6** கிராமங்களுக்கிடையேயான வாழ்வாதார மேம்பாடு

இதுவரை மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ஒன்றுக்கொன்று உறுதுணையாக அமைந்திடவும் மேலும் அவற்றை வளர்ச்சி அடையச் செய்யவும் தேவையான முயற்சிகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும். இதன் மூலம் வாழ்வாதார நடவடிக்கைகள் கிராமம் என்ற எல்லையைத் தாண்டி, பல கிராமங்களுக்கு இடையே விரிவடையச் செய்வதன் மூலம் வளர்ச்சி பரிமாணத்தின் அனுகூலங்களை பெறுதல் எளிதாகும். இந்த திட்டம் ஒத்த தொழில் குழுக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளை இணைத்து முனைப்பாக செயல்படுத்தி நிலைத்து தழைத்திட வழிவகை செய்ய அனைத்து முயற்சிகளையும் உயர்நிலை கூட்டமைப்புகள் மூலம் உருவாக்கும்.

ஒத்த தொழில் குழுக்களின் பரிமாண வளர்ச்சிக்கான செயல்பாடுகளை உயர்நிலை கூட்டமைப்பு கவனித்துக் கொள்ளும். இவ்வுயர்நிலை கூட்டமைப்புகள் தகவல் பரிமாற்ற இணைப்பு, தொழில் நுட்ப உதவிகள், மதிப்பு கூட்டுதல், கூட்டு கொள்முதல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற பொது சேவைகளை மேற்கொண்டு ஒத்த தொழில் குழுக்கள் தங்களது வாழ்வாதார நடவடிக்கைகளை அடுத்த



கட்டத்திற்கு எடுத்துச் சென்று நிலையான பலன்கள் பெற்றிட உதவிடும்.

**9.5.7** கிராம சுயசார்பு நிலை

கிராமங்களுக்கு இடையேயான திட்ட நடவடிக்கைகளை வலுப்பெறச் செய்து நிலை நிறுத்துவதே கிராம சுய சார்பு ஆகும். இதன் மூலம் திட்டத்தின் வறுமை ஒழிப்பு முயற்சிகளின் தாக்கத்தைப் பெருக்கி, திட்ட காலத்திற்குப் பின்னர் மேற்கொள்ள வேண்டிய வழிமுறையை உருவாக்கி, திட்டத்தை ஒவ்வொரு நிலையிலும் முனைப்பாக செயல்படுத்திட சமுதாயத்தை தயார்செய்திடவும், திட்ட கோட்பாடுகள் மற்றும் யுக்திகளை கிராம அளவிலும் கிராமங்களுக்கிடையிலும் வலுப்பெறச் செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திட்ட காலத்திற்குப் பின்னரும் உயர்நிலை மக்கள் அமைப்புகள் சமுதாயத்திற்கு தேவைப்படும் சேவைகளை சரியான கட்டணத்தில் வழங்கிட, திறன் வளர்ப்பு மற்றும் அனைத்து ஊக்குவிக்கும் உறுதுணை முயற்சிகள் எடுத்து நிலைக்கச் செய்ய கவனம் செலுத்தும். உயர்நிலை மக்கள் அமைப்புகளை வலுப்பெறச் செய்து அவைகளை நிலைப்படுத்துவதன் மூலம் திட்ட காலம் முடிவடையும் தருணத்தில் மக்கள் இடர்பாடின்றி திட்ட செயல்பாடுகளை பொறுப்பேற்று நடத்திசெல்ல தயார் செய்தல் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இலக்கு மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்பாடடையச் செய்து, மக்களை சுயசார்புடையவர்களாக ஆக்கி, நிர்வகிக்க பொறுப்பாக்கி, தங்களின் செயல்பாடுகளை தாமே கூர்ந்தாய்வு செய்து, தங்களின் சிறப்பு செயலாக்கங்களை பிறரும் பின்பற்றும் வகையில் முன் உதாரணமாக நடந்திட ஏதுவான நடவடிக்கைகள் திட்டத்தால் மேற்கொள்ளப்படும்.

## 9.6 திட்ட முன்னேற்றம்

### திட்டத்தின் முக்கிய சாதனைகள்

| வ. எண் | நடவடிக்கைகள் | 31.3.2011 வரை | 31.7.2011 வரை |
|---|---|---|---|
| திட்ட நிதி செலவின சாதனைகள் | | | |
| 1 | மக்கள் பங்கேற்புடன் மக்கள் நிலை ஆய்வு செய்து இலக்கு மக்களை கண்டறிந்து கிராம சபையில் ஒப்புதல் பெறுதல் | முடிவடைந்துள்ளது | முடிவடைந்துள்ளது |
| 2 | கிராம வறுமை ஒழிப்பு சங்கம் ஏற்படுத்துதல் | முடிவடைந்துள்ளது | முடிவடைந்துள்ளது |
| 3 | பெண்கள் மற்றும் இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 14,688 | 14,846 |
| 4 | மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு சுய உதவிக் குழுக்களை உருவாக்குதல் | 7,877 | 7,962 |
| 5 | மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வாழ்வாதார நடவடிக்கைகள் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட நிதி உதவிகள் | 1,50,039 | 1,58,826 |
| 6 | வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்கள் | 1,44,733 | 1,57,661 |
| 7 | வேலை வாய்ப்பு பெற்றுள்ள இளைஞர்கள் | 1,02,979 | 1,21,553 |
| 8 | மறு சீரமைக்கப்பட்டுள்ள ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்புகள் | 2,335 | 2,367 |
| 9 | வழங்கப்பட்டுள்ள வாழ்வாதார நிதி | ரூ.127.92 கோடி | ரூ.133.67 கோடி |
| 10 | அமைக்கப்பட்ட ஒத்த தொழில் குழுக்கள் (பூச்சரம்) | 1,849 | 2,344 |
| திட்ட நிதிக்குட்படாத சாதனைகள் | | | |
| 11 | சுழல் நிதி பெற்ற புதிய மற்றும் மாற்று திறனாளிகளுக்கான சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 17,394 | 18,022 |
| 12 | சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட முதல் நிதியுதவி | ரூ.101.54 கோடி | ரூ.108.67 கோடி |
| 13 | இரண்டாம் தவணை நிதியுதவி பெற்ற சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை | 5,254 | 5,666 |
| 14 | சுயஉதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட இரண்டாம் நிதியுதவி | ரூ.68.68 கோடி | ரூ.74.72 கோடி |
| 15 | திட்டத்தின் முயற்சியால் பராமரிப்புத் தொகை பெற்ற மாற்று திறனாளிகளின் எண்ணிக்கை | 6,459 | 8,075 |
| 16 | உபகரணங்கள் மற்றும் கருவிகள் பெற்ற மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை | 14,081 | 15,014 |

| | | | |
|---|---|---|---|
| **17** | திட்ட முயற்சியின் பலனாக முதியோர் உதவித் தொகை பெற்றவர்களின் எண்ணிக்கை | 52,914 | 56,765 |

## 9.7 நிதி செலவினம்

இத்திட்டத்தில் தொடக்கம் முதல் **31.3.2011** வரை ரூ.**589.19** கோடி நிதி ஏற்கனவே திட்டம் செயலாக்கத்தில் உள்ள பகுதிகளில் செலவிடப்பட்டுள்ளது.

**01.04.2011** முதல் **31.07.2011** வரை ஏற்கனவே திட்ட செயலாக்கத்தில் உள்ள மற்றும் புதிய திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ. **51. 83** கோடி ஆகும்.

நடப்பு நிதியாண்டிற்கு **(2011–2012)** ஏற்கனவே உள்ள திட்டப் பகுதிகள் மற்றும் புதிய பகுதிகளுக்கான செயல்பாட்டிற்காக ரூ.**315.11** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 10. சுனாமி மறுவாழ்வுத் திட்டங்கள்

சுனாமி என்கிற எதிர்பாராத இயற்கைப் பேரழிவு **2004–**ஆம் ஆண்டு டிசம்பர் **26**ஆம் நாள் தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைத் திடீரென்று கடுமையாகத் தாக்கி மிகப் பெரிய அளவில் கடலோர சமுதாயத்தின் உயிருக்கும், உடமைக்கும் வாழ்வாதார உட்கட்டமைப்புகளுக்கும் பெருத்த சேதங்களை விளைவித்தது. ஆயினும், தமிழ்நாடு அரசு தன்னுடைய அனைத்து சக்தியையும் முழு அளவில் ஒன்று திரட்டி, கடும் முயற்சிகள் மேற்கொண்டு மிகக் குறுகிய காலத்திலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கியும் அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தியும் விரைவில் இயல்புநிலை வாழ்க்கைக்குக் கொண்டு வந்தது. அரசின் இந்தத் திறன்மிகு சீரிய முன்முயற்சிகளால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய மனதில் நம்பிக்கையூட்டப்பட்டு சுனாமி அதிர்ச்சியிலிருந்து அவர்கள் விரைவில் மீண்டு வந்தனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் ஒரு அங்கமான சுனாமி திட்ட செயலாக்க அலகு இத்துறைக்கு ஒப்படைக்கப்படும் சுனாமி மறுவாழ்வுத் திட்டப் பணிகளை **12** கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தவும், கண்காணிக்கவும் **01.08.2005–**ல் ஏற்படுத்தப்பட்டது. இவ்வலகு கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொண்டுள்ளது.

## 10.1. சுனாமி அவசர கால உதவித் திட்டம் (**Tsunami Emergency Assistance Project**)

சுனாமி அவசர கால உதவித் திட்டம், ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் 6.4.2005 முதல் செயல்படுத்தப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதலும் மற்றும் சேதமடைந்த உட்கட்டமைப்புகளை சீரமைத்தலும், இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் ஆகும். இத்திட்டத்தின் கீழ் ரூ.292.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இரண்டு முக்கிய உட்கூறுகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

1) வாழ்வாதார மேம்பாட்டு உட்கூறின் கீழ் 12 கடலோர மாவட்டங்களில் உள்ள 2,70,308 பயனாளிகளுக்கு ரூ.183.23 கோடி செலவில் உதவிகள் வழங்கப்பட்டன. இந்த உட்கூறின் கீழ் சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார உதவி, சுழல் நிதி உதவி வழங்குதல், மாற்றுத் திறனாளிகளுக்கு மானியம், மீனவ சங்கங்களுக்கு உதவுதல், இளைஞர்கள், கடலோர சமுதாயத்தினர் மற்றும் பெண்களுக்குத் திறன் வளர்ப்பு மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி அளித்தல், சுகாதாரம்



குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் பல்வேறு சமுதாய உட்கட்டமைப்புகளை உருவாக்குதலும் ஆசிய வளர்ச்சி வங்கியின் மானிய உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

2) ஊரக உட்கட்டமைப்பு உட்கூறின் கீழ் தார் சாலை அமைத்தல், பொதுக் கட்டிடங்கள் கட்டுதல், நேரடி நெல் கொள்முதல் மையங்கள் அமைத்தல் போன்ற 821 பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கியின் கடன் உதவியுடன் ரூ. 96.27 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன.

## 10.2. இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம் (**Rajiv Gandhi Rehabilitation Package**)

இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டம், மத்திய அரசின் நிதியுதவியுடன் 2006ல் ஆரம்பிக்கப்பட்டு சுனாமி திட்டச் செயலாக்க அலகினால் ரூ.716 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இத்திட்டம், கீழ்க்கண்ட உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

**10.2.1 தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய வீடுகளைக் கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்தல்**

திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய ஐந்து மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள் முதலில் கட்டுவதற்கு முன்வந்து பின்னர் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் ரூ.63.75 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகள் உள்ள பகுதிகளில் ரூ.8.04 கோடி செலவில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், குடிநீர்ப் பணிகள், தெரு விளக்குகள், வீட்டு மின்இணைப்பு வழங்குதல், நிலத்தைச் சமன்படுத்துதல், பொதுக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற 3,009 அடிப்படை வசதிப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

**10.2.2 தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய இடங்களில் அடிப்படை வசதிகள் செய்தல்**

தொண்டு நிறுவனங்கள் தங்கள் நிதியில் கட்டிய வீடுகள் இருக்கும் பகுதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், சுகாதார வசதிகள், நிலத்தைச் சமன்படுத்துதல், தெரு விளக்குகள் மற்றும் வீட்டு மின் இணைப்பு வழங்குதல் போன்ற 32,301 அடிப்படை வசதிப்பணிகள் ரூ.54.27 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.



**10.2.3 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்தல்**

கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 0–200 மீட்டர் வரை உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளும், 01.01.2006 அன்று 10 ஆண்டுகள் பழமையான மற்றும் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 1,000 மீட்டருக்குள் அமைந்த இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் சிங்காரவேலர் மீனவர் குடியிருப்புத் திட்டம் போன்ற திட்டங்களில் கட்டப்பட்டுப் பழுதடைந்த வீடுகளும் மீண்டும் வலுவுள்ளதாகக் கட்டுவதற்கு எடுக்கப்பட்டன.

11 கடலோர மாவட்டங்களில் 18,299 வீடுகள் ரூ.499 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு இதுவரை 17,219 வீடுகள் ரூ.454 கோடி மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் நிலுவையில் உள்ள 1,080 வீடுகள் பணி முன்னேற்றத்தில் உள்ளன. இவ்வீடுகள் யாவும் விரைவில் முடிக்கப்படும்.

இந்த வீடுகள் கட்டும் பகுதிகளில் சிமென்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் பணிகள், தார் சாலைகள், எரிமேடைகள், பொது கட்டிடங்கள் கட்டுதல், சுகாதாரம் மற்றும் வடிகால் அமைத்தல் போன்ற 3,246 அடிப்படை வசதிப்பணிகள் ரூ.56.67 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்ட சேமிப்பு நிதியிலிருந்து 138 கூடுதல் அடிப்படை வசதிப்பணிகள் ஜுலை, 2010ல் ரூ.7.86 கோடி மதிப்பில் எடுக்கப்பட்டு இதுவரை 70 பணிகள் ரூ.3 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிகளை டிசம்பர் திங்கள் 2011–ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

10.3 அவசர கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம்–கடலோர சமுதாயத்தின் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் குறைக்கும் திட்டம் ( ETRP-VRCCP )

இத்திட்டம், முதலில் உலக வங்கியின் கடனுதவியுடன் 2005ல் (அரசு ஆணை (நிலை) எண்.384, வருவாய்த் துறை (என்.சி.4(1)), நாள் 01.07.2005) தொடங்கப்பட்டது. சுனாமியின் பாதிப்புகளைக் குறைப்பதற்காக மாநில அரசினால் நிறைவேற்றப்பட்ட மீட்பு மற்றும் மறுகட்டமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. மேலும் அக்டோபர் 2007க்குள் இத்திட்டம் நிறைவுறும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அடுத்து வந்த காலங்களில் தொடர்ந்து கொண்டே இருந்த நடைமுறைகளால் இத்திட்டம் டிசம்பர் 2009ல் தான் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு சுமார் ரூ.670 கோடி ஆகும். மேலும், இத்திட்டத்தின் காலஅளவு 31.12.2011 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவசர



கால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டம், எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல் மற்றும் வழிகாட்டும் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல் ஆகிய இரண்டு முக்கிய உட்கூறுகளைக் கொண்டுள்ளது.

10.3.1 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகளை மீளக்கட்டுதல்

11 கடலோர மாவட்டங்களில் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1,000 மீட்டருக்குள் அமைந்துள்ள 15,056 எளிதில் பாதிப்புக்குளாகும் வீடுகள் வருவாய் துறையால் மீண்டும் கட்டுவதற்கு அடையாளம் காணப்பட்டு தொண்டு நிறுவனங்களால் மறுஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த வீடுகள் 157 தொகுப்புகளில் மீளக்கட்டப்படுகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்ட பின் பகுதி I–ல் (மே–ஜுலை, 2010) 61 தொகுப்புகளில் 5,619 வீடுகளும் பகுதி II–ல் (ஆகஸ்ட் –அக்டோபர்,2010) 96 தொகுப்புகளில் 9,437 வீடுகளும் மீண்டும் கட்டப்படுவதற்கு எடுக்கப்பட்டுள்ளன. இந்த 15,056 வீடுகளில் 14,385 வீடுகள் தகுதியானவை எனக் கண்டறியப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

10.3.2 இடமாற்றுப்படி மற்றும் மாத வாடகைப் படி வழங்குதல்

வீடுகள் கட்டி முடிக்கப்படும் கால அளவு 15 மாதங்களாகும். இவ்வீடுகள் கட்டி முடிக்கப்படும் வரை பயனாளிகளுக்கு ஒரே தவணையாக ரூ. 1,000 இடமாற்றுப் படியாகவும் 15 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 500 வீதம் வாடகைப் படியாகவும் வழங்கப்படுகிறது.

கட்டப்படும் புதிய வீடுகளை இயற்கை இடர்பாடுகளிலிருந்து காப்பீடு செய்வதற்காக ரூ. 1,000 வரை வழங்கப்படுகிறது.

பயனாளிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், வீடுகளின் தரம் குறித்து பயிற்சி அளிக்கவும் வீட்டின் உரிமையாளர் என்ற உணர்வை உருவாக்கவும் செயல்பாட்டின் அடிப்படையில் 11 தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் கிராம அளவில் குறைதீர்க்கும் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், தலைவராகவும், மாவட்ட திட்ட செயலாக்க அலகின் திட்ட ஒருங்கிணைப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), வட்டாட்சியர், செயற் பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தோர் உறுப்பினர்களாகவும்



உள்ளனர். கிராம அளவிலான குறை தீர்க்கும் குழுவிற்கு கிராம ஊராட்சித் தலைவர், தலைவராகவும், துணை தலைவர், கிராம நிர்வாக அலுவலர், திட்டப் பொறியாளர், ஊராட்சியின் ஒரு பெண் உறுப்பினர், ஒரு ஆதி திராவிடர்/பழங்குடியின உறுப்பினர் மற்றும் தொண்டு நிறுவனத்தின் சார்பாக ஒருவரும் உறுப்பினர்களாக உள்ளனர்.

10.3.3 வழிகாட்டும் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைத்தல்

புயல், அலைச்சீற்றம் மற்றும் சுனாமி போன்ற அவசர காலத்தில் கடலோர சமுதாயத்தினர் பாதுகாப்பான பகுதிகளை எளிதாகவும், விரைவாகவும் அடைவதற்கு ஏதுவாக கடலோரப் பகுதிகளில் வழிகாட்டும் பலகைகளுடன் கூடிய வெளியேறும் சாலைகள் அமைக்கும் பணி, இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 65 கோடி மதிப்பில் 12 கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தப்பட உள்ளன. உலக வங்கியின் அனுமதி பெற்ற தனியார் வல்லுனர் மூலம் மதிப்பீடுகளும் வடிவமைப்பும் இறுதி செய்யப்பட்டுள்ளன. இதுவரை 64 கி.மீ நீளமுள்ள வெளியேறும் சாலைகளுக்கான மதிப்பீடு ரூ. 35.53 கோடி மதிப்பில் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன.

## 11. பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் (IFAD) உதவியுடன கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

### 11.1 திட்டக் குறிக்கோள் மற்றும் நோக்கம்

நிலைத்த தன்மையுடன் கூடிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்தி அவற்றை சீரிய முறையில் நிர்வகிக்க ஏதுவாக தற்சார்பான கடலோர சமுதாயத்தை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர சமுதாயத்தின் உதவியுடன் பெண்களால் நிர்வகிக்கப்படும் தொழில்கள் மற்றும் வள ஆதார அமைப்புகள் ஆகியவை மூலம் இத்திட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.

### 11.1.1 திட்ட விவரங்கள்

| | | |
|---|---|---|
| திட்டகாலம் | : | 8 வருடங்கள் (2007 ï 2015) |
| மொத்த நிதி | : | ரூ.283.69 கோடி |
| திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்கள் | : | திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி |
| திட்டப் பகுதி | : | 25 ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட 109 ஊராட்சிகள் |
| பயனடைவோர் | : | 1.55 இலட்சம் குடும்பங்கள் சார்ந்த சுமார் 6 இலட்சம் பேர் |



### 11.1.2 திட்ட பயனாளிகள்

சுனாமியால் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்பட்ட கீழ்க்கண்ட கடலோரப் பகுதியில் வசிக்கும் மக்கள் :–

- வள்ளம், சிறு படகு போன்றவற்றை பயன்படுத்தி கரையோரங்களில் மீன்பிடிக்கும் மீனவர்கள்.
- கடலோரப் பகுதிகளில் மீன்பிடி தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள கூலித் தொழிலாளர்கள்.
- சிறிய அளவில் மீன் வியாபாரம் செய்யும் மகளிர் மற்றும் பதப்படுத்துவோர்
- சிறு மற்றும் குறு விவசாயிகள்
- பிற சிறு தொழில் செய்வோர் (உ.ம் :– சங்கு, சிப்பி சேகரிப்போர்)
- சமுதாய பங்கேற்புடன் கண்டறியப்பட்ட பரம ஏழைகள் மற்றும் ஏழைகள்

### 11.1.3 திட்டக்கூறுகள்

**i)** கடலோர வள ஆதார மேலாண்மை

அ. சமுதாய ஆதரவு

கடலோர கிராம ஊராட்சிகள் பல தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 30 கூட்டு வள ஆதார மையங்கள் திட்டத்தைச் செயலாக்க துணைபுரியும் அரசு சாரா தொண்டு

நிறுவனங்களால் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கூட்டு வள ஆதார மையத்திலும் தொகுதி ஒருங்கிணைப்பாளர், தொகுதி ஊக்குவிப்பாளர், தொகுதி தொழில் ஊக்குநர் ஆகிய மூன்றுபேர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். கூட்டு வள ஆதார மையம் அது அமைந்துள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இத் திட்டத்தை செயல்படுத்துவதில் உதவி புரிகிறது.

ஆ. சமுதாய வள ஆதாரங்களுக்கான திட்டமிடுதல்

மக்கள் பங்கேற்புடன் வளங்களை ஆய்வு செய்வதிலும், வாழ்வாதார ஆய்வு செய்து, வாழ்வாதார விளக்கப்படம் தயாரித்தல் மற்றும் உட்கட்டமைப்பு தேவைகளைக் கண்டறிந்து அவற்றை முன்னுரிமைப்படுத்துவதிலும் கூட்டு வள ஆதார மையம் ஈடுபடுகிறது. கண்டறியப்பட்ட உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவேற்ற, நுண்திட்டங்களை பயனாளிகளின் பங்கேற்புடன், வாழ்வாதாரத் தேவைகள், மற்றும் சுற்றுச் சூழல் போன்றவற்றை பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்ற திட்ட நிதியாக 90 விழுக்காடு நிதியும், சமுதாயத்தின் பங்குத் தொகையாக 10 விழுக்காடு நிதியும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.



இ. மீன் வள மேலாண்மை

மீன்பிடித் துறையில் அனுபவம் பெற்ற நிறுவனங்களின் உதவியுடன் மீன் வள மேலாண்மை மேற்கொள்ளப்படுகிறது. அத்துடன் பொறுப்பான மற்றும் பாதுகாப்பான மீன்பிடி வழிமுறைகளை ஊக்கப்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மீனவர் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்து கலந்துரையாட கருத்துப் பட்டறைகளும் விழிப்புணர்வு பயிற்சிகளும் நடத்துதல் ஆகியவற்றை இத்திட்டம் மேற்கொண்டு வருகிறது.

**11.1.4** ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு தவிர்க்கும் வழிமுறைகள்
**1.** சுய உதவிக் குழுக்களுக்கு கடன் உதவி

வருவாய் ஈட்டும் தொழில்களைக் கண்டறிந்து அவற்றில் ஈடுபட ஏதுவாக சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாக தேவையான கடனை வங்கிகளிடமிருந்து பெற்றுத் தருதல் போன்ற பணிகளை கூட்டு வள ஆதார மையம் மேற்கொள்ளும். மாவட்ட செயலாக்க அலுவலகம், கூட்டு வள ஆதார மையங்களுடன் இணைந்து, இது தொடர்பான பட்டறிவுப் பயிற்சிகளை வங்கிப் பணியாளர்களுக்கும் இதர நிதி நிறுவனங்களுக்கும் நடத்தும். தகுந்த நேரத்தில் கடனுதவி வழங்கும் அவசியத்தை உணர்த்துவதற்காக

வங்கிப் பணியாளர்களுக்கு பட்டறிவுப் பயணங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. இடர் மேலாண்மை மற்றும் காப்பீடு

கடலோர சமுதாயத்தின் இடர் மேலாண்மைத் தேவைகள் தொடர்பாக விவாதிக்க மாவட்ட செயலாக்க அலுவலகங்கள் பல்வேறு கருத்தரங்குகளை நடத்தி வருகின்றன. இடர்பாடு காரணமாக ஏற்படும் சேதம், கால்நடைஇழப்பு மற்றும் விபத்து ஆகியவற்றால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்டத் தேவையான துயர் துடைப்பு நிதியை குறைந்த வட்டிக்கு வழங்க வகை செய்யப்படுகிறது. இந்த நிதியில் 4/5 பங்கு திட்ட நிதியாகவும், 1/5 பயனாளிகளின் பங்குத் தொகையாகவும் இணைத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், நுண்காப்பீடு தொடர்பான பட்டறைகள் நடத்தப்பட்டு, நுண்காப்பீடு திட்டங்கள் விளக்கப்பட்டு தகுந்த திட்டத்தை தேர்ந்தெடுக்கச் செய்தல் மற்றும் மீனவர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு இது தொடர்பான பயிற்சிகள் அளித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3. தொழில் முயற்சிக்கான மூலதன நிதி

சுய உதவிக் குழுக்களும் மீனவர் சங்கங்களும் வங்கிகளிலிருந்து அவர்கள் பெறும் கடன் தொகைக்கு



அதிகமாக நிதி தேவைப்படின் இந்த நிதியிலிருந்து உதவி பெறலாம். இந்நிதி, தொழில் துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்ட அமைப்பினால் நிர்வகிக்கப்படும். இந்த அமைப்பு IFAD நிறுவனத்தின் கொள்முதல் நடைமுறைப்படி தேர்வு செய்யப்படும்.

11.1.5 வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சி

1. சுய உதவிக் குழுக்களுக்கான உதவி

சுய உதவிக் குழுக்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் தரம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதில் கண்டறியப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்ய பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் வாயிலாக சரிவர செயல்படாத குழுக்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு அவற்றிற்கு வங்கிக் கடன் இணைப்புகள் அளிக்கப்பட்டு சுய உதவிக் குழுக்களுக்கான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2. மீன் விற்பனை சங்கங்கள் ஏற்படுத்துதல்

திட்ட மேலாண்மை அலகு (Project Management Unit) தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்பு (South India Federation of Fishermen's Societies) ஆகியவை இணைந்து மீன் விற்பனை

சங்கங்கள் நிறுவ புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. இந்த மீன் விற்பனை சங்கங்களில் சொந்தமாக கட்டு மரம், வள்ளம் மற்றும் சிறு படகு மூலம் மீன் பிடிப்போர் மட்டுமே உறுப்பினர் ஆவர். சங்கங்களின் உறுப்பினர்களை கடனிலிருந்து மீட்க, தென்னிந்திய மீன் விற்பனை சங்கங்களின் கூட்டமைப்புக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக் கூட்டமைப்பு மூலமாக படகு கட்டும் தளம் மற்றும் படகு இயந்திரம் பழுது நீக்கும் நிலையம் தொடர்பாக பெறப்படும் முன்மொழிவுகள் ஆய்வு செய்யப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு வருகிறது.

**3.** இளைஞர்களுக்கான தொழில் கல்விப் பயிற்சி

வள ஆதார அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் (Resource NGOs), இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் தொழில்கள் மற்றும் அவற்றில் பயிற்சி அளிப்பதில் சிறந்த நிறுவனங்களை கண்டறிகின்றன. இத்தொழில்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. அங்கு அளிக்கப்படும் வேலைவாய்ப்புப் பயிற்சிகளின் கால அளவு, மாணவர்களுக்கான உதவித் தொகை, ஊக்கத் தொகை ஆகியவை தொண்டு நிறுவனங்களால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. பெறப்படும் விண்ணப்பங்களை கூட்டு வள ஆதார மையங்கள் ஒருங்கிணைக்கின்றன. வேலை வாய்ப்பு பயிற்சி அளிக்கப்படும் இளைஞர்களில் 25 சதவீதம் பெண்களாக இருக்க வேண்டும்.



**4.** நுண் தொழில் மேம்பாடு

தொழில் நுட்ப வல்லுநர்கள் / சிறந்த நிறுவனங்கள் / கல்விக் கூடங்கள் ஆகியவை மாவட்ட வாரியாக தொழில் உட்பிரிவுகளையும் அவை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொள்கின்றன. மேலும் திட்ட மேலாண்மை அலகு, நுண் தொழில் மேம்பாட்டில் அனுபவம் உள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து குறிப்பிட்ட தொழில் உட்பிரிவில் தொழில் தொகுப்புகள் (Clusters) ஏற்படுத்த முனைகிறது.

**11.1.6** சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மீனவர்களுக்கு பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டு கடல் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடல் பாதுகாப்பை உறுதிப்படுத்திட ஏதுவான நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பான விழிப்புணர்வுக்காக துறை சார்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டுள்ளன. கடலோர பள்ளிக் குழந்தைகளுக்கு பேரிடர் மேலாண்மை தொடர்பாக கற்பித்தலின் அவசியம் குறித்து விளக்கும் பணி வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. துவக்கப் பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் அதற்கான கையேடுகள் தயாரித்தல் குறித்து கருத்தரங்குகள்

நடத்தப்படுகின்றன. இப்பணிகளில் பள்ளி ஆசிரியர்களும் ஈடுபடுத்தப்படுகின்றனர். கையேடுகள் தயாரித்தல், அச்சடித்தல், விநியோகித்தல், அவற்றின் சீராய்வு மற்றும் விழிப்புணர்வு, கல்வியில் சிறந்த பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல் ஆகியவையும் இந்த உட்பிரிவில் அடங்கும்.

**11.2** திட்ட நிர்வாக அமைப்பு கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

| | அலகு | வழிகாட்டுதல் |
|---|---|---|
| மாநில அளவில் | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்துடன் கூடிய திட்ட மேலாண்மை அலகு | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மை செயலாளர் அவர்களின் தலைமையில் திட்ட வழிகாட்டுக் குழு செயல்படும் |
| மாவட்ட அளவில் | மாவட்ட செயலாக்க அலுவலகம் | மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்ட அளவிலான திட்டத்தை செயல்படுத்தும் ஆலோசனைக் குழு |
| கிராம அளவில் | கிராம கூட்டு வள ஆதார மையம் | ஊராட்சித் துறை நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் மரபு சார்ந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளின் தலைமையில் கிராம கூட்டு வள ஆதார ஆலோசனைக் குழு |



**11.3** திட்ட நிதி ஒதுக்கீடு

நிறுவன வாரியாக நிதி ஒதுக்கீடு

| வ. எண். | நிறுவனம் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் கடன் | 132.32 | 47 |
| 2 | தமிழ் நாடு அரசு | 12.00 | 4 |
| 3 | வங்கி மற்றும் நுண்கடன் நிறுவனங்கள் | 100.61 | 35 |
| 4 | பயனாளிகளின் பங்களிப்பு | 38.76 | 14 |
| | மொத்த தொகை | 283.69 | 100 |

திட்டக் கூறு வாரியாக நிதி ஒதுக்கீடு

| வ .எண் | கூறுகள் | தொகை (ரூ.கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை | 41.16 | 14.51 |
| 2. | ஊரக நிதி மற்றும் இடர்ப்பாடு நீக்கும் வழிமுறைகள் | 159.50 | 56.23 |
| 3. | வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் | 66.31 | 23.37 |
| 4. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 1.80 | 0.63 |
| 5. | திட்ட மேலாண்மை | 14.92 | 5.26 |
| | மொத்தம் | 283.69 | 100 |

செயல்பாடு வாரியாக நிதி ஒதுக்கீடு

(ரூ. ஆயிரத்தில்)

| வ. எண் | கூறுகள் | தொகை (ரூ) | மொத்த தொகையில் சதவீதம் |
|---|---|---|---|
| அ. | கடலோர பகுதியில் வள ஆதார மேலாண்மை | | |
| 1. | சமுதாய வள திட்டமிடல் (திறன் மேம்பாடு) | 11,800 | |
| 2. | சமுதாயத்தின் பங்கு (கிராம கூட்டு வள ஆதார மையங்களை நிறுவுதல்) | 1,07,802 | 4 |
| 3. | மீன்வள ஆதார மேலாண்மை (கருத்துப்பட்டறை, ஆய்வு மற்றும் மேம்பட்ட மீன்வள மேலாண்மைக்கான முன்னோடி நிதி) | 27,500 | 1 |
| 4. | சமுதாய உள்கட்டமைப்பு நிதி | 2,64,500 | 9 |
| | கூடுதல் தொகை | 4,11,602 | 14 |
| ஆ. | ஊரக நிதி மற்றும் இடர்பாடு நீக்கும் வழிமுறைகள் | | |
| 1. | புதிய தொழில் முயற்சிக்கான மூலதன நிதி | 36,000 | 1 |
| 2. | வங்கிகள் மற்றும் நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல் (மாவட்ட அளவில் நுண்நிதி நிறுவனங்களை நிறுவுதல், வங்கி மற்றும் நுண்நிதி பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் கருத்துப்பட்டறை ஏற்பாடு செய்தல்) | 12,120 | – |
| 3. | இடர்பாடு தவிர்த்தல் (காப்பீடு ஆய்வு மற்றும் முன்னோடி திட்டத்தால் அளிக்கப்படும் பேரிடர் மேலாண்மைக்கான பங்கீடு மற்றும் சுய உதவிக் குழுக்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு காப்பீடு பயிற்சி அளித்தல்.) | 39,170 | 1 |
| 4. | பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துதல் மற்றும் புதுமையை புகுத்துதல் (பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்த நுண் நிறுவனங்களுக்கு நிதி அளித்தல், நுண்நிதி நிறுவனங்களுக்கு உதவி அளித்தல், ஆய்வு மற்றும் பட்டறிவுப் பயணம்) | 11,000 | – |
| 5. | தொடர் கூடுதல் கடன் நிதி (சுய உதவிக் குழுக்களுக்கு நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளால் வழங்கப்படும் கடன்) நுண் நிறுவனங்கள் மற்றும் மீன் விற்பனை சங்கங்கள் | 14,96,765 | 52 |
| | கூடுதல் தொகை | 15,95,055 | 56 |
| இ. | வேலைவாய்ப்புகள் உருவாக்குதல் மற்றும் திறன் பயிற்சி அளித்தல் | | |
| 1. | சுய உதவிக் குழுக்களுக்கு உதவி அளித்தல் (சுய உதவிக் குழுக்களுக்கு உதவி: வரைபடம், பயிற்சி, பொருட்கள் மற்றும் கூட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் அரசு சாரா தொண்டு நிறுவன ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல்) | 17,388 | 1 |
| 2. | வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியளித்தல் (பயிற்சி அளித்தல், வியாபார அபிவிருத்தி, சிறப்பான வணிக யுக்திக்கு பயிற்சி, புதிய தொழில் நுட்ப பயிற்சி, வணிக இணைப்பு கருத்துப் பட்டறை) | 36,970 | 1 |

| | | | |
|---|---|---|---|
| 3. | மீன் விற்பனை சங்கங்கள்<br>(கடன் சுமையிலிருந்து விடுவிக்க நிதி அளித்தல் மீன் விற்பனை கூடத்திற்கு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், பழுது பார்க்கும் பகுதி அமைத்தல், படகுத் துறை ஏற்படுத்துதல் மற்றும் நிர்வாக செலவினங்கள்) | 3,16,800 | 11 |
| 4. | சிறு தொழில் மேம்பாடு<br>(உப தொழில் கணக்கெடுப்பு, ஆய்வு, வணிக மேம்பாட்டு சேவை, தொழில் நுட்ப முன்னோடி, தொழில் நுட்ப உதவி, வெளிநாட்டு பயிற்றுவிப்பவர்கள், பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை) | 2,06,855 | 7 |
| 5. | வேலைவாய்ப்பு கல்வி பயிற்சிகள் அளித்தல்<br>(ஆய்வு, வாழ்வாதார பயிற்சிக்கு உதவி அளித்தல், மீன்பிடி தொழில் திறன் வளர்ப்பு ï பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை) | 85,075 | 3 |
| | கூடுதல் தொகை | 6,63,088 | 24 |



| | | | |
|---|---|---|---|
| ஈ. | சமுதாயம் சார்ந்த கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | | |
| 1. | கடல் பாதுகாப்பு மேம்படுத்துதல்<br>(ஒரு மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளல், செல் பேசி மானியம், பயிற்சி மற்றும் விளம்பரம்) | 3,000 | – |
| 2. | கடலோர பள்ளிகளுக்கு உதவியளித்தல்<br>(தேவையை ஆய்வு செய்தல், கருத்துப் பட்டறை, கல்வியளிக்கும் பயிற்சிக்கான கருவிகளை மேம்படுத்துதல், அச்சிடுதல், வெளியிடுதல்) | 15,000 | 1 |
| | கூடுதல் தொகை | 18,000 | 1 |
| உ. | திட்ட மேலாண்மை | | |
| 1. | திட்ட மேலாண்மை அலகு (வாகன வசதி, சாதனங்கள், ஊதியம், அலுவலக செலவினங்கள், பயிற்சி) | 25,739 | 1 |
| 2. | மாவட்ட அலுவலகங்கள் (வாகன வசதி, சாதனங்கள், ஊதியங்கள், அலுவலக செலவினங்கள், பயிற்சி) | 1,05,156 | 4 |
| 3. | திட்ட கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு<br>(வாகனங்கள், சாதனங்கள், ஊதியங்கள், தொழில் நுட்ப உதவி அளித்தல்) | 18,277 | 1 |
| | கூடுதல் தொகை | 1,49,172 | 5 |
| | மொத்தத் தொகை | 28,36,917 | 100 |

**31.07.2011** முடிய திட்டக் கூறுவாரியான செலவின விபரம் கீழ்வருமாறு

(ரூ. இலட்சத்தில்)

| திட்டக் கூறு | மொத்த திட்ட மதிப்பீடு | 2007 –08 முதல் 2010 – 11 வரை | | 01.04.2011 – 31.07.2011 | | மொத்த செலவினம் | மொத்த திட்ட மதிப்பீட்டிற்கான செலவின சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஒதுக்கீடு | செலவினம் | ஒதுக்கீடு | செலவினம் | | |
| கடலோர பகுதியின் வள ஆதார மேலாண்மை | 4116 | 3341 | 2645 | 1379 | 310 | 2955 | 72 |
| ஊரக நிதி மற்றும் இடர்பாடு தவிர்க்கும் வழிமுறைகள் | 983 | 446 | 62 | 487 | 17 | 79 | 8 |
| வேலை வாய்ப்பு உருவாக்குதல் மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சி | 6631 | 1648 | 350 | 1964 | 217 | 567 | 9 |
| சமுதாய அடிப்படையிலான கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை | 180 | 205 | 140 | 5 | 0 | 140 | 78 |
| திட்ட மேலாண்மை | 1492 | 778 | 770 | 383 | 118 | 888 | 60 |
| மொத்தம் | 13402 | 6418 | 396 | 4218 | 662 | 4629 | 35 |



**2010ï11**ம் ஆண்டு முடிய, **22** மீன் விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன (நாகப்பட்டினம்–**6**, திருவள்ளூர் – **5**, கன்னியாகுமரி ï **6**, கடலூர் – **4** மற்றும் விழுப்புரம் – **1**) **9** மீன் விற்பனை சங்கங்களைச் சேர்ந்த **442** மீனவர்களுக்கு கடன் நிவாரணமாக ரூ.**69.32** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. ஊரக நிதி மற்றும் இடர்பாடு தவிர்க்கும் விதிமுறைகளின் கீழ் **1,297** பயனாளிகளுக்கு சமுதாய பங்களிப்புடன் துயர் குறைப்பு நிதியுதவியாக ரூ.**62.00** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு மீனவர்கள் கூட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. **30,215** கடலோர பள்ளி மாணவர்களுக்கு ரூ.**20.25** இலட்சம் செலவில் பேரிடர் மேலாண்மை மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறித்த தகவல், கல்வி தொடர்பு புத்தகங்கள் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன.

**01.04.2011** முதல் **31.07.2011** முடிய உள்ள காலத்தில் ரூ.**479.46** இலட்சம் மதிப்பீட்டிலான **128** சமுதாய கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. **14,470** கிராம மக்களுக்கு காப்பீடு மற்றும் அதன்முக்கியத்துவம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. ரூ.**129.00** இலட்சம் மதிப்பீட்டில் **28** வாழ்வாதார முன்னேற்றத்திற்கு பரிட்சார்த்த முறையில் செயல்படுத்தப்படும் தொழில் மற்றும் **28** பண்ணை மற்றும் பண்ணை சாரா குறுந்தொழில் வளர்ச்சி திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒரு மீன் விற்பனைச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ரூ.**59.03**

இலட்சம் கடன் மீட்பு நிதி வழங்கப்பட்டு 238 மீனவர்கள் கடனிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

11.3 இந்த அரசு 2011–12ம் ஆண்டில் கீழ்க்குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

- கடலோர பகுதிகளின் வள ஆதார மேலாண்மையின் கீழ் 414 சமுதாய கட்டுமானப் பணிகளும் ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் ஆறு செயற்கை பவளப் பாறைகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.
- வங்கிக் கடனுடன் கூடிய சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக புதிய முயற்சிக்கான மூலதன நிதி (Venture Capital Fund) ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு விடுவிக்கப்படும்.
- ஆயுள் காப்பீடு மற்றும் துயர் குறைப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.127.00 இலட்சம் நிதி மதிப்பீட்டில் பயிற்சி மற்றும் சம்மந்தப்பட்ட பணிகள் மேற்கொள்ளப்படும்.
- 27 மீன் விற்பனைச் சங்கங்கள் தேவையான உட்கட்டமைப்புகளுடன் அமைக்கப்பட்டு மீனவர்களை கடனிலிருந்து மீட்க நிதி உதவி அளிக்கப்படும். திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு மீனவர் கூட்டமைப்பு அமைக்கப்படும்.



- கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு படகு எந்திரம் பழுது நீக்கும் நிலையம் (Out Board Motor Repair Centre) மற்றும் ஒரு படகு கட்டும் துறை (Boat Yard) முறையே ரூ. 10.00 இலட்சம் மற்றும் ரூ. 25.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.
- ரூ. 250.00 இலட்சம் செலவில் 2,500 இளைஞர்களுக்கு வாழ்க்கை கல்விப் பயிற்சி (Vocational Training) அளிக்கப்படும்.
- மேலும், இத்திட்டம் நிதி மேலாண்மை நீங்கலாக பாலினம், வறுமை மற்றும் அறிவு சார் மேலாண்மையை மையப்படுத்தி செயல்படுத்தப்பட உள்ளது.
- 2011 ï 12 ஆம் நிதி ஆண்டுக்கு ரூ. 42.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

12. வரவு செலவுத் திட்டம் 2011–12

2011–12–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.9,150.31 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.7,200.30 கோடி மற்றும் மூலதனச் செலவினம் ரூ.1,950.01 கோடி ஆகும்.

## 13. முடிவுரை

ஊரகப் பகுதிகளிலுள்ள ஏழை, எளிய மக்களின் துயர்களைக் களைவதில் இந்த அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவது இந்த அரசின் தலையாய நோக்கங்களில் ஒன்று. இந்த அரசால்தான் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994இல் இயற்றப்பட்டது. ஊரக கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், சுய உதவிக்குழு இயக்கத்தினை வலுப்படுத்தவும் இவ்வரசால் 2001–2006 வரையிலான காலத்தில், பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன. மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்துவதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தியதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்தது. இந்த அரசின் மிக முக்கியமான, இன்றியமையாத குறிக்கோளான "சுகாதாரம்" (Sanitation) கடந்த 5 ஆண்டுகளில் முழுமையாக கவனிப்பாரற்று, ஒதுக்கப்பட்டது. 'மழைநீர் சேகரிப்பு' மற்றும் 'சுகாதாரம்' ஆகியவை தற்போது தீவிரமாகவும் முழுமையாகவும் செயல்படுத்தப்படும்.

சுதந்திரம் அடைந்த 64 ஆண்டுகளாக பல திட்டங்களை செயல்படுத்திய பின்னரும் பல குக்கிராமங்களில் அடிப்படை வசதிகள் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. அனைத்து அடிப்படை வசதிகளையும் குக்கிராம அளவில் ஏற்படுத்தி அதன் மூலம்



ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. ஆனால், அனைத்து குக்கிராமங்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகள் அனைத்தையும் அமைத்துக் கொடுக்காமல் அரசின் இந்த எண்ணம் ஈடேறாது. இதை நன்கு உணர்ந்து அனைத்து குக்கிராமங்களிலும் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திட ஒரு புதிய திட்டமான 'தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்' (தாய் திட்டம்) என்ற புதிய முன்னோடி திட்டத்தினை, முதல்முறையாக இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஊரக வளர்ச்சியின் பரிமாணத்தையே மாற்றும் வகையில் செயல்படுத்த உள்ளது.

உணவு மற்றும் உடைக்கு அடுத்தபடியாக "வீடு" தான் மனிதனின் மிக அத்தியாவசியமான தேவையாகும். ஏற்கனவே குறிப்பிட்டபடி முந்தைய அரசால் செயல்படுத்தப்பட்ட வீட்டிற்கான அலகு தொகை மிகவும் குறைவாக இருந்ததைக் கருத்திற்கொண்டு இந்த அரசு தனித்தன்மையான "சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்" திட்டத்தினை செயல்படுத்தி ஊரகக் குடியிருப்புத் தேவையை உண்மையான வகையில் நிறைவேற்றும்.

கட்டுமானப் பொருட்கள் விலையேற்றம் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் ஊதிய உயர்வினை கருத்திற் கொண்டு, இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு வழங்கும் ரூ.33,750/– மற்றும் மாநில அரசின்

பங்குத் தொகையான ரூ.11,250/– உடன், மேலும் கூடுதலாக ரூ.55,000/–ஐ இந்த அரசு ஒதுக்கீடு செய்து ஒரு வீட்டிற்கான அலகுத் தொகையினை ரூ.1 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய அளவு ரூ.119/– என்ற போதிலும் சராசரி ஊதிய விகிதம் ரூ.90/– ஆக மட்டுமே தற்போது உள்ளது. தொழிலாளர்கள் முழுமையான ஊதியமான ரூ.119/– பெறுகின்ற வகையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும். ஒரு கிராம ஊராட்சியிலுள்ள பல்வேறு குக்கிராமங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பங்கேற்கும் வகையில் ''ஒரு ஊராட்சியில் ஒரு பணி'' என்கிற நிலையை மாற்றி ஒரே ஊராட்சியில் பல பணிகள் எடுக்கப்படும்.

எந்தவொரு வளர்ந்து வரும் சமுதாயமும் முழுமையான மற்றும் சீரான வளர்ச்சிக்கு, சிறார் மற்றும் இளையோர் நலத்தில் அக்கறை செலுத்தும். இதனைக் கருத்திற் கொண்டு இந்த அரசு 'ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத்திட்டம்' எனும் புதிய திட்டத்தை செயல்படுத்தும்.

மக்கள் பங்கேற்புடன் உருவாக்கப்படும் எந்த ஒரு சொத்தும்/கட்டமைப்பும் சிறந்த பராமரிப்பையும் பயன்பாட்டையும் உடையதாக இருக்கும். எனவேதான் மக்கள் பங்களிப்பினை ஊக்குவிக்கும் விதத்தில்



தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்து செயல்படுத்தப்பட்டது. மக்கள் பங்கேற்பினை மேலும் ஊக்குவிக்க ''தன்னிறைவுத் திட்டம்'' நிதி ஒதுக்கீடு இரட்டிப்பாக்கி செயல்படுத்தப்படவுள்ளது.

அதிகரித்து வரும் எரிசக்தி தேவையை கருத்திற்கொண்டு தனியாக சூரிய ஒளி சக்தி கொள்கையை இவ்வரசு அறிமுகப்படுத்தியுள்ளது. அதற்கேற்ப, ஊரகப் பகுதிகளில் அமைந்துள்ள தெருவிளக்குகள், சூரிய ஒளிசக்தி தெருவிளக்குகளாக மாற்றி அமைக்கப்படும். இது ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் நிதிச்சுமையை பெருமளவில் குறைத்திடும்.

மகளிர் திட்டம், ஏழை மற்றும் விளிம்பு நிலை மகளிரை சுய உதவிக் குழு இயக்கத்தின் அரவணைப்பில் கொண்டுவந்து பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கு வித்திட்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதில் அச்சாணியாகத் திகழ்ந்து வருகிறது. இதுவரை வளர்ச்சித் திட்டங்களில் விடுபட்ட திருநங்கைகள் மகளிர் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுவர். பயனாளிகளாக இருந்த சுய உதவிக் குழுக்கள் தற்பொழுது அரசு திட்டங்களை செயல்படுத்தும் நிலைக்கு உயர்ந்துள்ளனர். திறன் வளர்த்தல், சுழல் நிதி வழங்குதல், தொழில் மேம்பாட்டு பயிற்சி, பொருளாதார உதவி,

சந்தைபடுத்த உறுதுணை போன்ற அரசின் தொடர் முயற்சிகள் மற்றும் திடமான நடவடிக்கைகள் மூலம் மட்டுமே இப்பயணம் சாத்தியமானது. ஊராட்சி, வட்டார மற்றும் மாவட்ட அளவில் சுய உதவிக் குழுக்களை கூட்டமைப்புகளாக உருவாக்குதலே சுய உதவிக் குழு இயக்கம் நிலைத்த தன்மையை அடைய வழி வகுக்கும். இதைக் கருத்தில் கொண்டு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட்டு, வலுவூட்டப்பட்டு மற்றும் திறன் வளர்க்கப்பட்டு உறுப்பினர் சுய உதவிக் குழுக்களை வழி நடத்த ஏதுவாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இவ்வரசு, இந்த நிதியாண்டில் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்கள் விற்பனை மேம்பாட்டிற்காக தனித்தன்மையுடன் கூடிய வணிகச் சின்னம், பொருத்தமான பேக்கேஜிங் மற்றும் சந்தைப்படுத்துதலுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கும். இந்த நிதியாண்டு முதல் புதிதாக செயல்படுத்தப்பட உள்ள ‘‘தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்‘‘, மகளிர் திட்டத்தின் மூலம் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தி நிலைத்ததன்மை உடையதாக்கி ஊரக ஏழைகளின் ஒருமித்த முன்னேற்றத்திற்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும்.

கிராமப்புற ஏழை மக்களின் வறுமையை போக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தமிழ்நாடு அரசு



2005 ஆம் ஆண்டு மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, ‘‘புது வாழ்வு திட்டம்’’ துவக்கப்பட்டது. இத்திட்டம் மக்களை முன்நிறுத்தி அவர்களின் வளர்ச்சிக்கு அவர்களையே பொறுப்பாக்குதல் என்ற அணுகுமுறையின் அடிப்படையில் முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது. அதிகார பங்களிப்பு, வேலை உத்திரவாதத்துடன் கூடிய திறன் வளர்ப்பு, சுய வேலை வாய்ப்பு, வங்கிக்கடன் இணைப்பு, சந்தைப்படுத்துதல், தகவல் இடைவெளியை குறைத்தல், சமுதாய மூலதனம் உருவாக்குதல், பிற திட்டங்கள் மூலம் பலன்களை பெற்று தருதல், மாற்று திறனாளிகள் நலம் பேணுதல் என்ற முயற்சிகளின் அடிப்படையில் இலக்கு மக்கள் வறுமையின் பிடியில் இருந்து மீட்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் முழுமையான வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளின் மூலம் விடுபட்ட மிகவும் ஏழை, நலிவுற்றோர், மற்றும் திக்கற்றோரின் வாழ்க்கைத் தரத்தை மாற்றியமைத்து தன்னுடைய முத்திரையை பதித்துள்ளது. தொய்வின்றி முனைப்பாக எடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கைகள் நிலைத்த விளைவுகளை தோற்றுவித்ததின் காரணமாக இவ்வரசால் திட்ட விரிவாக்கமும் செய்யப்பட்டுள்ளது. இதுவரை பெற்ற திட்ட பலன்களை நிலைக்கச் செய்யும் வகையில் கிராம அளவிலான மற்றும் கிராமங்களுக்கு இடையேயான திட்ட ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கு ஒரு தளம் அமைத்திடவும், வாழ்வாதார முயற்சிகளை மேம்படுத்தவும்

சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும் இவ்வரசு இந்த ஆண்டு முதல் தனிக் கவனம் செலுத்தும்.

இந்த அரசானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் ஊரக ஏழைகளுக்கான வீட்டுவசதியை மேம்படுத்துவதற்கும் சுய உதவிக்குழு இயக்கத்தினை வலுப்படுத்தி, மகளிருக்கு போதிய அதிகாரமளிப்பதற்கும் தொலைநோக்குப் பார்வையுடன் திட்டமிட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமை மற்றும் தன்னிகரற்ற வழிகாட்டுதலின்படி ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொண்டு அதில் மகத்தான வெற்றி பெறும்.

கே.பி. முனுசாமி,
அமைச்சர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் ஊரக வளர்ச்சி